இலவச வெளியீடு: GERMANY , ENGLAND மார்கழி .Dec.2017

Free Circulation

# வெற்றிமணி

Vettimaniy

1950 (67)

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A




## "இது அவர்களுக்கு சின்னக்காசு தானே"

### தாயகத்தில் உதவித்திட்டங்கள் உதாசீனப்படுத்தப்படுகின்றனவா???

Dr IN




## யார் முதலில் பேசுவது.

அனைவருக்கும் எங்கள் இனிய நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்








# லட்சுமி... சமூகத்திற்கு என்ன சொல்ல வருகிறாள்?



லட்சுமி என்ற குறும்படம் சமீபத்தில் சமூகவலைதளங்களில் விவாத பொருளாகி வருகிறது. கணவன், குழந்தையை கவனித்து அனுப்பிவிட்டு வேலைக்குச் செல்லும் நடுத்தர வர்க்கப் பெண்ணான லட்சுமிக்கு ஒரு ஆணின் அறிமுகம் கிடைக்கிறது.

அந்த அறிமுகம் எப்படி பரிணாமிக்கிறது என்பதுதான் கதை. சேகரின் மனைவி லட்சுமிக்கு வாழ்க்கை கறுப்பு வெள்ளையாய் நகருகிறது. அன்றாட பணிகள், அலுவலக சுமைகள், கணவனின் உடல் தேவைகளை மட்டுமே பூர்த்தி செய்யும் லட்சுமியின் வாழ்க்கை கதிர் என்கிற ஆணின் மூலம் வண்ணமயமானதாக மாறுகிறது. கடைசியில் கதிரின் தேவையும் உடல் தேவைதான் என்பதை உணர்ந்து லட்சுமி விலக, வாழ்க்கை மீண்டும் கறுப்பு வெள்ளையாக மாறுவதாக படம் முடிகிறது.

பெண்ணின் மனநிலை ஒரு பெண்ணின் பாலியல் சுதந்திரம் குறித்துப் பேசும் படமென்பதால் பாராட்டுகளும் விமர்சனங்களும் குவிகின்றன. இது சர்வதேச அளவில் விருதுகளை குவித்துள்ளது. உலக நாடுகளில் நடந்த பட விழாக்களில் இதுவரை10க்கும் மேற்பட்ட விருதுகளை பெற்றுள்ளது.

சர்வதேச விருதுகள் தமிழில் முன்தினம் பார்த்தேனே படத்தின் மூலம் அறிமுகமானவர் லட்சுமி பிரியா. இவரது நடிப்பு இயல்பானதாக இருக்கிறது. லட்சுமி குறும்படம் சர்வதேச படவிழாக்களில் விருதுகளை குவித்து வருகிறது. லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்ற சினி பெஸ்ட் விழாவில், லக்ஷ்மி குறும்படம் அரை இறுதி சுற்றில் வெற்றி பெற்றது. இந்த படம் சமூக வலைத்தளங்களில் விவாதப்பொருளாகி வருகிறது.

கணவன் மனைவி இது ஒரு அருமையான திரைப்படம். கணவன், மனைவி உறவை புனிதமாக வெளிப்படுத்த வேண்டும் என்று கூறியுள்ளார் ஒரு வலைஞர். போகப் பொருளாக பார்ப்பவர்களுக்கு செருப்படி. பெண்ணை வெறும் ரத்தமும் சதையும் கொண்ட உடலாக பார்க்கும் ஆண்களுக்கு ஒரு செருப்படி என்று பல பதிவுகளை பதிவிட்டுள்ளார் வலைஞர்கள்.பாரதியின் கும்மியடிப்பாடலை பெண்களின் அடிமை விலங்கை உடைக்க பாடினார். ஆனால் இந்த குறும்படத்தில் வேறு எதற்கோ பயன்படுத்தியிருக்கிறார்களே என்று கேட்கவும் தொன்றுகிறதே.

இப்படத்தில் ஆண்ணுக்கு வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு உண்டு என்று தெரிந்தபின்தான் லட்சுமி படிதாண்ட வில்லை. கணவனைப்பழிவாங்கவும் செய்த செயல் அல்ல. அதற்கு முன்னதாகவே, கணவனின் பார்வை தன்னை ஒரு பெண்ணாகப் பாரர்க்காத தாபம் தான், கோபமாக மாறி அவளை மீறவைக்கின்றது. படத்தை யூரியுப்பில் சென்று பார்க்கலாம். அப்படி ஒன்றும் அப்பட்டமாக இல்லை. நமது பாலுமகேந்திரா 1964 எழுதிய ஒரு சிறுகதை இதனைவிட துணிச்சலாக ஒரு கருத்தைபதிவு செய்துள்ளது.



**வெற்றிமணி பதித்த தடம்!**

எழுத்தாளர் திரு.வி.சபேசன்.



**அமைதியான ஒரு ஆரவாரம்.!**

கவிஞர் பொ.புத்திசிகாமணி

வெற்றிமணி வழங்கிய விருதும் விருந்தும் (16.09.2017) நிகழ்வில் எழுத்தாளர் விமர்சகர் திரு வி.சபேசன் அவர்கள் ஆற்றிய உரை.

நாங்கள் 1995 ஆண்டு என்று நினைக்கின்றேன். அப்போது நாங்கள் ஒரு சஞ்சிகை நடத்தினோம். அச்சஞ்சிகையில் வெற்றிமணி பற்றி நான் "இது ஒரு விளம்பரப்பத்திரிகை" என்று நான் எழுதியிருந்தேன் உண்மையில் கிண்டலாகத்தான் எழுதியிருந்தேன். தேவை இல்லாமல் அவரை வம்பிற்கு இழுத்திருந்தேன். ஆனால் இன்று பார்க்கின்றபொழுது அவர் அன்று சிந்தித்ததுதான் சரியான பாதை என்று தெரிகிறது. அவர் சரியாகத்தான் தடம் போட்டிருக்கின்றார்.

இன்று அது ஒரு வெற்றிகரமான பத்திரிகையாக,எல்லாப் பத்திரிகை களும், எல்லா சஞ்சிகைகளும் அவருடைய வழியைப்பின் பின் பற்று கின்ற முறையிலே, மிச்சிறப்பாகச் செயற்பட்டுக்கொண்டு இருக்கின்றது. வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது.

அன்றைக்கு என்னுடைய கணிப்பு தவறு, என்று உணர்கின்றவரையிலும், இன்று வெற்றிமணி மேடையிலே நான் நிற்பது பெருமை என்று நான் கருதுகின்ற வகையிலும்.வெற்றிமணி திகழ்கிறது என்பதைச் சொல்ல வேண்டும். சிவத்தமிழ் பற்றி கூறுகையில்...

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன் தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன் உன்னாமம்என் னாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய் உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே

இது அப்பர் பாடிய பாடல், இன்றைக்கு தூபம் இருக்கின்றது, சலம், இருக்கின்றது, பூவிருக்கின்றது, தமிழோடு இசைபாடல் தள்ளி இருக்கின்றது. நான் வைக்கின்ற கோரிக்கை இந்த மேடையிலே ஒன்றுதான். சம்மந்தர் பாடிய எல்லா பதிகத்திலும் தமிழ் இருக்கும். இன்றைக்கு அந்த தமிழ் எங்கே? என்ற கேள்வியோடு இதற்கான கோரிக்கையை சிவத்தமிழ் முன்வைக்கின்றேன் என்று குறிப்பிட்டார்.

## அமைதியான ஒரு ஆரவாரம்.!

**கவிஞர்.பொ.புத்திசிகாமணி**

வெற்றி மணியின் "விருதும் விருந்தும்" நிகழ்வு.! (16.09.2017)குறித்த நேரத்தில் விழா ஆரம்பமாகியது. முதலாவது பாராட்டு. இதற்கு முக்கிய காரணம். பார்வையாளர்கள் குறித்த நேரத்தில் வருகை தராமல் இருப்பதேயாகும். இந்நிகழ்வு இதனை சற்று மாற்றியிருந்தது இது. வெற்றி மணி ஆசிரியர் மீது வாசகர்கள் கொண்டுள்ள அன்பையும் அபிமானத்தையும் எடுத்துக்காட்டியது.

வெற்றிமணியின் சிறந்த முயற்சிக்கு இது தேவையே. 250 இதழ்கள் வெளிவருவது சாதாரண காரியமா? என்ன? இருபது வருடங்கள் இரவு வேலை செய்த இந்த மனிதரால் எப்படி இதுவெல்லாம் சாத்தியமாச்சு என்று பலர் முணுமுணுத்ததை நானும் கேட்டேன். இதையேதான் எனக்குள்ளும் நானும் கேட்டது. எனக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. வாழ்த்த எனக்குக்கிடைத்த சந்தர்ப்பம். இதை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டேன். 92ம் ஆண்டு கொக்சவலாண்ட் தமிழர் ஒன்றியத்தலைவராக் இருந்த காலத்தில் இருந்தே இவரை நானறிவேன்.எங்கள் பாடசாலை களில் நடந்த ஓவியப்போட்டிக்கு நடுவராக இவரை அழைத்திருந்தோம். அவரது அதீத உழைப்பும் முயற்சியும் எதிர்காலத்தில் அவர்நோக்கிச் செல்லும் உச்சத்தைத் தொடும் என்று நம்பலாம். நல்ல விருந்தும் எழுத்தாளருக்கு அவர் வழங்கிய விருந்தும் இன்னும் உலாவிக் கொண்டே இருக்கிறது. இருக்கும்.

அனைவருக்கும் எங்கள் இனிய நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்

திருக்கணித ஜோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி





சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450



செல்வராஜா
கோல்டு ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்
Selvaraja Gold House
அனைவருக்கும் எங்கள் இனிய நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்
15 ம் ஆண்டில் கால்பதிக்கும் நாம்
புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள சீட்டுத் திட்டத்தில் இணைந்து நீங்கள் ஓர் அதிஷ்டசாலியாகலாம்.
அனைத்து ஆடைகளும் மலிவு விலையில்...
162b, Mitcham Road London SW17 9NJ
Tel : 020 8767 3795 | 07825 005 269



வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
—கவிஞர்.வி.க

ஓசை 255



ஆரம்பம்:1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம் )

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A.



Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333

e-mail: vettimaniy@hotmail.com


"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)
Sanje:07824 61 83 83

Vettimaniy Ltd
Company No: 8876276


# "இது அவர்களுக்கு சின்னக்காசு தானே"

## தாயகத்தில் புலம்பெயர் நாடுகளில் வாழும் மக்களின் உதவித்திட்டங்கள் உதாசீனப்படுத்தப்படுகின்றனவா???

**அனித்தா பூஷன்**



இன்று எம் தாயகத்தில் பல்வேறு விதமான உதவித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக் கின்றன. இந்த உதவிகளை அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் மட்டுமல்லாமல் புலம்பெயர் நாடுகளில் வாழும் மக்களும் தனித்தனியாகவும் உதவிகளை செய்கின்றனர். ஆயினும் இவ்வாறு வழங்கப்படும் உதவிகள் அம்மக்களால் சிறந்த முறையில் பயன்படுத்தப்படுகின்றதா என்பதுதான் பெரும்பாலும் புலம்பெயர் நாடுகளிலுள்ள மக்களின் கேள்வியாக உள்ளது. இதிலும் "வாழ்வாதாரத்திற்கான உதவி செய்தேன். ஆனாலும் அடுத்தமுறை செல்லும்போதும் அக்குடும்பத்திடம் எந்தவொரு முன்னேற்றமும் இல்லை" என தமது உதவி வீணடிக்கப்பட்டுவிட்டது என எண்ணுவோரும் உள்ளனர்.

முக்கியமாக செய்யப்படும் உதவியானது சரியான இடத்தை சென்றடைதல், அதிலும் முழுத்தொகையும் பாதிக்கப்பட்டவருக்கு சேருதல் என்பதும் பலரின் கேள்விக்குறியாகின்றது. ஏனெனில் உதவித்திட்டங்கள் ஏதாவது நிறுவனத்திற்கூடாக வழங்குமிடத்து அதன் முழுப்பயனும் பாதிக்கப்பட்டவருக்கு சென்றடைகின்றதா என தெரிவதில்லை. நிறுவனத்தை நடத்துபவர்தான் பொருளாதாரரீதியாக முன்னேறிக்கொண்டிருக்கின்றார் என பலர் குறைப்படுவதையும் காணமுடியும். இது பல பெரிய நிறுவனங்கள் முதல் சிறிய நிறுவனங்கள் வரை அனைத்திற்கும் பொருந்தும். ஏனெனில் இன்று ஐரோப்பாவில் வசிக்கும் புலம்பெயர் தமிழர்கள் மட்டுமன்றி, ஐரோப்பியர்களும் சிந்திக்கும் விடயமாகும். அதாவது எம்போன்ற நாடுகளுக்கு பாதிக்கப்பட்டவர் களுக்காக அனுப்பப்படும் நிதியானது முழுமையாக அவர்களுக்கு கிடைப்பதில்லை. ஆதனால் பலர் இவ்வாறான உதவித்திட்டங்கள் செய்வதற்கு இயலுமை இருந்தும் இவ்வாறான காரணத்தால் உதவிசெய்ய விரும்புவதுமில்லை.

உண்மையில் இன்றைய நிலையில் எமது தாயகத்தில் பல்வேறுபட்ட பிரச்சினைகளுடன், தேவைகளுடன் பலமக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கே பலர் மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர். உதாரணமாக இரண்டு,மூன்று நாட்கள் தொடர்மழை பெய்தாலே உணவு, உறக்கமின்றி தவிப்போர் இன்னமும் இருந்து கொண்டே உள்ளனர். இவற்றின் அடிப்படையில் பார்க்குமிடத்து முக்கியமாக செய்யப்படும் உதவித்திட்டங்கள் மக்களின் தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்வதாக அமைகின்றதா? என்பது கேள்விக்குறிதான்.

எடுத்துக்காட்டாக கல்விக்கான உதவித்திட்டங்களில் ஒன்றாக சில நிறுவனங்களின் ஊடாக மாணவர் கல்வித் தொகையாக ஒரு சிறுதொகைப்பணம் வறிய குடும்பத் திலுள்ள பிள்ளைக்கு வழங்கப்படுவது வழக்கம். ஆனால் அது அப்பிள்ளையின் கல்விக்குத்தான் செலவழிக்கப் படுகின்றதா? என்று பார்த்தால் சில குடும்பங்களில் அவ்வாறில்லை. ஏனெனில் அந்த பணத்தை வைத்துதான் அன்றைய தினம் அந்த தாய் எல்லாப்பிள்ளைகளுக்கும் சமைத்துப்போட வேண்டிய நிலையிலோ அன்றேல் வீட்டிலுள்ள குழந்தைக்கு பால்மா வாங்கவேண்டிய நிலையிலோ இருப்பார். இவ்வாறான சூழ்நிலையில் மனிதாபிமான அடிப்படையில் பார்க்குமிடத்து இவ் உதவி வீணடிக்கப்பட்டுவிட்டது எனவும் நாம் கூறமுடியாது. அதாவது நிரந்தர வருமானம் இல்லாத, உழைக்கும் வலுவுள்ள ஒருவரை இழந்த குடுப்பங்களில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படுகின்றது. அவர்களுக்கென்று வருமானம் ஈட்டக்கூடிய வாழ்வாதார திட்டங்கள் நீண்டகால நிலைத்து நிற்கக்கூடிய திட்டங்களாக இருக்க வேண்டும்.

உதாரணமாக போரினால் கணவனை இழந்த பெண்களை தலைமைத்துவமாகக்கொண்ட குடும்த்தினருக்கு உதவி யாகதையல் இயந்திரம் ஒருகாலகட்டத்தில் வழங்கப் பட்டது. இதன் மூலம் அவர்கள் வருமானம் ஈட்டலாம் என்ற அடிப்படையிலேயே இவ் உதவி வழங்கப்பட்டது. இதில் என்ன முக்கிய விடயமெனில் இவ்வாறு தையல் இயந்திரம் வழங்கப்பட்டவர்களில் பல பெண்களுக்கு தையலே தெரியாது. இவ்வாறு பல உதவித்திட்டங்கள் பொருத்தப்பாடின்றி வழங்கப் படுவதாலும் அவை விரயமாக்கப்படுகின்றன.

அத்துடன் இன்னொரு கோணத்தில் அணுகுவோமாயின், இன்று பலர் மற்றவரை நம்பியே வாழ்க்கை நடத்தும் மனப்பாங்கிற்கு வந்துவிட்டனர். அதாவது சுயமுயற்சியை தள்ளி வைத்து விட்டனர். ஒரே சமயத்தில் பலரிடம் உதவிகளை பெறுவோரும் உள்ளனர். இதிலும் புலம்பெயர் நாடுகளிலுள்ளவர்கள் உதவிசெய்யுமிடத்து அதனை வீண்விரயம் செய்வோரும் உள்ளனர். சிலர் தமது சொந்த முயற்சியையும் கைவிட்டுவிடுகின்றனர்.

அதாவது வெளிநாடு என்பதை சொர்க்கமாகவே எம்மவர்கள் பார்த்துக்கொண்டிருக்கின்றனர். வெளிநாட்டில் பணம் என்பது கஷ்டப்படாமல் கிடைக்கும் ஒன்றாகவே அங்குள்ள மக்கள் பார்க்கின்றனர். அதனையே இங்குள்ளவர்களும் தக்க வைத்துக்கொள்கின்றனர்.

அதனால்தான் புல்ம்பெயர் மக்கள் உதவி செய்யுமிடத்து, சிலர் "இது அவர்களுக்கு சின்னக்காசு தானே"என அதன் அருமை தெரியாமல் வீண் செலவு செய்கின்றனர். அதனைவிட ஏதாவது தொழிற்திட்டங்களுக்கான உப கரணங்கள் வாங்கிக் கொடுத்தாலும், சிலர் பெருந் தொகைப்பணத்திற்கு ஆசைப்பட்டு இந்த உபகரணங் களையே விற்றுவிட்டு, பின் வேறொருவரின் உதவியை நாடுவர்.

தொடர்ச்சி 4ம் பக்கம்






# யார் முதலில் பேசுவது.

நெடுந்தீவு முகிலன்.

## ஆதலால் காதலை வெறுக்கின்றேன்.

இனி ஒரு துன்பம் என்னை தாக்காதவாறு
என்னை நான் பார்த்து கொள்கின்றேன்.

மீண்டும் அன்பை யாருக்கும் கொடுக்காமல்
என்னை நானே நேசிக்க தொடங்குகிறேன்.

எங்கேனும் பயணம் போனால்
தனி இருக்கை தேடுகின்றேன்.

என்னோடு கை கோர்த்து நடக்க
காற்றை மட்டுமே அனுமதிக்கின்றேன்.

என் தோள்கள் சாய்ந்து தூங்க
தலையணைகள் வாங்கி கொள்கின்றேன்.

கடவுச்சொல் இல்லாமல்
தொலை பேசியை பயன்படுத்துகின்றேன்.

சோக கீதம் இசைக்காமல்
குத்து பாட்டுக்கு ஆடுகின்றேன்.

கடந்த நாட்களில் அழுது கண்ணீர் முடிந்ததால்
இப்போது புன்னகையிலே திழைக்கின்றேன்.

எவரேனும் என்னை பின் தொடர்ந்தால்
நானே தொலைந்து போகின்றேன்.

செத்து செத்து பிழைக்க எனக்கு
தெரியவில்லை - ஆதலால்
காதலையே வெறுக்கின்றேன்.

மனிதர்களுக்கு மனக் கசப்பினால் மட்டுமே எல்லா
பிரச்சனைகளும் ஏற்படுவதில்லை...

சிலவேளை சகிப்பு தன்மை குறையும் போது
இரத்தக் கொதிப்பினால் வார்த்தைகளை விட கூடும்.

மன்னிப்பு கேட்க யோசிக்கும் போது
செய்த தவறே மறந்து போயிருக்கும்.

இதுவரை ஏன் பேசாமலிருந்தோம் என்பதின்
காரணத்தை அடிக்கடி மறந்துவிடுகிறோம்

சிறு விவாதங்களே உறவில் பெரிய அளவில்
விரிசலை ஏற்படுத்தி விடுகிறது.

கடுமையான வார்த்தைகளால் ஒருவரை
ஒருவர் திட்டிக்கொள்வது பழக்கப்படுகிறது.

எதுவாக இருந்தாலும் பேசி தீர்வு காணாததால்
எல்லாத்துக்குமே சங்கட பட வேண்டியிருக்கிறது.

கோபமாக சத்தம் போடும் நேரத்தில் பெரும்பாலும்
மற்றவர் அமைதியாகவும் இருப்பதில்லை..

முன்னர் நிகழ்ந்த விஷயங்களைப் பற்றியே
பேசி எரிச்சலூட்டிக்கொண்டிருப்பது.

வாழ்க்கையை அழகாக மாற்றுவதே புரிதல் தான்
ஆனால் அதற்கு விட்டு கொடுப்பு மிக அவசியமே..

சந்தோசமான நாட்களையே நரகமாக
மாற்றும் சக்தி சந்தேகத்துக்கே உண்டு.

கலந்து பேசி தெளிவுபடுத்திக் கொள்ள
எதற்கு கால அவகாசம் தேவைப்படுகிறதோ..?

ஆளுக்கொரு விஷயத்தை மனசுக்குள்
மட்டுமே நினைத்திருந்தால் முடிவு வாரது.

சண்டை போடும் போது அரைவணைப்பின்
முக்கியத்துவம் தெரியாது.
விட்டு விலகப்போகிறோம் என்றால்
அதை விட ஒரு துன்பம் இருக்காது.

ஒருவாறு எல்லாவற்றையும் மறந்து பேசலாம்
என்றால் - யார் முதலில் பேசுவது என்பதிலே
புது பிரச்சனையே தோன்றி விடுகிறது.

## "இது அவர்களுக்கு சின்னக்காசு தானே"

03ம் பக்கத் தொடர்ச்சி

புலம்பெயர்நாடுகளிலிருந்து செய்யப்படும் சில உதவி களுக்கு சரியான பின்னூட்டல்கள், பதில்களும் அங்கிருந்து கிடைப்பதில்லை. சில நிறுவனத்தினூடாக கொடுக்கப்பட்ட பணத்திற்கு என்ன உதவி செய்யப்பட்டது என்பது கூட தெரிவிக்கப்படுவதில்லை.

இவ்வாறான பிரச்சினைகளால் நேர்மையாக செயற்பட்டுவரும் பல நிறுவனங்களும் சிக்கல்களுக்கு உள்ளாகின்றன. அண்மையில் கூட புலம்பெயர்ந்த ஒருவரால் தாயகத்தில் ஓர் சிறுவர் இல்லத்திற்கு ஒரு வேளை விசேட மதியஉணவு வழங்கப்பட்டது. இதற்கான புகைப்படங்கள் சமூகவலைத்தளத்தில் பகிரப்பட்டன. ஆனால் அதில் பிள்ளைகளுக்கு உணவு பரிமாறப்பட்டபோதே ஐஸ்கிறீமும் சேர்த்து பரிமாறப்பட்டிருந்ததை காண முடிந்தது.

அப்பிள்ளைகள் அந்த உணவை சாப்பிட்டு முடித்து அந்த ஐஸ்கிறீமை தண்ணீராகத்தான் அருந்தியிருக்க முடியும். உதவி செய்தோருக்கு தெரியப்படுத்த வேண்டும் என்ற நோக்கில்தான் இவ்வாறு செய்திருப்பர். அதாவது நேர்மையாக செயற்படா தவர்களாலேயே இவ்வாறான நிலைமைகள் ஏற்படு கின்றது.






அனைவருக்கும் எங்கள் நெஞ்சம் நிறைந்த நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்


TKS
BEST FOODS
23rd Dec
MEGA
Sale
All in ONE day Sale
X-Mas Sale
வாடிக்கையாளர் நண்பர்களுக்கு!
நத்தார் மற்றும் புதுவருட வாழ்த்துகள்!
Coustomers, Friends!
Happy Christmas & New Year!
Frohe Weihnachten & einen guten Rutsch!
2018
+49 231 950 468 83 | +49 231 950 468 82
+49 151 253 004 00
info@tks-bestfoods.de | www.tks-bestfoods.de
tksbestfoods | Rheinische Str. 79, 44137 Dortmund

# கூகிளுக்குப் பின்னால் இருக்கும் மர்மம் என்ன?

Dr.நிரோஷனின்
அதிசய உலகம்




மெக்சிக்கோவின் வெளிநாட்டு அமைச்சர் யார்? சூரியனுக்கும் செவ்வாய் கிரகத்திற்கும் இடையே உள்ள தூரம் எவ்வளவு? சிக்கன் கொத்து எப்படிச் செய்வது? இந்தக் கேள்விகளை உங்களிடம் கேட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்? அட, நீங்கள் மட்டுமில்லை, நான் உட்பட இந்த உலகில் வாழும் பலர் உடனடியாகச் செய்வது ஒன்றேவொன்று தான். இந்த கேள்விகளை கூகிள் (google) பண்ணிப் பார்ப்பார்கள். கூகிளுக்குத் தெரியாதது ஒன்றுமே இல்லை என்கிற ஒரு எண்ணம் எங்கள் அனைவருக்கும் மிக ஆழமாகப் பதிந்திருக்கிறது. கூகிள் இதை எல்லாம் எப்படிக் கண்டுபிடிக்கின்றது என்பதைப் பற்றி உங்களிடம் பேசவரவில்லை, ஆனால் அதை விட சுவாரசியமான கேள்வி எது தெரியுமா? எப்போது பார்த்தாலும் கூகிள் என்று சொல்கிறோமே, ஆனால் கூகிள் நிறுவனம், தமது இணையத் தேடு பொறிக்கு (internet search engine) ஏன் கூகிள் என்று பெயர் வைத்தார்கள்? இதற்குப் பின்னால் இருக்கும் சுவாரசியமான உண்மையைத் தெரியவிரும்பினால், கண்டிப்பாகத் தொடர்ந்து படியுங்கள்.

கூகிள் (Google) என்கிற பெயரைக் கேட்டதும் உங்களுக்கு மனதில் தோன்றுவது என்ன? நிச்சயமாக இன்றைய இணையத்தை மட்டும் இல்லாமல் பல்வேறு துறைகளிலும் கலக்கிக்கொண்டு இருக்கும் மாபெரும் நிறுவனத்தைத் தானே நினைப்பீர்கள்? ஆனால் அந்த Google என்கிற பெயருக்குப் பின்னால் ஒரு அர்த்தம் உள்ளது என்பது உங்களுக்குத் தெரியுமா? உண்மையில் அந்தப் பெயர் கூகொள் (Googol) என்கிற சொல்லை அடிப்படையாக வைத்துத் தான் உருவாக்கப்பட்டது. கூகொள் என்பது ஒரு எண்ணைக் குறிக்கின்றது, அதுவும் சும்மா எண் இல்லை. ஒரு ஒன்றிற்குப் பக்கத்தில் 100 பூஜியங்கள் உள்ள எண்ணை Googol என்று கூறுவார்கள். என்ன புரியவில்லையா? இதோ பாருங்கள் இது தான் ஒரு Googol:

10,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000,000

எனவே, கூகிள் நிறுவனம் இந்தப் பெயருடன் தமது google.com இணையத்தளத்துடன் கற்பனையே பண்ண முடியாத அளவிற்கு ஏராளமான தகவல்களையும் இணையத்தளங்களையும் கண்டுபிடிக்க முடியும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்பினார்கள். அவர்கள் விரும்பியது இன்று பலித்தும் விட்டது!


Googol ஒரு மாபெரும் எண் என்பது உங்களுக்குத் தெரிந்து விட்டது. ஆனால் இதை விட இன்னும் ஒரு பெரிய எண்ணுக்கும் பெயர் வைத்துள்ளார்கள். அந்தப் பிரம்மாண்டமான எண்ணை Googolplex என்று அழைப்பார்கள். ஒரு Googolplex என்றால் ஒன்றிற்குப் பக்கத்தில் Googol பூஜியங்கள் இருப்பதைக் கூறுவார்கள். என்ன குழப்பமாக இருக்கிறதா? பரவாயில்லை, இந்த எண்ணை ஒருவராலும் கற்பனை பண்ணவோ, எழுதவோ முடியாது. அது ஏனென்றால் ஒரு Googolplex எழுதுவதற்கு நமது பிரபஞ்சத்தில் உள்ள இடமே போதாது. இது ஆச்சரியமாக இல்லையா?

## சீனப் பெருஞ்சுவரும் கட்டுக்கதையும்

மனிதர்கள் இன்று வரை மாபெரும் அதிசயப் படைப்புகளை உருவாக்கியுள்ளனர். அதில் சீனப் பெருஞ்சுவரும் கண்டிப்பாக ஒன்றானது என்பதில் எந்தவிதச் சந்தேகமும் இல்லை. ஆனால் பலரால் நம்பப் படும் ஒரு தவறான தகவல், என்ன தெரியுமா? மனிதர்கள் உருவாக்கியதில் அந்தச் சீனப் பெருஞ்சுவரை மட்டும் தான் விண்வெளியில் இருந்தும் பார்க்கமுடியும் என்கின்ற கட்டுக்கதை தான்.

உண்மை சொல்லப்போனால், மிக நுணுக்கமான காமெராவைக் கொண்டே, நாம் பார்ப்பது சீனப் பெருஞ்சுவர் தானா என்பதைத் தீர்மானிப்பதே கஷ்டம். அப்படி இருக்க, பரந்த பூமியில் ஒரு மிகவும் சிறிய பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டு இருக்கும் சீனப் பெருஞ்சுவரைக் காண முடியும் என்பது முற்றிலும் சாத்தியம் இல்லாததாகும்.

இந்தக் கட்டுக்கதை விண்வெளியைப் பற்றிய ஆராய்ச்சிகள் தொடங்கும் காலத்திற்கு முன்பில் இருந்தே பரப்பப்பட்டு வருகின்றது. பல கிலோ மீட்டர்களுக்கு பரவி நின்று கொண்டு இருக்கும் சீனப் பெருஞ்சுவரின் பிரம்மாண்டமும், மக்கள் இந்தக் கட்டுக்கதையை ஏற்றுக் கொண்டதற்கான காரணமாக இருக்கலாம். அது சரி, சீனப்பெருஞ்சுவரை ஏன் விண்வெளியில் இருந்து பார்க்கமுடியாது என்று உங்களுக்குத் தெரியுமா? இந்தச் சுவர் அதன் சுற்றுவட்டாரங்களில் இருந்து எடுக்கப்பட்ட கற்பாறைகள் கொண்டு கட்டப்பட்டதால், அது கட்டப்பட்ட கற்களின் வண்ணத்தில் தான் இருக்கிறது. அதாவது அந்தச் சுவரின் வண்ணமும், அதன் சூழலின் வண்ணமும் ஒரே மாதிரி இருப்பதால், அதனை விண்வெளியில் இருந்து அடையாளம் காண்பது என்பது மிகவும் கஷ்டமான ஒரு விஷயம் ஆகும். எனவே, விண்வெளியில் இருந்து சீனச் சுவரைக் காண முடியும் என்பது வெறும் கட்டுக்கதையாக மட்டுமே மக்களின் இடையே வாழ்ந்து வரும்!



சரி, சீனப்பெருஞ்சுவரை விண்வெளியிலிருந்து பார்க்க முடியாது என்பது தெரிய வந்துவிட்டது. அப்படி என்றால் மனிதர்கள் படைத்த ஒன்றையும் விண்வெளியிலிருந்து காணமுடியாது என்றா அர்த்தம்? இல்லைவே இல்லை! விண்வெளியிலிருந்து மனிதனால் காண முடிகின்ற, மனிதனால் உருவாக்கப்பட்ட மூன்று படைப்புக்களைப் பார்க்கலாம். அவை தான் பெரிய நெடுஞ்சாலைகள், அணைகள் மற்றும் நகரங்கள் ஆகும். அதுவும் இவை அனைத்தும் வெளிச்சத்தில் மூழ்கி இருக்கும் நேரத்தில் மட்டும் தான் காண முடியும் என்பதே உண்மை.

நண்பர்களே, இனி நீங்கள் கூறுங்கள். இந்தக் கட்டுக்கதையை முன்பு அறிந்திருக்கின்றீர்களா? இதற்குரிய பதிலை மட்டும் இல்லை, எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com/scinirosh) அறியத் தாருங்கள்!

SANGEETHA JEWELLERS
"Specialist in 22 ct Gold Jewellery UK"
2018
அனைவருக்கும் எங்கள் இனிய நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்
MONTHLY SEETU FACILITIES
ONSITE WORK SHOP REPAIRS AND ALL OTHER NEEDS
EXCHANGE YOUR OLD FOR NEW JEWELLERY
Tel:020 8902 9246
FOLLOW US ON . I INSTAGRAM I FACEBOOK
#SANGEETHA JEWELLERS
"PRICE GURANTEE ON THE DAY OF PURCHASE"
190 EALING ROAD,ALPERTON,WEMBLEY,HA0 4QD - U.K
"TERMS AND CONDITION APPLY"
சங்கீதா நகையகம்






## என் பாதை ! இசைப் பாதை !

### சர்வ தேசத்துக்கும் முன்னோடியான கன்னித் தமிழை,சர்வதேசத் தரத்தில் உருவாக்கும் முயற்சி !

### தேசி என்டர்டெயின்மென்ட் நிறுவனம் அமெரிக்கா

தனிப்பாடல்களுக்கு ஒரு சிறப்பு உண்டு. எந்த விதமான கட்டுப்பாடுகளும் இல்லாமல் சுதந்திரமாய் இயங்க முடியும். காதலையோ, நட்பையோ, சமூகத்தையோ மையப்படுத்தி எப்படி வேண்டுமானாலும் அமைந்து விட முடியும். இன்றைய நவீன யுகத்தில் அத்தகைய தனிப்பாடல்கள் ஏராளமாய் வந்து கொண்டிருக்கின்றன !

அந்தத் தனிப்பாடல் தளத்தில் தனது முத்திரையைப் பதித்து பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக இசைப்பயணம் செய்து கொண்டிருப்பவர் தான் சஞ்சே சிவா அவர்கள். என் கடன் இசை செய்து கிடப்பதே என்பதே அவரது தாரக மந்திரம். சர்வ நேரமும் வலை செய்து கொண்டிருக்கும் ஒரு சிலந்தியைப் போல, எந்தப் பிரதிபலனும் பாராமல் இசைநெய்து கொண்டிருக்கிறார் இவர். இசைமீது அவருக்கு அப்படி ஒரு மயக்கம். இசை மீது அவருக்கு அப்படி ஒரு தீராக் காதல். இசைமீது அவருக்கு அப்படி ஒரு பெருந்தீனி மோகம்.

பூமிக் காற்றை முதன் முதலில் நுரையீரல்களில் நிரப்பிய முதல் அழுகையுடன் அவரது இசைப்பயணம் துவங்கியிருக்க வேண்டும். காரணம், சிறுவயது முதலே இசையின் இலைகளில் நாட்டியமாடும் ஒரு வண்ணத்துப்பூச்சியாய் மாறிப் போனார் ! இயற்கையின் அழகிலும், உறவுகளின் அன்பிலும், நண்பர்களின் நட்பிலும், ஏன் எதிரிகளின் வெறுப்பிலும் கூட இசையை மட்டுமே கண்டவர் அவர். இசையின்றி ஒரு அணுவும் அசையாது என புது மொழி சொன்னார் ! இசையின்றி அமையாது உலகு என்பதை தனது வாழ்க்கைக் கோட்பாடாக்கிக் கொண்டார்.

அவருடைய இசை ஆர்வம் காலம் செல்லச் செல்ல ஆலமரமாய் வளர்ந்தது. விழுதுகள் இறக்கி விழுந்து விடாமல் நின்றது. கலாச்சாரத்தின் வேர்கள் உறிஞ்சிய வாழ்க்கை அனுபவங்கள் அவரிடம் சரிகமபதனியாக வெளிவந்தன. காற்றின் முதல் துளியைக் கண்டு பிடிக்க முடியுமா ? கடலின் முதல் துளி எங்கே இருக்கிறது ? கதிரவனின் முதல் வெளிச்சம் எந்தப் புள்ளியில் விழுந்தது ? கண்டுபிடிக்க முடியாத இந்த கேள்விகளைப் போன்றது தான் அவருடைய இசைப்பயணத்தின் ரிஷி மூலமும்.

பால்யம் அவரது இசைக்கு பிள்ளையார் சுழி போட்டது. இளமை அவரது இசையை பாடலாகப் பதிவு செய்தது. பார்த்துக் கொண்டிருந்த நல்ல வேலையை இசைக்காக உதறிவிட்டு, பணம் குறைவாகவும் நேரம் அதிகமாகவும் கிடைக்கும் வேலையில் சேர்ந்தார் ! இசை அவரை இம்சித்தது ! அதை அவர் இம்சிக்கவில்லை ! பாடல்கள் பிரவாகமெடுக்க ஆரம்பித்தன.

பால்குடி மறந்த கையோடு என்னும் இசை அல்பம் 2000 ஆண்டு யேர்மனியில் நடந்த வெற்றிமணி பத்திரிகையின் மணிவிழாவில் வெளியிடப்பட்டது. அதன்பின்னர் டிபிபி என்டர்டெயின்மென்ட் எனும் ஒரு இசைக்குழுவை ஆரம்பித்து தனது இசைப்பயணத்தை முறைப்படுத்தினார் சஞ்சே சிவா. கெட்ட பையன் ஒரு நல்ல பொண்ணு எனும் ஆல்பத்தின் மூலம் தமிழ் இதயங்களின் கதவுகளைத் திறந்த அவர், மாயவன், ஒன்வே, பைரவன், யாரிவன், யூகே 2 மதுரை போன்ற ஆல்பங்கள் மூலம் ஐரோப்பாவின் தமிழ் சமூகத்துக்கு மிக நன்கு பரிச்சயமானவராக மாறினார். இசையில் சம்பாதித்து வாழ்க்கை நடத்துவோர் மத்தியில், வாழ்க்கையில் சம்பாதித்து இசையை நடத்தியவர் இவர்.

லண்டனிலும், ஜெர்மனியிலும் ரசனைகளின் இதயங்களைப் பிடித்த சஞ்சே, தேசி மியூசிக் என்டர்டெயின்மென்ட் நிறுவனத்துடன் இணைந்து வெளியிடும் முதல் சர்வதேச ஆல்பம் தான், “என்பாதை” ! இந்தப் பாதையில் இசைப்பயணம் செய்திருப்பவர்களில் ஆலாப் ராஜு, கானா பாலா, ஸ்ரீனிவாஸ், கீத் பீட்டர்ஸ் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். பாடல்களை சேவியர் எழுதியிருக்கிறார்.

தேசி என்டர்டெயின்மென்ட் நிறுவனம் அமெரிக்காவைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. சர்வதேச இசைக்கலைஞர்களின் இசைத்திறமையை வெளிக்கொணர களம் அமைத்துக் கொடுப்பதில் முன்னணியில் இருக்கிறது தேசி என்டர்டெயின்ட்மென்ட். டிபியின் படைப்புகள் சர்வதேச மேடையில் ஒலிக்கச் செய்வதற்காக இப்போது அது என்பாதையில் பயணிக்கிறது !

இந்த இசைப்பேழை காற்றுப் பறக்கடிக்கும் பதரைப் போன்றதல்ல, பூமியையே பறக்கடிக்கும் சூறாவளியைப் போன்றது. காற்று பல முகம் காட்டும் ! தென்றலாய் காலையில் வீசும். வெயில் பூசி முகத்தில் கோபம் கொட்டும். ஈரம் பூசி மாலையில் நேசம் விளம்பும். காதல் பூசி இரவினில் ரகசியப் பிழைகளின் சாட்சியாகும்.



இந்த இசையும் அப்படித் தான். தென்றலாய் சில நேரம், பிடரி சிலிர்க்கும் புயலாய் சில நேரம், குதித்துப் பாயும் குதிரையாய் சிலநேரம், திமிறிப் பாயும் நதியாய் சில நேரம் என உருவம் மாற்றிக் கொண்டே இருக்கும். அத்தனை பன்முகங்களையும் ஒரே பேழையில் இறுக்கி அணைப்பது சவால்களுக்கே சவால் விடும் செயல். என்பாதை அந்த சவாலை வெற்றிகரமாய் முறியடித்து நிமிர்ந்து நிற்கிறது.

தமிழகத்தின் தலைநகராம் சென்னையில் "என்பாதை" இசைப்பேழை டிசம்பர் 2ம் திகதி வெளியாகிறது.

பாதைகள் பொதுவானவை !அதில் நடக்கும் பாதங்களே புதிது புதிதானவை !
பாதங்களின் அனுபவங்களே
பாதைகளை அனுமதிக்கின்றன, அல்லது அவமதிக்கின்றன !

இந்தப் பாதை உங்களையும் சந்தித்திருக்கலாம், இந்தப் பாதையின் இருமருங்கிலும் வளர்ந்து நிற்கும் மரங்களை நீங்களும் தீண்டியிருக்கலாம். இப்போது அந்த அனுபவத்தின் ஆழத்திலிருந்து சீறிப்பாயும் இசையை கேளுங்கள். உங்கள் பால்யத்தின் முடிச்சுகளிலிருந்து இளமையின் விடைகளையும், இளமையின் விடைகளிலிருந்து முதுமைக்கான கேள்வி களையும் கண்டு பிடியுங்கள்.

வாருங்கள் பயணிப்போம் என்பாதையில், உங்கள் பாதங்களில்...

www.sanjesiva.com எனும் தளத்தில் நீங்கள் சஞ்சேயின் பாடல்களை இலவசமாய் தரவிறக்கம் செய்து கொள்ளலாம் ! அள்ளித் தரும் தமிழை இலவசமாய் அள்ளித் தருவதே தமிழன்னைக்கு யாம் செய்யும் பிரதிபலன் !

பி.குறிப்பு: பாடல்கள் யாவும் ஒளிக்காட்சியாகவும் கேரளா, தமிழகம், இலங்கை எங்கும் படமாக்கப்படு உள்ளது. இவை தமிழகத்தில் வரும் 2ம் திகதி திரையிடப்படுகிறது. வெகு விரைவில் தமிழகத்தைத் தொடர்ந்து, யேர்மனி, இங்கிலாந்து,கனடா,இலங்கை,அமெரிக்கா நாடுகளில் திரை யிடப்படும்.

Nandy's Catering & Partyservice

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
**பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!**

ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!

**அனைவருக்கும் எங்கள் இனிய நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்**

உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளோம்

Mobil 0173-7424955
Tel:0211 76 91 974

NANDY'S
CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf

www.Nandys.de
e.mail:info@nandys.de



## கேளுங்கள் தரப்படும் தட்டுங்கள் திறக்கப்படும்



சேவியர்

# நாமும் பிறப்போம் !

ஒரு விதை மண்ணில் விழுந்து மடியும் போது ஒரு முளை புதிதாய் விழித்தெழுகிறது. ஒரு கூடு உடைந்து அழிந்து போகும் போது வண்ணத்துப் பூச்சி தன் ஈரச் சிறகினை மெல்ல உதறி பறக்கத் துவங்குகிறது. மரணத்துக்குப் பின்னான பிறப்பு, புதிய உலகுக்கான சிறகடிப்பு. அழிவின் முடிவில் துவங்கும் வாழ்வின் சுவடு !

இயேசுவின் பிறப்பு, மனுக்குலத்தின் மரணத்திற்குப் பின்னான மீட்பு வாழ்க்கையை உறுதிப் படுத்துவதற்கான பிறப்பு. பாவத்தின் பிடியில் இருக்கும் மனுக்குலத்தை, தனது பலியின் மூலமாக மீட்புக்குள் வழிநடத்துவதே அவரது வருகையின் நோக்கம். அதற்கு இயேசுவை நம்புவதும், அவரது வழியில் நடப்பதும் அவசியம்.

இயேசு ஒரு அன்பு சமுதாயத்தைக் கட்டமைக்க விரும்புகிறார். நாமோ அவருக்காய் ஒரு ரசிகர் மன்றத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். இயேசு ஒரு மனித நேய குடும்பத்தை உருவாக்க விரும்புகிறார். நாமோ அவருடைய பெயரால் வன்முறைகளை அவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கிறோம். அவர் உறவுகளால் கட்டப்பட்ட ஒரு அமைப்பை உருவாக்க விரும்புகிறார், நாமோ உரைகளால் கத்திக்கொண்டிருக்கும் ஒரு அமைப்பை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்.

எனில், நாம் செய்யவேண்டியது என்ன ? வேர்களை நோக்கிய ஒரு பயணம். இயேசு ஏன் இந்த பூமிக்கு வரவேண்டும் ? ஏன் மனிதர்களை மீட்கும் எண்ணம் கொள்ள வேண்டும் ? எனும் கேள்விகளை நமக்குள்ளேயே எழுப்புவோம். அப்போது இயேசுவை நாம் புரிந்து கொள்வோம்.

இயேசுவின் பிறப்பினால் நமக்குள் பிறக்க வேண்டிய ஐந்து விஷயங்கள் இவை.

1. அன்பு !
சக மனிதனை அன்பு செய்யாமல் இறைவனை அன்பு செய்ய முடியாது எனும் போதனையை அழுத்தம் திருத்தமாக போதித்தவர் இயேசு.
சக மனிதன் மீதான கரியனை இல்லாமல் இருப்பவர்களால் விண்ணக வாழ்வுக்குள் நுழைய முடியாது எனும் இவருடைய போதனை அன்பின் முக்கியத்துவத்தை ஆணித்தரமாய்ப் போதிக்கிறது. இயேசுவின் செயல்கள், சொற்கள், சிந்தனைகள் எல்லாமே அன்பு எனும் அச்சாணியில் மட்டுமே இயங்கிக் கொண்டிருந்தன. அத்தகைய அன்பு நமக்குள் பிறக்க வேண்டும்.

2. பணிவு !

கால்நடைகளுக்கான ஒரு மரத் தீவனத் தொட்டியில் பிறந்து, மரங்களோடு வாழும் ஒரு தச்சனாக வளர்ந்து, சிலுவை மரத்தின் உச்சியில் உயிரை விட்டு, பணிவை தனது வாழ்வால் விளக்கியவர் இயேசு. பசியோடும், சோர்வோடும் வாழ்ந்தாலும் பணிவோடும், துணிவோடும் வாழத் தவறவில்லை. கொலைக்களத்தில் துணிச்சலாய் பேசிய இயேசு, சீடர்களின் கால்களைக் கழுவும் அன்பினைக் கொண்டிருந்தார். தனது கால்களைப் பிறர் கழுவுவதிலல்ல, பிறருடைய கால்களை தான் கழுவுவது தான் உண்மையான ஆன்மீகம் என்பதை உணர்த்தினார். அத்தகைய பணிவு நமக்குள் பிறக்க வேண்டும்.

3. உண்மைத்தன்மை !

பாவிகளை அரவணைத்த இயேசு, புனிதர்களைப் போல தங்களைக் காட்டிக் கொண்டவர்களைப் புறக்கணித்தார் ! விபச்சாரியைக் கூட மன்னித்து அன்பால் அறிவுரை சொன்னவர், தலைவர்களை நோக்கி "வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளே" என கர்ஜித்தார். உண்மைத் தன்மையை இயேசு நேசித்தார். நான் பாவி என வருபவர்களை எப்போதும் அவர் புறம்பே தள்ளவில்லை. நான் சுத்தமானவன் எனும் கர்வத்தோடு வருபவர்களை நிராகரிக்கத் தயங்கவும் இல்லை. இயலாமைகளை வெளிப்படையாய் ஒத்துக் கொள்ளும் உண்மைத்தன்மை நமக்குள் பிறக்க வேண்டும்.

4. உறுதி !
இலட்சியத்தில் உறுதியாய் இருப்பது எப்படி என்பதை இயேசுவின் வாழ்க்கை போதிக்கிறது. பூமியில் ஒரு மனிதன் எப்படி வாழவேண்டும் என்பதை வாழ்ந்து காட்டுவதே அவரது மனித வடிவின் நோக்கம். அந்த நிலையிலிருந்து இம்மியளவும் அவர் விலகவில்லை. மரணத்தின் கடைசி வினாடியிலும் மன்னிப்பை வழங்கினார். தன்னைக் கைது செய்ய வந்தவர்களுக்கும் கருணையை நீட்டினார். தன்னைக் காட்டிக் கொடுத்தவனையும் நண்பா என்றழைத்தார். தன்னை இகழ்ந்தவர்களுக்காய் செபித்தார். அறைந்தவர்களுக்காய் மன்னிப்பை வேண்டினார். கடைசி வினாடியில் கூட இலட்சியத்திலிருந்து பின்வாங்கும் வாய்ப்பு அவருக்கு இருந்தது. ஆனால் இறுதி வரை உறுதியாய் இருந்தார். அந்த உறுதி நமக்குள் பிறக்க வேண்டும்.

5. செபம் !
இயேசுவே இறைவன், ஆனாலும் தனது மனித அவதாரத்தில் தன்னை அனுப்பிய தந்தையாம் இறைவனின் வழிகாட்டலும், கருணையும் தேவைப்பட்டது. அதற்காக அவர் செபித்தார். தந்தையின் வழிகாட்டுதல் இல்லாமல் அவர் எதையும் செய்யவில்லை. சோதனைகளை அடக்க அவருக்கு செபம் துணை செய்தது.
கர்வத்தை விரட்ட அவருக்கு செபம் துணை செய்தது. வேதனைகளைக் கடக்க அவருக்கு செபம் துணை செய்தது. இலட்சியத்தில் நடக்க அவருக்கு செபம் துணை செய்தது. செபம் ! சிங்கத்தின் வலிமையை சிற்றெறும்புக்கு ஊட்டும். சூரியனின் வெம்மையை தீக்குச்சிக்கும் தரும். செபம், நமது பலவீனங்களை இறைவனின் பலத்தால் கடக்கும் உன்னத வழி. அந்த செபம் நமக்குள் பிறக்க வேண்டும். இந்த இயேசு பிறப்பு நாளில் இத்தகைய இயேசுவின் வாழ்க்கை அனுபவங்கள் நமது வாழ்வில் பிறக்கட்டும். அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு நல்வாழ்த்துகள்.



# கனடாவில் உளநல சேவையில் முன்னணியில் இருக்கும் நம் தேசத்தின் பெண்மணி!

உளநலம் இத்துறையில் முன்னேற்றத்தை கொண்டுவரும் இவர்களை The Centre for Addiction and Mental Health, The Globe and Mail உடன் இணைந்து கௌரவிக்கிறது.



புஷ்பா கனகரட்டணம் Ph.D., C. Psych.

ஐந்தில் ஒரு கனேடியர் உளநல பிரச்சனைகளால் அல்லது addiction இனால் பாதிக்கப்படுகிறார். நாற்பது வயதை அண்மிக்கும் போது, இந்த புள்ளிவரவு இருவரில் ஒன்றாக குறைகிறது. உளநல சேவை வழங்குவதில் உள்ள சவால்களை எதிர்கொள்ள கனேடியர்கள் தொடர்ந்தும் முயற்சித்து கொண்டு வருகிறார்கள்.

சேவைகளை பெறுவதை இலகுவாக்கவும் உளநல நோய்கள் சார்ந்து இருக்கும் கறையை போக்கவும், உளநல பிரச்சனைகளோடு வாழ்வோரின் வாழ்க்கையை முன்னேற்றவும் தொடர்ந்தும் பாடுபட்டு வருகிறார்கள்.

இவர்களின் தலைமைத்துவத்தை கொண்டாடும் முகமாக, இத்துறையில் மாற்றத்தை ஏற்படுத்துபவர்களை கௌரவிப்பதற்கென The Centre for Addiction and Mental Health (CAMH) The Globe and Mail உடன் இணைந்து, இத்தகையவர்களை அடையாளம் கண்டு முன்மொழியுமாறு அறிவித்ததன் பேரில், 3,700 பெயர்கள் எமக்கு கிடைத்தன. உத்தியோகபூர்வமானவர்களில் இருந்து நாளாந்த மனிதர்கள் உள்ளிட, 150 கனேடியர்கள் இந்த கௌரவத்தை பெற தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அவர்களில் ஒருவர்: புஷ்பா கனகரட்டணம். (City: Toronto :Job: Clinical psychologist; PhD C.Psych.)

கடந்த 21 வருடங்களாக, அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்தவர்கள் உளநலம் சார்ந்து வேலை செய்து வருகிறார். இவர் ஒரு clinical psychologist.

நோர்வேயில் உளவியல் கற்க ஆரம்பித்த காலத்தில் இருந்து, போர், மற்றும் வன்முறை சார்ந்த உளநலம் எனக்கு முக்கியமாக பட்டிருந்தது, என்கிறார் இவர். போரின் பாதிப்புகளுக்கு உள்ளான இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்திருந்ததால், இத்தகைய அனுபவங்கள் எப்படி மனிதர்களை பாதிக்கிறது என்பதை நான் உணர்ந்திருந்தேன் என்றார்.

Dr. கனகரட்டணம் அவர்களுடைய ஆய்வறிக்கை அரசியல் வன்முறை மற்றும் போரினால் ஏற்படும் அறிகைசார் (cognitive) பாதிப்புகள் பற்றியதாக இருந்தது. பல்கலைக்கழக மாணவராக, சிறுவயதில் போருக்கு செல்பவர்கள் (child soldiers) பற்றிய ஒரு ஆய்வறிக்கையையும் இவர் செய்திருந்தார். 2003 ம் ஆண்டு, University of Toronto விற்கு சர்வதேச மேலாய்வாளராக (international fellow) வந்தபோது, புலம்பெயர்-தமிழ் சமூகத்தில் போர்வடு பற்றி கலாச்சார அணுகுமுறையில் ஓர் ஆய்வு மேற்கொண்டார்.

போர் வடு என்பது சிகிச்சை வழங்கவேண்டிய ஒரு நோய் அல்ல. ஆனால், புலப்பெயர்வு, புதிய ஒரு நாட்டில் மீள்குடியிருப்பு என்ற சவால்களுக்கு மத்தியில், போர் அனர்த்தங்களினால் ஏற்பட்ட பாதிப்பு எம்மை நோய்க்குள் தள்ளலாம், என்பது இவரின் கருத்து.

கனடா பாரிய அளவில் அகதிகளை உள்வாங்கும் ஒரு நாடாக இருப்பதால், இவர்களுக்கு சீரான முறையில் உதவி வழங்குவதற்கு இந்த நாட்டின் உளநல சட்டகத்தில் ஒரு இடம் இருக்கவேண்டும் என்கிறார் Dr. புஷ்பா கனகரட்டணம்.


இவர் கனடாவில் குடும்பவன்முறை ஆலோசகராகவும், சுனாமியை தொடர்ந்து இலங்கையின் csey புனருத்தாரண திட்டம் ஒன்றில் ஆலோசகராகவும், இன்னும் பல்விதமான உளநலம் சார் பதவிகளிலும் பணிபுரிந்திருக்கிறார். அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்தோர் உளநலம் பற்றி துறைசார் மேடைகள், மற்றும் தொலைக்காட்சி, பத்திரிகை ஊடாக கருத்துக்களை முன்வைத்திருக்கிறார்.

அகதி சமூகங்கள் பற்றி கனேடியர்களுக்கு அறிவூட்டுவதுடன் மட்டும் அல்லாமல், கனேடிய மையநீரோட்டத்துடன் இணைந்து முன்னேறுவதற்கான முயற்சிகள் பற்றி அகதி சமூகங்களுடன் கலந்துரையாடுவதும் இவர் நோக்கமாகும்.அண்மையில், அகதிகள் உளநலம் பற்றிய ஒரு வரம்புறுகையினை (framework) துறைசார் குழுவொன்றுடன் இணைந்து உருவாக்கி, CAMH இல் முன்வைத்தார்."மற்றைய உளநல துறைகள் போல் அல்லாமல், அகதிகள்/ புலம்பெயர்ந்தோர் சார்ந்த அணுகுமுறைகளுக்கு ஆய்வு-ஆதாரம் பெரிதாக இல்லை என்பது வருத்தத்துக்குரியது. ஒவ்வொரு அகதி சமுகத்திற்கென்று ஒவ்வொரு அணுகுமுறையை நாம் உருவாக்க முடியாது. நம் தீர்வுகள் எந்த அகதி/புலம்பெயர் சமூகத்துக்கும் பொருந்தக்கூடியதாக இருக்கவேண்டும்" என்ற கருத்தை இவர் கூறினார். மேலும் அவர் கூறுகையில், இந்த வரம்புறுகை உளநலம் பற்றிய மேலைத்தேய மாதிரிகளின் குறைபாட்டினை நிவர்த்தி செய்வதாக அமையும், என்றார். ஏனெனில் மேலைத்தேய அணுகுமுறைகள், புலம்பெயர் சமூகங்களுக்கு எப்பொழுதும் பொருந்துவதாக இருக்காது. உளநலம் பற்றிய அகதி சமூகங்களின் கண்ணோட்டம், துறைசார் நிபுணர்களுக்கு புரிய வேண்டும். அப்படியான புரிதல், துறைசார் நிபுணர்களுக்கு இச்சமூகங்களுக்கு பொருத்தப்பாடான, பயனுள்ள சிகிச்சைகளை வழங்க உறுதுணையாக இருக்கும் என நம்பிக்கை தெரிவிக்கிறார்.




# காது மந்தமானவர்களை அணுகுவது எப்படி

## காது மந்தமாவது எப்போது!



Dr IN

டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

"அப்பா இப்ப முந்தி மாதிரி இல்லை. ஒதுங்கி ஒதுங்கிப் போறார். முந்தி மாதிரி எங்களோடை அதிகம் கதைக்கிறதில்லை. தனக்கு ஒண்டும் இல்லை எண்டுட்டார். உங்களிட்டை வர மாட்டன் எண்டும் சொல்லிப் போட்டார். நான்தான் நட்டுப்பிடிச்சு கூட்டிக்கொண்டு வந்தனான்" என்றாள் மகள் மிகுந்த மனவேதனையுடன். அப்பா முகத்தில் சலனமில்லை. விட்டேத்தியாக என்னைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்கு வயது 70 இருக்கும். மன விரக்தியாக இருக்குமோ என எண்ணிய நான் 'ஐயாவுக்கு என்ன பிரச்சனை' என்றேன்.

ஐயா மறுமொழி கூறவில்லை ஆனால் எனது முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்தேன்.

"ஐயாக்கு காது கேக்கிறது கொஞ்சம் குறைவோ" என்று கேட்டபோது, "அப்பிடித் தெரியல்லை எங்களோடை வடிவாக் கதைக்கிறார்தானே" என்றாள். மேசையில் உள்ள பொருளை எடுப்பதுபோல மறு பக்கம் முகத்தைத் திரும்பிக் கொண்டு "ஐயா உங்களுக்கு எத்தனை வயசு" என்று கேட்டேன். மறுமொழி வரவில்லை. சந்தேகம் நிரூபணமாகியது.

காது மந்தமாவது என்பது வயதானவர்களைப் பாதிக்கும் ஒரு முக்கியமானதும் பரவலானதும் ஆன பிரச்சனையாகும். 65 வயதுக்கு மேற்பட்டவர்களிடட 15 - 40 சதவிகிதத்தினரும், 75 வயதுக்கு மேற்பட்ட வர்களிடட 50 சதவிகிதத்தினரும், 85 வயதுக்கு மேற்பட்டவர்களில் 80 சதவிகிதத்தினரும் செவிப்புலன் குறைபாட்டால் பாதிக்கப்படுகிறார்கள்.

எனவே வயதாகும்போது காது மந்தமாவது என்பது நியதி போலவே இருக்கிறதேயன்றி விதிவிலக்காக அல்ல என்று சொல்லாம் போலிருக்கிறது.

இது மிக மெதுமெதுவாகவே ஏற்படுகின்ற பாதிப்பு என்பதால் பலரும் ஆரம்பகட்டங்களில் தமக்கு இக்குறைபாடு உள்ளதை தாமாகவே உணர்ந்து கொள்வதில்லை.

முகத்துக்கு நேர் முகம் பார்த்துப் பேசும்போது அவர்கள் புரிந்து கொள்வதால் உறவினர்களும் உணர்ந்து கொள்ளத் தாமதமாகலாம்.

### செவிப்புலன்

செவிப்புலன் என்பது நாம் எமது சூழலுடன் தொடர்பாடுவதற்கு மிக முக்கியமான உணர் திறனாகும். இதன் இழப்பானது மனித வாழ்வின் முழுமையை, அந்த வாழ்பனுபவத்தின் பூரணத்துவத்தையே சிதைத்துவிடும். செவிப்புலன் இழப்பானது மூளையின் செயல் வீச்சைக் குறைக்கிறது, ஆரோக்கியமான உணர்வுகளை மரக்க வைக்கிறது, மனநலத்தைப் பாதிக்கிறது, கற்றலை முடக்குகிறது, தொழில்வாய்ப்பைச் சிதைக்கிறது எனப் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.

பாதிப்புகள்

வயதானவர்களின் காது மந்தமாகும்போது மற்றவர்களுடன் வழமைபோலப் புரிந்து பேசி உறவாட முடியாமல் தடுமாறுகிறார்கள். தனிமைப்படுகிறார்கள். வழமையான நடவடிக்கைகளைக் குறைத்துக் கொள்கிறார்கள். இவற்றால் ஏக்கத்திற்கும் மனவிரக்திக்கும் ஆளாகுகிறார்கள். இதனால இவர்கள் உறவினர்களிடமிருந்தும் நண்பர்களிடமிருந்தும் தாமாகவே ஒதுங்கிக் கொள்கிறார்கள். இதுதான் அப்பெண்மணியின் அப்பாவுக்கும் நடந்தது.

காது மந்தமாதல் இரண்டு வகையானது.

முதலாவது ஒலியானது சூழலிருந்து காதுத் துவாரம் வழியாக செவிப்பறைக் குருத்தெலும்புகள் எனக் கடத்தப்படுதலில் உள்ள கோளாறாகும்.

செவிப்பறை பாதிப்படைதல், துவாரமடைத்தல், குருத்தெலும்புகள் இறுகதல் போன்றவற்றால் இது நேரலாம்.

இரண்டாவது வகை நரம்பு மண்டலம் சம்பந்தப்பட்டது. ஒலியை உணர்தல், அதனைப் பாகுபடுத்தி விளங்கிக் கொள்ளல் ஆகியவை பாதிப்புறுவதால் ஏற்படுவது.

வயதானவர்களின் காது மந்தமாகும் போது, இது மூப்படைவதின் ஒரு கட்டமேயாகும். ஒருவர் முகத்திற்கு நேரே பேசும்போது விளங்கிக் கொள்ளும் வயேதிபர், பலர் கலகல எனப் பேசும்போது புரிந்து கொள்ளச் சிரமப்படுவது ஒலியை பாகுபடுத்தி விளங்க முடியாதிருப்பதாலேயே.



புறச் சத்தங்கள் அதிகமாக உள்ள இடம்

புறச் சத்தங்கள் அதிகமாக உள்ள இடங்களிலும் ஒலி எதிரொலிக்கும் இடங்களிலும் அவர்களால் கேட்க முடிவதில்லை. அதே போல விரைவாகப் பேசுவோரின் உரையாடல்களையும், புதியவர்களின் பேச்சுக்களையும் அவர்களால் புரிந்து கொள்ள முடிவதில்லை.

வயதானவர்களின் காது கேளாமையைக் முழுமையாகக் குணப்படுத்தக் கூடிய சிகிச்சைகள் எதுவும் கிடையாது என்பது உண்மைதான்.

ஆயினும் அவர்களின் குறைபாட்டைத் தணிப்பதற்கு பல வழிமுறைகள் உள்ளன. அவற்றைப் பயன்படுத்த உதவுவது உறவினர்களின் கடமையாகும்.

### காது கேட்கும் கருவிகள்

காது கேட்கும் கருவிகள் பலன் தரக்கூடும். ஆயினும் 10-15 சத விகிதமானவர்களே அக்கருவிகளைத் தொடர்ந்து உபயோகிக்கிறார்கள். இதற்குக்காரணம் அது இயற்கையான காதுக்கு மாற்றீடு அல்ல.

அத்துடன் கூட்டமான இடங்களில் புறச்சத்தங்களும் குழப்பக்கூடும். அத்தருணங்களில் இரண்டு காதுக்குமே கருவியை உபயோகிப்பது பிரயோசனமாயிருக்கும்.

ஸ்பீக்கர் போன், ஒலி அதிகரித்த தொலைக்காட்சிப் பெட்டி, ஒலியுடன் ஒளியையும் உமிழும் அழைப்புமணி போன்ற பாவனைப் பொருட்கள் அவர்களைச் சூழலுக்குள் திருப்தியோடு அணைந்து இயங்க உதவக் கூடும்.

காது மந்தமானவர்களுடன் பேசும்போது நீங்கள் அவதானிக்க வேண்டியவை. முகத்தை வேறு பக்கம் பார்த்துக் கொண்டு பேசாதீர்கள்.

தொடர்ச்சி 11ம் பக்கம்...

TTS ASIEN SUPERMARKT
TTS Brothers GmbH & Co.KG
★ Lebensmittel ★ Seafood ★ Textilien ★ Schmuck
Germany நாட்டில் 25 ஆண்டுகளைக் கடந்த ஒரே நிறுவனம்

உங்கள் வீட்டுத் தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள் மற்றும் ஆடை அணிகலன்களுக்கும் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.
நம்பிக்கை! நாணயம்!! கைராசி!!!

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184
Helmholtz Str 11 | 46045 | Oberhausen
Telefon : 0208 20 28 29
Johannes Str 35 | 53225 | Bonn Beuel
Telefon : 0228 4037 7846
Fr. und Sa. 11.00 bis 19.00 Uhr



# உன்னைக் கண்டு நானாட என்னைக் கண்டு நீயாட...

சந்திரவதனா

அன்றிரவு சப்பல் அடி. பூவரசந்தடியா, கிளிசரியாத்தடியா அல்லது வாதநாரயணித்தடியா என்பது ஞாபகத்தில் இல்லை. மெல்லிய சுள்ளிப் பச்சைத்தடி. அம்மா முதலில் ஆத்திரம் தீரு மட்டும் விளாசித் தள்ளி விட்டா. பின்னர் என்னை அடித்ததற்காகவும், நான் காதலிப்பதற்காகவும் அழுது கொண்டிருந்தா. நான் அடியின் வலியை விட அம்மாவின் அழுகையைத் தாங்க முடியாது அழுது கொண்டிருந்தேன்.
அது அர்த்த ஜாமம். அண்ணா, தம்பியர், தங்கையர் எல்லோரும் தூங்கி விட்டார்கள். அப்பா களனியா புகையிரதநிலையத்தில். பெத்தம்மா (அம்மாவின் அம்மா) மட்டும் அம்மாவுக்குத் துணையாக அல்லது என் காதலை மறக்கப் பண்ணுவதற்காக அங்கிருந்தா.

பெத்தம்மா, பாட்டாவும் நித்திரையாகிய பின் அவருக்கு இந்த விசயத்தைப் பற்றி எதுவுமே சொல்லாமல் பின் வீட்டிலிருந்து வந்திருந்தா. பெத்தம்மா வந்த பின் அம்மா அடிக்கவில்லை. „கடிதங்கள் வைத்திருந்தால் கொணர்ந்து இந்த அடுப்புக்குள் போட்டு விட்டு, அவனது நினைவுகளையும் அத்தோடு கருக்கி விடு" என்று மண்றாடிக் கொண்டே இருந்தா. குசினிக்குள்தான் அந்த நாடகம் நடந்து கொண்டிருந்தது. அந்தப் பெரிய வீட்டில் குசினியை ஏன் அம்மா தேர்ந்தெடுத்தா என்பது பற்றியும் நான் எதுவும் சிந்திக்கவில்லை.

அது அம்மாவுக்கு நான் பொய் சொல்லத் தொடங்கிய வயது. எனது இரசாயனக் கொப்பிக்குள் அந்தக் கடிதம் இருந்தது.

வானில் முழு மதியைக் கண்டேன்
வனத்தில் ஒரு பெண்ணைக் கண்டேன்
வான முழுமதியைப் போலே
மங்கையவள் வதனம் கண்டேன்...

என்ற பாடல் வரிகளும் இருந்தன.

ஆனால் என்னிடம் எந்தக் கடிதமும் இல்லை என்று பச்சைப் பொய் சொன்னேன். கொப்பிக்கு ராதா பத்திரிகையின் நடுப்பக்கத்தைக் கவராகப் போட்டிருந்தேன். அதற்குள்தான் கடிதம் இருந்தது. அதனால் அம்மா கண்டு பிடிக்க மாட்டா என்ற அசாதரணத் துணிச்சல்.

பெத்தம்மா மிகவும் அன்பாகவும், வாஞ்சையுடனும் கதைத்தா. எனக்கு மூன்று தங்கைமார் இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டினா. எங்கள் குடும்பமானம் கப்பலேறி விடப்போகிறது என்று அழாக்குறையாகச் சொன்னா. „மறந்து விடு" என்று கெஞ்சினா. கொண்டு வந்த கற்பூரத்தட்டைப் பத்த வைத்து "இனி அவனைப் பார்க்கவோ, பேசவோ மாட்டேன்" என்று சத்தியம் செய்யச் சொன்னா. கொஞ்ச நேரம் போக தன் தலையில் அடித்துச் சத்தியம் செய்யச் சொன்னா. சத்தியத்தை மீறினால் தான் செத்து விடுவேன் என்றா.

உன்னைக் கண்டு நானாட
என்னைக் கண்டு நீயாட
உல்லாசம் பொங்கும் இன்பத் தீபாவளி

என்று அவன் வாழ்த்திய வாழ்த்துமடல் வீட்டுக்கு அஞ்சலில் வந்ததில் இருந்து ஆரம்பித்த பூகம்பம்.
அதிலும்
என்னைக் கண்டு நீயாட...
என்ற வரி, அவனைக் கண்டு நீயும் ஆடுகிறாயா...? என்ற கேள்வியாக வீட்டில் எல்லோரையும் உ றுத்திக் கொண்டே இருந்தது. அதனால் அவர்கள் கோபமாகவும், வேதனையாகவும் என்னைக் கடந்து கொண்டும், கண்கொத்திப் பாம்பாய் கவனித்துக் கொண்டும் திரிந்தார்கள்.

அன்றைய இரவு என் மனம் போராடிக் கொண்டே இருந்தது. அவனை மறக்க முடியுமா என்று தெரியாமல் இருந்தது.

காலையில் சாப்பிடும் போது இருந்து சாப்பிட்டால் வெள்ளைச்சட்டையின் பிளீற்ஸ் குளம்பி விடும் என்பதால் நின்ற படி சாப்பிட்டேன். அம்மா கனக்கச் சொல்லிக் கொண்டே இருந்தா. பேசினா. தங்கைமாரை நினைக்கச் சொன்னா.

கேற்றைத் திறந்து படியில் இறங்கக் கால் வைக்கும் போது மனதுக்குள் சங்கற்பம் பூண்டேன். "இனி அவனைப் பார்ப்பதில்லை. அவன் எது கேட்டாலும், என்ன எழுதினாலும் பதில் கொடுப்பதில்லை. அவனை மறந்து விட வேண்டும்."


காலை வீதியில் வைத்தேனோ, இல்லையோ தெரியவில்லை. என் முன்னே சைக்கிள். மெதுவாக என்னைத் தாண்டியது. அவன்தான். அவனேதான். ஒரு கணந்தான். பார்வைகள் மோதிக் கொண்டன. எனக்குள்ளே என்னவோ பாய்ந்தது. வயிற்றுக்குள் பட்டாம்பூச்சி பறந்தது. கலங்கியிருந்த கண்கள் கவலைகளை மறந்தன. மனம் துள்ளியது. இன்னதென்று சொல்ல முடியாத வார்த்தைகளற்ற உணர்வு அது.

அவன் போய் விட்டான். எனது சங்கற்பம், மனோதிடம் எல்லாம் அவனோடு கூடப் போய் விட்டன. வழி வழியே, சுற்றிக் கொண்டு ஏதாவதொரு வழியால் திரும்ப வருகிறானா என்று திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே போனேன். அப்போது அவன் வரவில்லை.

ஆனால் பாடசாலைக்கு ஒரு பெண் மூலம் ஒரு கொப்பி வந்தது. கொப்பியின் உள்ளே இரு பக்கங்கள் ஒட்டப்பட்டு அதற்குள் கடிதம் இருந்தது.

கரைபோட முடியாத புது வெள்ளையாடை
கலைமானும் அறியாத விழி வண்ண யாடை.






# சகோதர பாசம் நேற்றும் இன்றும்



றஜினா தருமராஜா

முதலில் நீங்கள் அனைவரும் உங்கள் சகோதரர்களை நினைத்துக் கொள்ளுங்கள். உங்கள் மனதில் தோன்றுவது என்ன?
என் மனதில் உண்டாகும் உணர்வு அன்பு! விலைமதிப்பில்லா உறவல்லவா? எனக்கு ஓர் அண்ணா ஒரு தங்கை. இவர்களை நான் யாருக்காகவும் எதற்காகவும் விட்டுக் கொடுக்கவேமாட்டேன்.
என் அம்மா சில சமயங்களில் என்னைக் கேட்பார் உன் தங்கைக்கு தாய் நீயா என்று?! ஆம் என்பேன். அக்காக்கள் அனைவருக்கும் நான் கூறுவது புரியும். **சகோதர பாசம்**
நேற்றும் இன்றும் என்பதைப் பார்ப்போம்...
அன்றைய காலத்தில் பெரிய குடும்பமாக இருந்து வாழ்ந்து வந்தார்கள். சிறிய குடிசைகளிலும், வீடுகளிலும் ஒற்றுமையுடன் வசித்து வந்தனர்.
நான் அறிந்து கொண்டதில் வீட்டில் மூத்த பிள்ளை ஆணாக இருந்தால் அவரின் தங்கைகளுக்குத் திருமணம் நடக்கும் வரை அவர்களுக்கு என ஒரு வாழ்க்கையைத் தேடமாட்டார்கள். கடமைகளை நிறைவு செய்வதற்காக பாடுபட்டு உழைப்பார்கள்.
மூத்த சகோதரர்களுக்கு மரியாதை கொடுப்பார்கள். மற்றும் சிறியதொரு பயமும் இருக்கும். காதலித்தால் எதிர்ப்பு தெரிவிப்பார்கள் என்ற பயம். நான் கூறுவது சரியல்லவா? அப்பா போல் குடும்ப சுமைகளைச் சுமந்து வருபவர்கள்.

இதேபோல் அக்காமார்கள் ஒரு தாயைப்போல் தனது சகோதரர்களைப் பார்த்துக்கொள்வார். உணவு ஊட்டிவிடுவதில் இருந்து உறங்கச் செல்லும் வரை பணிவிடை செய்வார்கள். இவ்வாறு ஒற்றுமையோடு பாசத்துடன் இருந்தவர்களை விட்டு வெளிநாட்டுக்கு வந்து தனிமரமாக சிலர் இருக்கிறார்கள்.

இன்றைய காலத்துச் சகோதரர்கள் உலகமாற்றங்களுக்கு ஏற்ப மாறிக்கொண்டு வருகிறார்கள். தற்போதைய காலத்தில் தங்கைகள் திருமணம் முடித்தபின் தான் ஆண் பிள்ளைகள் வாழ்க்கைத்துணையைத் தேடுவார்கள் என்பது சாத்தியமில்லை.
ஆனால் சகோதரர்களுடன் நண்பர்கள் போல் பேசும் முறை இப்பொழுது இருக்கிறது. பெற்றோருக்குக் கூற முடியாதவற்றை உடன்பிறந்தவர்களுடன் பயின்று கொள்ளமுடிகிறது. மனதுக்கு அமைதியைத் தருகிறது. ஆலோசனைகள் கூறுகிறார்கள்.

சுயநலம் அவர்களிடையே இருக்கின்றது. இதனைத் தவறு என்று நான் சொல்லவில்லை ஆனால் காலத்திற்கு ஏற்றவாறு மாறிக்கொண்டு வருகிறார்கள். ஊனமுற்றவர்களை அவர்களின் சகோதரர்கள் இறுதிவரைப் பார்த்துக் கொள்கிறார்கள். துன்ப நேரங்களிலும் சரி, நோய் வரும் போதும் சரி உங்களைப் பாதுகாப்பவர்கள் சகோதரர்கள். ஆம் என்னை எனது அண்ணாவும் தங்கையும் பாதுகாத்துக்கொள்பவர்கள். நான் எழுதிய கருத்துகள் எல்லோருக்கும் பொருத்தமாக இருக்காது!
எனது கருத்து:

**நேற்றும் இன்றும்.... சகோதரப்பாசத்தைக் காலத்துக்கு ஏற்றவாறு மாற்றிக்கொள்ளமுடியாது! இப்பாசம் புனிதமானது!**

## காது மந்தமானவர்களை அணுகுவது எப்படி

09 ம் பக்கத் தொடர்ச்சி...



அவர்களுக்கு உங்கள் முகம் தெளிவாகத் தெரியும்படியான இடத்தில் இருந்து பேசுங்கள்.
குரலை உயர்த்திப் பேசாதீர்கள். சாதாரண குரலில் பேசுங்கள். விரைவாகப் பேசாதீர்கள். ஆறுதலாகவும் தெளிவாகவும் பேசுங்கள். உங்கள் உதடுகள் வாசிக்கப்படக் கூடியவாறு பேசுங்கள். நீங்கள் பேசுவது அவருக்குப் புரியாவிட்டால் குரலை உயர்த்தி மீண்டும் மீண்டும் அதையே சொல்வதை விடுத்து வேறு சொற்களால் சொல்லுங்கள்.

கூட்டமான இடங்களில் வைத்துப் பேசாதீர்கள். ஒதுக்குப்புறமாக சத்தம் சந்தடி குறைந்த இடத்திற்கு கூட்டிச் சென்று உரையாடுங்கள்.
காது கேட்கும் கருவி உபயோகிப்பவராயின் அது சரியாக வேலை செய்கிறதா என்பதையும், உரிய இடத்திட்ட சரியாகப் பொருத்தப்பட்டிருக்கிறதா என்பதையும் உறுதி செய்து கொள்ளுங்கள்.

முகம், கண்கள், கைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி சைகை மொழிகளுடன் பேசுங்கள். உங்கள் பேச்சைப் புரிந்து கொள்ள முயற்சித்து அது முடியாததால் அவர் சோர்ந்து விட்டதை அவதானித்தால் உங்கள் உரையாடலை வேறு ஒரு தருணத்திற்கு ஒத்திவையுங்கள்.


**காது கேளாமைக்குக் காரணங்கள்**




மூப்படைதட்ட மட்டுமே காது கேளாமைக்கு ஒரே காரணம் என்றும் சொல்லிவிட முடியாது. தோழில் ரீதியாகவோ (உதா- இயந்திர ஓசைகள்), பொதுவாழ்வின்போதோ கடுமையான ஒலிகளுக்கு நீண்டகாலம் முகங்கொடுக்க நேர்வது, செவிடாவதைத் துரிதப்படுத்தக் கூடும்.
பல வகை மருந்துகள், காதுக் குடுமி, பரம்பரையாக விரைவில் காது மந்தமாதல், நடுக் காது நோய்கள் போன்றவையும் காரணமாகலாம்.
எனவே நீங்களாக முடிவெடுக்காமல் வைத்திய ஆலோசனை பெறுவது நல்லது. நன்றி. தமிழர்தகவல் - கனடா



# சோஸ்ற் தமிழ்க் கல்வி கலாசார அமைப்பின் தமிழ்பாடசாலையின்
## வெள்ளிவிழா 1992 - 2017







சோஸ்ற் நகரத்தில் தமிழ்க் கல்வி கலாசார அமைப்பு நடத்தும் தமிழ் பாடசாலையின் 25வது அகவை விழா மிக விமரிசையாக 28.10.2017 அன்று பாடசாலை ஸ்தாபகரும் அதிபருமாகிய திரு.திருமதி தெய்வேந்திரம் இந்து அவர்களின் தலைமையில், கம் ஸ்ரீ கமா'சியம்மன் ஆலய பிரதம சிவச்சாரியார் பாஸ்கரகுருக்கள் அவர்களும் அவர் தம் துணைவியாரும் மங்கள விளக்கேற்றி நிகழ்வினை மங்களகரமாக ஆரம்பித்தார்கள். அதனுடன் புது நிகழ்வாக கடவுள் வணக்கம் தெய்வபுலவனிற்கு திரு தெய்வேந்திரம் அவர்கள் மாலை அணிவித்து வணக்கத்தைச் செலுத்த பாடசாலை மாணவர்கள் திருக்குறளில் கடவுள் வாழ்த்தினை பாமாலையுடன் தொடங்கியமை ஓர் புதுமையான சிந்தனையாக இருந்தது.

போரினாலும் சுனாமியினாலும் உயிர்நீத்தவர்களுக்காக மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் அடுத்து சிவஸ்ரீ பாஸ்கர குருக்கள் ஆசியுரையை வழங்கி சிறப்பித்தார். வரவேற்புரையைத்தொடர்ந்து, அமுதான தமிழே நீ வாழ்க! என்ற பாடலுக்கு வரவேற்புநடனம் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து இயல், இசை, நாடகம் என முத்தமிழ் அரங்கை அலங்கரித்தன. தமிழர் பாரம்பரியத்தை பறை சாற்றும் கிராமிய நடனங்கள் மயில் நடனம், பாம்பு நடனம், கரகம், காவடி, தப்பாட்டம் ஒயிலாட்டம்,கோலாட்டம் என்பனவும், வீணை இசை, வில்லிசை பரத நாட்டியங்கள்,பேச்சு எனப் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. செல்வி சாருஜா சிவகுமாரன் செல்விகள் மீரா,மீனா மணிவண்ணனுடன் ஆசிரியர்கள் திருமதி தனுசா ரமணன், திருமதி மீரா நித்தியானந்தன் திருமதி ஞானம்பாள் விஜயகுமார், திருமதி சாந்தினி துரையரங்கனின் மாணவர்களும், நிகழ்வுகளைக் கொடுத்து விழாவை சிறப்பித்தனர்.

பிரதம விருந்தினராகசோஸ்ற் உதவிநகர பிதா திருமதி மக்கிங்சனுடன் சிறப்பு விருந்தினரகள் உரையும் இடம்பெற்றன. திரு. த. ரவீந்திரன் (ஐரோப்பிய தமிழ் வானொலி, அகரம், அகரதீபம் ஆசிரியர்), திரு. பொ. ஜீவகன் (ஜேர்மன் கல்விச்சேவைப் பொறுப்பாளர்), திரு. வை. சிவராசா (மண் சஞ்சிகை ஆசிரியர்), திரு.சி சிவஅருள்( எசன் தமிழ் மொழிச் சேவை கலாசார மன்றம்(தலைவர்), திரு.பொ.புத்திசிகாமணி எழுத்தாளர் சங்க செயலாளர்)திருக.கிரு'ணமூர்த்தி (பண்ணாக இணைய ஆசிரியர்) திரு.சு. விக்கினேஸ்வரன் (எசன் தமிழ் மொழிச் சேவை கலாசார மன்றம் (பொருளாளர்) திரு. முல்லைமோகன் (அறிவிப்பாளர்) திரு. எஸ் தேவராசா , அறிவிப்பாளர், இவர்கள் திரு திருமதி தெய்வேந்திரம் அவர்களின் கல்வி கலை கலாசாரம் விளையாட்டுக்கான சேவையினை பராட்டியும் இன்னும் பல ஆண்டுகள் சிறப்புற தொடர்ந்து பல நூற்றாண்டுகள் காணவேண்டும் எனவும் வாழ்த்தினார்கள். திரு திருமதி தெய்வேந்திரம் இவர்களிற்கான கௌரவிப்பினை வழங்கி சிறப்பித்தார்கள்.

இறுதியில் காத்தவராயன் கூத்து நடைபெற்றது. இதில் மாணவர்கள் சிறப்பான பயிற்சி மூலம் தாங்களே மேடையில் பாடல்களைப் பாடி மிக அற்புதமாக நடித்தமை சிறப்பம்சமாகும். உண்மையில் வ்வளவோ இன்னல்கள் மத்தியிலும் 25 ஆண்டுகளாக இப் பாடசாலை ஆரம்பித்து அதனுடன் வருடாவருடம் விளையாட்டுப் போட்டி, கலைநிகழ்வுகள் என நடத்திக் கொண்டு வரும் திரு திருமதி தெய்வேந்திரம் அவர்கள் நீடுழி காலம் சிறந்த ஆரோக்கியத்துடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை வணங்கி பிராத்திக் கின்றேன்.

## 5வது பிறந்த நாள் வாழ்த்து

**செல்வன்.மோகனதாஸ் வைஷியர்**

[29.11.2017]

யோ்மனி ராட்டிங்கன் நகரைச் சேர்ந்த
மோகனதாஸ் வேதா தம்பதிகளின் புத்திரன்
செல்வன் வைஷியா் தனது 5வது பிறந்த
தினத்தை வெகு விமா்சையாகக்
கொண்டாடுகின்றாா். இவரை அம்மா அப்பா
அம்மம்மா அப்பம்மா சித்தி சித்தப்பா மாமா.
மாமி மற்றும் உற்றாா் உறவினா்கள்
நண்பா்கள் அனைவரும் கல்வியும்
செல்வமும் சிறந்தோங்க வாழ்த்துகின்றனா்.

**09.12.2017 சனிக்கிழமை**

மாலை 5.00 மணி

பிறந்த நாள் விழா மண்டபம்.
Griechisch- Orthodoex Kirchengemeinde
Am Schönenkamp 1
40599 Düsseldorf
தொடர்புகளுக்கு:மோகனதாஸ்
(ராட்டிங்கன் Jasmine Silk House உரிமையாளா்)
0173 1937 325- Tel:0210 2844 744




செல்வன்.வைஷியா்
தங்கள் நல்வரவை நாடும்
திரு திருமதி மோகனதாஸ்



# இளையோரின் எழுத்துக்களுக்காக ஏங்கி நிற்கும் பெரியோர்.




நூலகங்களும் நூல்களும் வாசகர்களும் குறைந்து விட்டார்கள் என்று சொன்னால், அதை முற்றுமுழுதாக ஏற்றுக் கொள்ள முடியாது. வாசிப்பவர்கள் வாசித்துக் கொண்டுதான் இருக்கின்றார்கள். எழுதுபவர்கள் எழுதிக் கொண்டுதான் இருக்கின்றார்கள். முற்காலத்தை விட இக்காலத்தில் நூல்கள் அச்சடிக்கும் தொகை அதிகரித்துள்ளது என அச்சகத்தினர் கூறுகின்றார்கள், ஆனால், இளையோர் வாசிப்பு ஆர்வமும் எழுதும் ஆர்வமும் அதிகரித்துள்ளதா என்றால், அது கேள்விக்குறியாகத்தான் இருக்கின்றது. "ஹரி பொட்டர்" என்னும் நூல் வாங்குவதற்காக முதல் நாளே வரிசையில் நின்ற இளையோரும் இக்காலப்பகுதியில் தான் வாழுகின்றார்கள்.
வீட்டில் இருந்தபடி இணையம் மூலம் புத்தகம் வாங்கி வாசிக்கின்ற இளையவர்களும் எம்மத்தியில் இன்னும்தான் வாழ்கின்றார்கள். நகரங்கள் தோறும், புகையிரத நிலையங்கள் தோறும் புத்தகக் கடைகள் நிரம்பிக் காணப்படுகின்றன. புகையிரதம், பேரூந்து பயணங்களில் புத்தகங்களையும், E-Books களையும் திறந்து வாசித்துக் கொண்டு பயணம் செய்வோர் இன்னும் எம் கண்களில் தென்படுகின்றனர். வாசிப்புக்கேற்ப புத்தகங்களின் வரவும் இருக்கவே செய்கின்றன. எனவே வாசிப்பும் எழுத்தும் மனிதன் வாழும் வரை வாழும். அதுவே மனிதப் பண்பாட்டின் அடிப்படை அம்சமாகவும் காணப்படுகின்றது. ஏனென்றால். இவ்விரண்டின் உதவியும் இல்லாமல் மற்றையவற்றை எம்மால் பெறமுடியாது.

எழுதுவது என்பது ஒரு மனஒருமைப்பாட்டுக்காரணி. இது மனிதமனங்களைக் கட்டிப்போடுகின்றது. ஒரு விடயத்தை எழுதுவதற்கு ஆரம்பிக்கும் போது எமது எண்ணங்கள் அவ்விடயத்தில் ஒன்றிவிடுகின்றன. கைத்தொலைபேசி போன்ற ஏனைய காரணிகள் அச்சமயங்களில் உறங்கிவிடுகின்றன.

சுப்பிரமணிய பாரதியார் 38 வருடங்களே வாழ்ந்தார், சுவாமி விவோனந்தர் 39 வருடங்களே வாழ்ந்தார், சுவாமி விபுலானந்த அடிகளார் 55 வருடங்கள் வாழ்ந்தார். இளமையில் எழுதிப் புகழ் பெற்றோர்களே இவர்கள். மனிதன் வாழ்க்கை குறுகிய காலங்களேயானாலும் படைப்பே மனிதனின் வாழ்க்கையைத் தீர்மானிக்கின்றது. இவ்வாறு காலங்கள் படைப்புக்கு அளவுகோல் அல்ல. அவை இறந்தும் வாழ்ந்து கொண்டிருக்கும் இறவாப் புகழை மனிதனுக்குக் கொடுக்கக் கூடியது. இவ்வாறான பெரியோர் தமக்குப் புகழ் கிடைக்க வேண்டும் என்பதற்காக எழுதியவர்களுமல்ல. வாழ்ந்தவர்களும் அல்ல. ஆனால், இறவாப்புகழ் பெற்று இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். எனவே உலகத்திற்கு எது தேவையோ அதனை சரியான முறையில் எதிர்பார்ப்பு இன்றிக் கொடுத்துக் கொண்டிருக்கும் பட்சத்தில் இறவாப் புகழ் கிடைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

இளையோர்களை அறிவுலகத்தின் திறவுகோல்கள் என்று கூறலாம். இன்றைய தொழில்நுட்ப உலகத்திற்கு இன்றைய இளைஞர்களே வழிகாட்டிகள். எமது கை பிடித்து நடைபயின்ற இளையோர்கள் இன்று கைகாட்டி வழிகாட்ட நாம் தொடருகின்ற காலமே இத்தொழில்நுட்ப யுகம். இக்காலத்தை சந்தோசமாகக் கடக்க வேண்டுமென்றால், அதனை சரியான முறையில் சந்தோசமாக அனுபவிக்கத் தெரிந்திருக்க வேண்டும். அதற்கு வழிகாட்டிகளாக இளையோர் படைப்புக்கள் வெளிவருவது அவசியமாகின்றது. செம்மொழி என்று கருதப்படும் தமிழ்மொழிக்கு வரிவடிவம், பழைமை போன்றவையே போற்றுதற்குரியன. அதனை இளையோர் தொடரும் பட்சத்தில்தான் மொழியும் வாழும்.

இளையோரிடம் இருந்து எதிர்பார்க்கும் படைப்புக்கள்:

அனுபவங்கள் தான் சிறந்த ஆசான்கள். எமது காலப்பகுதியில் எமக்குக் கிடைத்த அனுபவங்கள் எமது பிள்ளகளுக்குக் கிடைக்கவில்லை. அதேபோல் எமது பிள்ளைகளுக்குக் கிடைக்கின்ற அனுபவங்கள் எமக்குக் கிடைக்காது என்பதுதான் உண்மை. அந்த அனுபவங்கள் எமது வாழ்க்கையை மாற்றிப்போடும். எதிர்காலத்தில் நாம் வாழவேண்டிய வழிமுறைகளைக் காட்டும். புலம்பெயர்ந்த தேசங்களில் மொழியாலும் கலாசாரத்தாலும் கலந்துபட்ட சூழ்நிலையில் பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுப்புகின்றோம். அவர்கள் கொண்டுவருகின்ற அனுபவப் புதையல்களை, அவர்கள் இந்நாட்டில் பதியமிட எழுத்துக்கள் துணையாகின்றன. காலம் காட்டுகின்ற ஆவணங்களாகின்றன.

இளையோர்களிடையே நண்பர்களுடன் தொடர்பாடல், நண்பர்களிடையே ஏற்படுகின்ற கருத்து வேறுபாடுகளும் கருத்து ஒருமித்தலும், எதிர்கால வாழ்க்கைக்கு விட்டுக்கொடுத்தலின் அவசியமும், எவ்வாறான சந்தர்ப்பங்களில் விட்டுக்கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது என்பவை பற்றி விளக்கமாக தெரியப்படுத்த வேண்டிய கடமை இளையோருக்கு இருக்கின்றது.
உற்பத்திகளும், சந்தைப்படுத்தலும், தேடலும், இளையவர்களிடமே அதிகம் உள்ளது. அதற்கு அத்துறையிலும் அவ்வயதுப்பிரிவிலும் உள்ள இளையவர்கள் எழுதும் கலையே அவர்களை மற்றவர்களிடம் இருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றது. எழுத்தின் மூலம் உங்கள் துறை பெரியவர்களிடம் அடையாளப்படுத்தப்படும். இவ்வாறு வாழ்க்கைக்குத் தேவையான, வாழ்க்கைக்கு உகந்த விடயங்களைப் பகிர்ந்து கொள்வது எதிர்காலத்தை வளப்படுத்த அவசியமாகின்றது.

இளையவர்களே! உங்கள் சிக்கல்கள், வளர்ந்தோர் தருகின்ற குழப்பங்கள், கட்டாயப்படுத்தல்கள் பற்றிய உங்கள் ஆதங்கங்களை நீங்கள் வெளிப்படுத்தும் போதுதான் அதற்கான தீர்வை நீங்கள் பெறமுடியும், எம்மால் பெற்றுத்தர முடியும். எவ்வாறான சிக்கல்களை இளந்தலைமுறையினர் எதிர்நோக்குகின்றார்கள் என்னும் அறிவை பெரியவர்கள் உணர்ந்து கொள்ளமுடியும்.

காலமாற்றங்கள் சிந்தனையில் மாற்றத்தைக் கொண்டு வருவது இயற்கை. இளையோரிடம் உள்ள சிந்தனைகள் பெரியோர்களைச் சென்றடைய வேண்டுமென்றால் வாய்மொழி மூலம் வெளிப்படுத்தல் காற்றில் கரைந்துவிட எழுதி வைக்கும் எழுத்துக்களே சிந்தனைகளின் அத்தாட்சிகளாகின்றன. அவை நாளேடு, கடிதம் போன்ற வடிவங்களின் இலக்கியங்களாகின்றன என்பதைப் பெற்றோர் பிள்ளைகளிடம் புரியவைக்க முயலுங்கள்.

இளையவர்கள் எமது எழுத்துக்கு அங்கீகாரம் கிடைக்குமா? என்னும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. நம்பிக்கை இளையோருக்கு அங்கீகாரம் வழங்கும். சங்கம் தொட்டு நம்பிக்கை கொண்டு வாழ்ந்த இனமே தமிழ் இனம். காகம் கரைந்தால் விருந்தினர் வருவர் என்று நம்பி வாழ்ந்த இனம் தமிழ் இனம், "வெள்ளி தென்புலத் துறைய விளைவயல் பள்ளம் வாடிய பயனில் காலை" என்னும் புறநானூற்றுப் பாடலிலே கூறியபடி, வெள்ளி என்னும் கோள் தெற்குத் திசைக்கு வந்தால் மழை பெய்யாது என்று நம்பி வாழ்ந்தார்கள் எம் முன்னோர். எனவே தேவையானவற்றை தெளிவோடு எழுதினால் அழிவில்லை என்று நம்பிக்கை கொண்டு கணனியைத் திறவுங்கள். இளையோரே! எழுதுவதற்கு தமிழ் இலக்கியம், இலக்கணம் கற்றிருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. யாருக்கு எது தேவையோ அந்த அறிவைப் பகிர்ந்து கொள்ளுங்கள். அப்போது எதிர்காலத்திலும் எமது தமிழ்மொழி கண்டம் கடந்து ஆட்சி மொழியாகும். தமிழர்களும் உலகம் அறியும் இனமாக இனங்காணப்படுவர் என்பது உறுதி.










## கோதை நாச்சியாரை எண்ணாத மார்கழி குளிருமுண்டோ ?

நுண்ணறிவினால் தெளிந்த நல் ஞானத்தின் விளைவால் கண்ணன் மேல் காதல் பிரவாகம் கொண்டு காலமெல்லாம் காத்து கிடந்த கோதை நாச்சியாரை எண்ணாத மார்கழி குளிருமுண்டோ ?

மாதவனின் மஞ்சள் பட்டாடை போதும், உஷ்ணம் பெருகிய உடலை போர்த்தி கொள்ள என்றும், வேய்ங்குழலில் வடிந்த சிறு எச்சில் போதும், விரக வெட்பம் தாழ்த்தி கொள்ள என்றும் பலவிதமாய் பேரனுபவமாய் பரந்தளந்த பரந்தாமனிடத்து பரகசிய பாசம் வைத்த பைங்கிளியாள் ஆண்டாளின் பாசுரங்களை படித்து ஊறி உருகி பருகும் பாக்கியமாவது எமக்கு கிட்டியுள்ளது.

அப்பேற்பட்ட மன்மதன் மாதவனின் மார்பினில் உறைகின்ற மாதவ பேறு பெற்ற திருமகளை விட மேன்மையானவள் என் கண்ணம்மா என்கிறார் நம் பாரதி !



மார்கழியை அலங்கரிக்கும் மற்றுமொரு பொக்கிஷமாக உள்ள திருவெம்பாவையில் சோதியாய் நின்று ஆட்கொண்டருளும் வித்தகன் சிவனை போற்றி பணிந்து கொங்கைகள் பொங்க பூம்புனலாடி நோன்புற்று இருந்த மாதரையும் சிவனவன் பெருமையையும் சொல்லுமிடத்து, இடபாகமாய் அமர்ந்த சக்தி எத்தனை பாக்கியம் பெற்றிருக்க வேண்டும் என்று தோன்றும். அப்பேற்பட்ட உத்தம மாத்ரிசியிலும் உயர்வானவள் என் கண்ணம்மா என்று கொண்டாடுகிறார் பாரதி.

“கண்ணன் திருமார்பில் கலந்த கமலை எங்கோ ?
விண்ணவர் தொழுதிடும் வீரசிங்கா தனத்தே
நண்ணி சிவனுடலை நாடுமவ ளேங்கோ?? “

“எண்ண தித்திக்குதடா இவள் பொன்னுடலமுதம்
பெண்ணில் அரசியிவள் பெரிய எழிலுடையாள்”

திருமகள் லட்சுமி தரும் ஐஸ்வர்யங்களுடனான பொன்னை போன்ற மாசற்ற உடலை நினைக்கும் போதெல்லாம் தித்திப்பு தருமளவு மோகமும் , தூய்மையும் உடையவள் .

சிங்கத்தின் மீதேறி வரும் சக்தி போல் , பெண்களுக்கு எல்லாம் அரசியிவள் என்னும் அளவு அத்தனை ஆளுமையும் , நல்ல குணமும் கொண்டமைந்ததால் பெரிய அழகுடையவள்.

“கண்ணுள் மணி எனக்கு காதல் ரதியவள்
பண்ணில் இனிய சுவை பரந்த மொழியினாள்”

அவள் என் காதல் ரதி ஆகையால் பொக்கிஷத்தை போல என் கண்ணின் மணி போல காக்கிறேன். அவள் பேசுகின்ற சொல்யாவும் பண் பிசகாத இனிய சங்கீதமாய் இன்ப சுகம் தந்து கொண்டே இருக்கிறது. உள்ளத்து உணர்வுகள் அத்தனையையும் தாங்கி தன்னில் கொண்டு விண்ணை எட்டும் மொழி தமிழ் என்று இருக்க, சொல்ல சொல்ல குறையாத காதல் மொழியை பேசி பேசி மோட்சம் தரும் பரந்த மொழியாள். காற்றலை கடன் வாங்கி மொழிக்கு மோக பரிமாணம் கொடுத்து என் காதோரம் கவி பாடுகிறது அவள் இதழ் சொல்.

“உண்ணும் இதழமுதம் ஊற்றினாள் கண்ணம்மா”

அவள் இதழ் சொல்லே இத்தனை சுவையூறு கனி ரசமாய் அங்கங்களை ஆரவார படுத்த வல்லனவாய் இருக்கும் போது, உள்ளும் புறமும் ஒன்றென்று ஆக, உடலும் உள்ளமும் ஓர் புள்ளியில் நிசப்தமாக , ஆன்ம பசி தீர்க்க வந்த வல்ல சக்தியாய் நாவில் சரஸ்வதியை வைத்தாட்கொள்ளும் திருமகள் அவள் இதழ் அமுதை ஊற்றி ஊட்டி இறை நிலையை உணர செய்தாள்.

இவ்வாறு பெண்மையை ஆராதிக்கும் அன்பின் அரசன் பாரதிக்கு எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் சரணடைந்தே இருப்பேன்.


மணமகள் தேவை

ஆசியநாட்டில் வசிக்கும் 1979 ம் ஆண்டு பிறந்த ஆண்மகனுக்கு தகுந்த மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர்.

எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
(0049) 157 771 855 08

ஸ்ரீ வெங்கடேஸ்வரப் பெருமாள் திருக்கோவில் - ஹம்

அடியவர் குறைதீர்க்கும் வெங்கடேஸ்வரப் பெருமானை வணங்கி உங்கள் குறைதீருங்கள்

விஷ்னு ஆலய தீபம் அபிஷேகம்
ஆரம்பம் 03.12.2017 மாலை 4.30 மணிக்கு
ஸ்ரீ ஆஞ்சநேயரின் ஜெயந்திவிழா அபிஷேகம்
ஆரம்பம் 17.12.2017 மாலை:4.30 மணிக்கு
வைகுண்ட ஏகாதசி அபிஷேகம் ஆரம்பம் 29.12.2017
1 வது கால பூசை மாலை 4.00 மணி
2 வது கால பூசை இரவு 10.00 மணி
3 வது கால பூசை அதிகாலை:3.00 மணி
உங்கள் வேண்டுதலை வேண்டி மனம் நிறைய பெற்று வாழலாம்.

ஆலய தரிசன நேரம்:
காலை 9.00 மணிமுதல் 13.00 மணிவரை
மாலை 17.00 முதல் 20.00 வரை
பூஜை நேரம்: தினமும்:
காலை 10.00 மணி மாலை 18.00 மணி
Sri Venkateswara perumal Temple.e.V
Nassauerstraße 20
59065 Hamm-Mitte/Germany

Tel:02381 42 66 420
+49(09176 80 56 96 09






# நான் நானாக இல்லாது !



ஏலையா க.முருகதாசன்

பிரயாணம் செய்யும் போது என்னோடு கூடப் பயணிப்பவர்களை உன்னிப்பாக கவனிப்பேன்.

அதே போல தமக்குரிய புகையிரத நிலயத்தில் இறங்கிப் போவோரையும் உற்றுக் கவனிப்பேன்.
இவர்களிலிருந்து என்னை அந்நியப்படுத்தி, வேறுபடுத்தி"இவர்கள் யார்" இங்கு இவர்கள் எப்படி வந்தார்கள் எனச் சிந்தனைக் குதிரையில் ஏறி அமர்ந்தவுடன் பல வியப்பான உண்மைகள் தெரியத் தொடங்கும்.
இவர்களுக்கு என்ன பெயர்?.இவர்களை மனிதர்கள் என்று அழைக்கிறார்களே, இவர்களுக்கு மனிதர்கள் என்று பெயர் வைத்தவர்கள் யார்?.நான் அப்பொழுதும் இந்த மனிதர்களிடமிருந்து அந்நியப்பட்டு நிற்கிறேன்.
அந்நியப்பட்டு நிற்பதனால்தான் இவர்களை என்னால் உற்று நோக்க முடிகின்றது.இந்தப் பூமியில் தோன்றிய மனிதன் யார்?.உயிரினங்கள் எப்படித் தோன்றுகின்றன, இந்த மனிதர்களின் தோற்றுவாய் எங்கிருந்து ஆரம்பித்தது, கேள்விகள் கேள்விகள் கேள்விகள் தொடர்கின்றன.
இந்த மனிதர்கள் யார்?.இவர்கள் யார்?.அலையலையாக இவர்கள் யார் என்ற கேள்விகள் தொடர்கின்றன.
மனிதகுலத்தைச் சேர்ந்த ஒருவன் மனித தோற்றத்தினை அறிவதற்காக அவர்களிடமிருந்து தன்னை வேறுபடுத்தி, அந்நியப்படுத்தி மிகத்தூரமாக கற்பனையில் இருத்திக் கொண்டு பார்க்கையில்........
மனிதர்களின் உருவம் விசித்திரமாக இருந்தது. ஆண் பெண் என்ற வித்தியாசத்தில் இவர்கள் இருந்தார்கள்.

ஒருவர் போல இன்னொருவர் இல்லை. கட்டையாக நெட்டையாக வெள்ளையாக கறுப்பாக மாநிறமாக இருந்தார்கள்.
கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு வியப்பு ஏற்பட்டது.இந்தப் பூமியில் இவர்கள் எப்படித் தோன்றினார்கள். பல ஆண்டுகளாக மனிதர்கள் என்று சொல்லுகின்ற இந்த உயிரினங்கள் இந்தப் பூமியில் வாழ்வதால் ஐம்பூதங்களிலிருந்து உருவாக்கப்பட்டவர்களா இவர்கள்.அல்லது வேற்றுக்கிரகங்களிலிருந்து வந்தவர்களா இவர்கள்?.

இவர்கள் எப்படிப் பல்கிப் பெருகினார்கள். பல்கிப் பெருகுவதற்கு இவர்களிடம் இருந்த ஏது எது.ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள உறுப்புக்கள் ஒரே மாதிரியானவையா எனப் பல கேள்விகள் எழுகின்றன.
ஏதோ ஒரு வித்தியாசம் இருக்கின்றது.அந்த வித்தியாசந்தான் மனிதர்கள் தொடர்ச்சியாக பிறந்து பல்கிப் பெருகுவதற்கு காரணமாகலாம்.
ஒவ்வொரு ஆணும் பெண்ணும் ஒரே மாதிரி நடக்கவில்லை.ஒரே மாதிரி கைவீசவில்லை.

மனிதர்கள் என்ற உயிரினம் ஒரே மரபணுக்களிலிருந்து வந்தவர்களானால் அவர்கள் அனைவரும் ஒரே மாதிரியல்லவா இருந்திருக்க வேண்டும். அப்படி ஏன் இல்லை.

மரபணுக்கள் யாவுமே ஒரே மாதிரியானவை அல்ல. அப்படியானால் இந்த வித்தியாசத்திற்கு காரணம் என்ன?. மரபணுக்கள் சம்பந்தமாக படிக்கின்ற கட்டுரைகள்கூட அதுசார்ந்த அறிஞர்களின் முற்றுமுழுதான திட்டவட்டமான முடிவுகள் அல்ல. அவை எக்காலத்திற்கும் பொருந்துபவை அல்ல.

மனிதர்களுக்கு இருக்கும் கைகள்,கால்கள், முகத்திலிருக்கும் உறுப்புக்கள் யாவும் ஏதோ ஒரு விசித்திரமான உயிரினம் போல அவர்களைக் காட்டுகின்றன.

இவர்கள் இயங்குவதற்கு எது காரணமாக இருக்கும் என உற்று நோக்கினோம்.நான் இப்பொழுது தியான நிலையில் மனதை ஒரு வழிப்பாதையில் செலுத்தி பூமியிலிருந்து என்னை வேறுபடுத்தி மனிதர்களையே வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தேன்.
மின்சார ரயிலுக்குள் இருந்தவர்களிமிருந்து சத்தம் வந்து கொண்டிருந்தது. அந்தச் சத்தம் ஏன் இவர்களிடமிருந்து வருகிறது. இன்னும் மிக உற்றுக் கவனித்தேன்.
எனது கண்கள் காற்றையும் பார்க்கம் நிலையிலிருந்தன. அப்பொழுது ஒரு வியப்புக்குரிய நிகழ்வைப் பார்த்தேன்.
முகத்திலிருக்கும் இரு துவாரங்களிலிருந்து காற்று வெளியே போவதும் உள்ளே வருவதுமாக இருந்தது. இதுதான் இந்த மனிதர்களை இயங்க வைக்கின்றதோ...
என்னோடு மின்சார ரயிலில் இருக்கும் இந்த உயிரினங்கள் யார்?. இவர்கள் அதிசயமான உயிரினங்கள்.புதிரானவர்கள்.

## 50 வார்த்தைகளுக்குள் ஒரு குறும் கதை




### கறுப்புத்தானே இப்ப காப்பாற்றுகின்றது!

"கமலா. சரியான கறுப்பு."
சந்திரனின் காதலை, அக்கா சுகந்தி தீவிரமாக எதிர்த்தாள்..

சந்திரனின் தாயாரின் முயற்சியால் திருமணம் இனிதே நடந்தது.

எல்லாரும் அகதியாக அவுஸ்திரேலியா குடியேறுகின்றனர்.
அம்மாவைக் கூப்பிட்டது மகன். அம்மாவுக்கு சென்ரர்லிங் காசு வருவதால், அம்மாவை வைத்திருப்பது மகள்.

அம்மா இப்போது மூப்படைந்து விட்டாள். நோயினால் மலசலம் எல்லாம் படுக்கையுடன்.

"வீடு மணக்கின்றது. போய் மகனுடன் இருங்கள்" கலைத்துவிட்டாள் சுகந்தி.

மாமியாரை எந்தக் குறையுமின்றிப் பார்க்கின்றாள் மருமகள்.


RKL IMMO.de IMMOBILIEN & BAUFINANZIERUNG
Umsatzsteuer ID.-Nr. DE186406298 | Berufserlaubnis erteilt am 08.01.2002
Sinnadurai Kiritharan | Tel. 05723-914519 | www.rklimmo.de | info@rklimmo.de



Baufinanzierung / வீடு வாங்குவதற்க்கு தேவையான கடன்கள்: 100% Free service
Umfinanzierung / வீடுக்கடனை எம்மிடம் மாற்றுதல் 100% Free service
Ratenkredit / தனிநபர் கடன் 100% Free service
Sonderfinanzierung / பலவிதமான கடன் வசதிகள்
Immobilien / வீடு விற்க இல்லையேல் வாங்குவதற்கான ஒழுங்குகள்
Full Service / முழுமையான சேவை
நம்பிக்கை! உத்தரவாதம்!! 15 வருட அனுபவம்!!!

Sinnadurai Kiritharan
Tel:05723 914519


புதிய
வாடிக்கையாளர்களுக்கு
100,00€ இருந்து 500,00€
வரை
பெறுமதியான LIDL
அல்லது TANK Gutschein
01.04.2017 முதல்
31-12-2017 வரை



Tel: 05723- 914519 Mobil 0172-5214530 www.rklimmo.de
EU-VAT / Umsatzsteuer ID-Nr DE 186406298 -- Berufserlaubnis erteilt am 08.01.2002 Registrierungsnummer D-W-133-ADSJ-30

## தலைமுறை இடைவெளி!

# முதுமையின் நரைக்கும், இளமையின் உரைக்கும் இடையே நடக்கின்ற யுத்தம்.



தலைமுறை இடைவெளி

இரண்டு தலைமுறைகளுக்கு இடையே உள்ள இடைவெளியை இட்டு நிரப்புவது எப்படி எனும் கேள்வி காலம் காலமாக நம்மிடையே நிலவுகிறது. கடந்த வாரம் சில சிந்தனைகளைப்பார்த்தோம். அதன் தொடர்ச்சியாக சிலவற்றை இந்த வாரம் அலசலாம் !

தலைமுறை இடைவெளியை இட்டு நிரப்புவதில் உணர்வுகளுக்கே அதிக முக்கியத்துவம் இருக்கிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். நிலங்களில் பிளவு இருந்தால் மண்ணைப்போட்டு மூடி விடலாம், இதயங்களிடையே இடைவெளி இருந்தால் அதை உணர்வுகள் ஊற்றி தான் நிரப்ப முடியும். தலைமுறை இடைவெளி என்பது முதுமையின் நரைக்கும், இளமையின் உரைக்கும் இடையே நடக்கின்ற யுத்தம். இந்த யுத்தம் புன்னகைக்கும், போர்வாளுக்கும் இடையேயான யுத்தம். இதில் வன்முறை இல்லை, எனில் காயங்கள் உண்டு !

1.மாற்றங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும்

தலைமுறை இடைவெளி பெரிதாகிக் கொண்டே போக ஒரு முக்கியமான காரணம் மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் மனநிலை இல்லாதது தான். இன்றைய யுகத்தின் தன்மை வேறு, ரசனைகள் வேறு, நுட்பங்கள் வேறு, தகவல் தொடர்பு வழிகள் வேறு. இந்த மாற்றத்துக்குத் தக்கபடி தங்களை மாற்றிக் கொள்ள விரும்புபவர்கள் மிக எளிதாக இந்த தலைமுறை இடைவெளியைத் தாண்டி விடுகின்றனர்.

ஒரு காலத்தில் பக்கத்து ஊரில் இருக்கும் ஒரு நபருக்கு ஒரு விஷயம் சொல்ல வேண்டுமெனில் நேரடியாகப் போய்தான் பேச வேண்டும். இன்று அந்த கட்டாயம் இல்லை. தகவல் தொழில்நுட்பம் அதை எளிதாக்கியிருக்கிறது.

ஒரு காலத்தில் தலையணை சைஸ் புத்தகங்களை தூக்கிக் கொண்டு தான் திரியவேண்டும். இன்றைய ஈ.ரீடர்கள் அதை இலகுவாக்கியிருக்கிறது. இந்த மாற்றங்களை அணுகி, அரவணைக்கும் போது தலைமுறை இடைவெளிகளும் குறைகின்றன.

மாற்றங்களுக்கு எதிரான மனநிலை கொண்டிருப்பவர்களுக்கு தலைமுறை இடைவெளிகள் தலைவலியாகிப் போய்விடுகிறது.

2.பேச்சு ஸ்டைல் பழகிக்கலாம் !

"என்ன பேச்சுடா பேசுறே... எங்க காலத்துல இதெல்லாம் கெட்ட வார்த்தை. இனிமே இப்படியெல்லாம் பேசிட்டு திரியாதே' என பல பெரியவர்கள் சொல்வதுண்டு. அவர்களுக்கு இன்றைய தலைமுறையினரின் உரையாடல் ஸ்டைல்களெல்லாம் சரியில்லை எனும் மனநிலை உண்டு.

"என்ன புரோ... ஈவ்னிங் மூவிக்கு வரியா "
"ஓக்கே டூட்.வரேன்"

என ஒரு உரையாடல் நடந்தால் அதை கடந்த தலைமுறை ரசிப்பதில்லை. கடந்த தலைமுறை நாடகம் போல பேசிய காலகட்டத்தில் வாழ்ந்தது. இந்த தலைமுறை டிஜிடல் வார்த்தைகளில் வாழ்க்கை நடத்துகிறது.
தலைமுறை இடைவெளியை தவிர்க்க இந்த மாற்று மொழி ஸ்டைல்களை இரண்டு சாராரும் அரவணைத்துக் கொள்ளலாம். இந்த தலைமுறையினர் பயன்படுத்தும் பேச்சு ஸ்டைலை கடந்த தலைமுறையினர் வெறுப்புடன் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. கடந்த தலைமுறையினரின் பேச்சை இந்த தலைமுறையினர் உதாசீனம் செய்யத் தேவையில்லை.

மாறி மாறி அடுத்தவரின் மொழியின் மீது ஆர்வம் காட்டினாலே போதும் ! மொழி, எப்போதுமே உறவுகளை வலுப்படுத்துவதில் முன்னிலையில் இருக்கும் !

3.இணைந்து பணியாற்றுவது பயனளிக்கும்

இளையவர்களும், முதியவர்களும் இணைந்தே சில செயல்களைச் செய்யும் போது இந்த தலைமுறை இடைவெளி உடைந்து விடுவதுண்டு. குழுக்களாக இணைந்து செயல்பட வேண்டிய சூழல் வரும்போது பெரும்பாலும் இளைஞர்கள் ஒரு குழுவாகவும், பெரியவர்கள் ஒரு குழுவாகவும் செயல்படுவதுண்டு. அத்தகைய பாகுபாடு தலைமுறை இடைவெளியை ஊக்குவிக்குமே தவிர சரி செய்யாது.

வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் பெரியவர்களுடன் இணைந்து செயல்படும் மனநிலையை உருவாக்க வேண்டும். பெரியவர்களும் இளைஞர்களை தங்களுடன் இணைத்து பணியில் ஈடுபடுத்த வேண்டும். அத்தகைய சூழல் வரும்போது தலைமுறை இடைவெளி மறைந்து விடும்.

தொடர்ச்சி 17 ம் பக்கம்



# தலைமுறை இடைவெளி!

தொடர்ச்சி 15 ம் பக்கம்




பெரியவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது எனும் உண்மையை இளையவர்களும், இளையவர்கள் திறமைசாலிகளாக இருக்கிறார்கள் என முதியவர்களும் உணர்வது அப்போது தான்.

4.சில பேச்சுகளைத் தவிர்க்கலாம்.

இந்த தலைமுறை இடைவெளியில் கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம் ஒன்று உண்டு. அதாவது, நாம் நினைப்பதற்கும் நமக்கு முந்தைய தலைமுறை நினைத்ததற்கும் இடையே மிகப்பெரிய வித்தியாசம் உண்டு என்பது தான். அது ! நமது காலத்தில் ஜெமினி கணேசனைப் பற்றி கிண்டல் அடிப்பது எந்த விதமான பாதிப்பையும் ஏற்படுத்தாது. ஆனால் அதுவே கடந்த தலைமுறை மக்களுக்கு எரிச்சலை உருவாக்கலாம். அது போல, இந்த தலைமுறை நடிகர்களின் மீதான விமர்சனங்கள் இப்போதைய இளைஞர்களுக்கு பிடிக்காததாக இருக்கலாம்.

இப்படிப்பட்ட தலைப்புகளைத் தவிர்ப்பது, சுமுகமாக உறவு தொடர்வதற்கு வசதியாக இருக்கும். கடந்த தலைமுறையினரின் சகிப்புத்தன்மை இந்த தலைமுறையினருக்கு இருப்பதில்லை. இந்த தலைமுறையினரின் 'டேக் இட் ஈசி' பார்வை கடந்த தலைமுறையினருக்கு சரிவருவதில்லை. அத்தகைய வேறுபாடுகளைப் புரிந்து கொண்டு பேசுவதும், சிலவற்றைப் பேசாமல் இருப்பதும் தலைமுறை இடைவெளியை இறுக்கிக் கட்டும்.

5.விமர்சனப் போக்கு விலக்கு !

தலைமுறை இடைவெளியைக் குறைக்க வேண்டும் என நினைத்தால் நிச்சயம் இந்த விஷயத்தைக் கைவிட்டே ஆகவேண்டும். மாறி மாறி விமர்சனங்கள் செய்வது, ஒருவரை ஒருவர் குறை சொல்வது, ஒருவர் செய்வது சரி மற்றவர் செய்வது தவறு என குற்றம் சாட்டுவது, இவையெல்லாம் தலைமுறை இடைவெளியை அதிகரித்துக் கொண்டே இருக்கின்ற காரணிகள். இடைவெளியைக் குறைக்க வேண்டுமெனில் அதற்கு நேர் எதிராகச் செய்ய வேண்டும்.

அடுத்த நபரின் இடத்தில் இருந்து சிந்திக்கும் மனநிலையை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அப்போது அடுத்த நபரின் பார்வையில் உள்ள நியாயம் நமக்குப் புரியவரும். அது புரியும் போது நாம் தேவையற்ற விமர்சனங்களைத் தவிர்த்து விடுவோம்

ஆதி காலம் தொட்டு, இனி மீதி இருக்கும் காலம் வரைக்கும் தலைமுறைகள் வந்து கொண்டே தான் இருக்கும். தலைமுறைகளுக்கு இடையே இடைவெளிகளும் உருவாகிக் கொண்டே தான் இருக்கும். அந்த இடைவெளிகள் உறவுகளைப் பாதிக்காமலும், உணர்வுகளைக் காயப்படுத்தாமலும் இருக்க வேண்டும். அதற்காக இந்த சின்னச் சின்ன சிந்தனைகளை மனதில் வைத்திருப்போம்.

தலைமுறைகள் மாறினாலும்
மனித நேயம் காப்போம்,
இடைவெளிகள் தோன்றினாலும்
உறவுகளால் மீட்போம் !

---



## காலத்தால் அழியாத காவியமா என்ன!

### நித்யானந்தா - ரஞ்சிதா விடியோவை ஆய்வு செய்த தில்லி தடயவியல் மையம் உண்மையை வெளியிட்டது.

புது தில்லி: தன்னைத் தானே சாமியார் என்று கூறிக் கொள்ளும் நித்யானந்தா - ரஞ்சிதா இடம்பெற்ற விடியோவை ஆய்வு செய்த தடயவியல் மையம் அது குறித்து அறிக்கையை வெளியிட்டுள்ளது.
தியான பீட ஆசிரமத்தின் சாமியார் என்று அறிவித்துக் கொள்ளும் நித்யானந்தா - நடிகை ரஞ்சிதாவுடன் இருந்த ஆபாச விடியோ 2010ம் ஆண்டு செய்தித் தொலைக்காட்சி ஒன்றில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அவரது பக்தர்களிடையே நித்யானந்தாவுக்கு இருந்த நன்மதிப்பும் குறைந்தது.

இது தொடர்பான விசாரணையின் போது, அந்த விடியோவில் இருப்பது தான் இல்லை என்றும், மார்.்.பிங் செய்யப்பட்டது என்றும் நித்யானந்தா கூறியிருந்தார்.இதையடுத்து, விடியோவின் உண்மைத் தன்மையை ஆராய கர்நாடக காவல்துறைக்கு உத்தரவிடப்பட்டது. ஹைதராபாத் தடயவியல் ஆய்வு மையம் இந்த விடியோவை ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்தது.
அதில், நித்யானந்தா, ரஞ்சிதாவுடன் இருக்கும் விடியோ உண்மையானதே என்று தற்போது தெரிவித்திருந்தது. மேலும், நித்யானந்தாவின் குரலை ஆய்வு செய்த பெங்களூரு சோதனை மையம், விடியோவில் பதிவாகி இருக்கும் நித்யானந்தாவின் குரலும் உண்மையானதே என்று கூறியிருந்தது.

இதனை ஏற்றுக் கொள்ளாத நித்யானந்தா தரப்பினர், நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய, இந்த விடியோவை தில்லி தடயவியல் ஆய்வு மையம் பரிசோதித்து அறிக்கை அளிக்க உத்தரவிடப்பட்டது.
சர்ச்சைக்குரிய விடியோவை ஆய்வு செய்த தில்லி தடயவியல் ஆய்வு மையம், நித்யானந்தா - ரஞ்சிதா விடியோ பதிவு உண்மைதான். அதில் இருப்பது நித்யானந்தாவும், ரஞ்சிதாவும்தான் என்பது உறுதியாகியுள்ளது. இந்த விடியோ மார்.்.பிங் செய்யப்பட்டது இல்லை என்றும் அறிவித்துவிட்டது.
இந்த அறிக்கையை பெங்களூரு மாநகர காவல்துறை கூடுதல் ஆணையர், ராம்நகர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். இதனால், சுமார் 7 ஆண்டுகாலம் கடந்து வந்த வழக்கில் முக்கியத் திருப்பம் ஏற்பட்டுள்ளது.

ஒரு படத்தை தணிக்கை குழு ஒருநாளில் ஆய்வு செய்யும். தடயம் துலக்கும் குழுவிற்கு ஏழுவருடம் பிடிக்கும். மேல் முறையீடு செய்தால் மீண்டும் ஏழுவருடங்கள். பின்பு என்ன அவர்களைக் கேட்டாலே ஆம் என்ன தப்பு இப்போ? என்று சொல்லும் காலத்திற்கு வந்துவிடுவார்கள். இவர்களது வீடியோ என்ன காலத்தால் அழியாத காவியமாகிவிட்டதா?



# உளநலம் காப்போம்.

தாமரை



**" மனதில் உறுதி வேண்டும்!**
**வாக்கினிலே இனிமை வேண்டும!"**

ஆம், நம்முள் எத்தனை பேருக்குத்தான் இந்த உறுதியான மனம் உண்டு? எம் உடலுக்கு ஏதும் பிரச்சனை வந்து விட்டால் வைத்தியரை அணுகுகின்றோம். இதுவே உளத்திற்கு ஏதும் பிரச்சனை வந்து விட்டால்,யாராவது சூனியம் வைத்து விட்டார்கள் என்றும்,சாத்தானின் பார்வை பட்டு விட்டதென்றும் சொல்லிக் கொண்டு மாந்திரிகரை அணுகுகின்றோமே தவிர வைத்தியரை நாட நினைப்பதில்லை. உளப் பிரச்சனை தீவிரம் அடையும் போது அது உள நோயாக மாறுகின்றது

ஆரம்ப கால கட்டங்களில் மன நோயாளிகளைக் கட்டி வைத்து அடித்து துன்புறுத்தி அவரவர் மதகுருமார்களே அவர்களைக் கையாண்டனர்.பின்னர் சிக்மன்ட் ப்றொய்ட் என்பவர் இதற்கான மருத்துவ முறைகளைக் கண்டு பிடித்தார்.இதனால் இவர் உளவியலின் தந்தை எனப் போற்றப்பட்டார்.இந்த உளநோய் அல்லது மனச்சோர்வு நோய் என்றால் என்ன? என்று பார்த்தோமானால்"ஒரு மனிதனுக்குள் எழுகின்ற எதிர்மறை எண்ணங்கள், எதிர்மறை சிந்தனைகள், எதிர்மறை நடத்தைகள் போன்ற மனித இயக்கங்கள் இரண்டு வாரங்களுக்கு மேலாக நீடித்துக் காணப்படுமேயானால் இது ஒரு மனச்சோர்வு நோய் அல்லது உளநோய் என வரைவிலக்கணப்படுத்தலாம். இதை ஆங்கிலத்தில் டிப்ரஸன் என்றழைப்பார்கள். இதில் கிட்டதட்ட 300 வகை உண்டென உளவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்

உலக சுகாதார அமைப்பு (W.ü.O) அண்மையில் வெளியிட்ட அறிக்கையின் படி உலகளாவிய ரீதியில் கிட்டத்தட்ட 450 மில்லியன் மக்கள் டிப்ரஸனால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், உலகிலுள்ள பொதுவான நான்கு நோய்களில் இது இரண்டாவது இடத்தைப் பிடித்திருப்பதாகவும் அவர்களது வரிசைப்படுத்தலின்படி மேலும், இந்நோய் பெண்களுக்கே அதிகம் காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகின்றன. இதில் ஐக்கிய ஐரோப்பா முழுவதும் 30மில்லியன் பேர் நோயாளிகள் காணப்படுகினறனர்.ஆகக் கூடிய நோயாளிகள் உள்ள நாடாக அமெரிக்கா காணப்படுகின்றது. இங்கு இரண்டில் ஒருவருக்கு என்ற விகிதத்தில் காணப்படுகின்றது. இரண்டாவது இடத்தில் சீனாவும், இந்தியா மூன்றாவது இடத்திலும்,இங்குநான்கில் ஒருவருக்கு என்ற விகிதத்திலும், இலங்கையில் எட்டில் ஒருவருக்கும் இந்நோய் காணப்படுகின்றது. ஜேர்மனியில் 70 % சதவிகிதமானவங்களுக்கு இந்நோய் காணப்படுகின்றது.

இதில் ஹிஸ் ரீரியா இஸ்கிஷோப்ரணியா, பைபோலஸ்,மனிக், பனிக், அல்ஷைமர், டெமன்ஷியா,பேபிபுளுாஸ் என நாட்பட்ட மனநோய்கள் கூடுதலாகக் காணப்படுகின்றன. இதில் பேபி புளுாஸ் எனப்படுவது புதிய அம்மாக்களுக்கு மகப்பேற்றின் பின்னர் வருவது. இது பெரும்பாலும் மேலைத் தேய நாடுகளில் காணப்படுகின்றது.

இந்நோய் வருவதற்கான காரணங்களை இருவகையாககப் பிரிக்கலாம்.அவை 1.அகக்காரணி,2.புறக்காரணி. அகக்காரணிகளை நோக்கின் 1.மூளையில் சுரக்கப்படும் இரசாயணங்களில் சமநிலை காணப்படாமை. 2.மரபணு,3.கன்சர், கிட்னி பழுது,ஹார்ட் அற்றாக் மற்றும் மூப்படைதல் போன்ற உடல்நலக் குறைபாடுகள்,4.சில மருந்துகளோட பக்க விளைவு,5.மகப்பேற்றின் பின் வரும் மாற்றங்கள். என்பனவாகும்.
அடுத்துப் புறக்காரணிகளைநோக்கின்,அவை பல. அதில் சில 1.உலகமயமாதல், 2.இயற்கை அனர்த்தம், 3.யுத்தம்,4. சமயம்,மதமாற்றம்), 5.சமூகம் (மூடநம்பிக்கைகட்டுப்பாடுகள்) 6.கைதிகள்,7.அல்ஹகோல், புகைத்தல்,8.உணவுப்பழக்கங்கள்,9.வீட்டுவன்முறை,10.பாலியல்துஷ்பிரயோகம்,11.பிரிவுத்துயர் 12.இழப்புத்துயர், 13. தொடர் தோல்விகள், 14.தொடர் ஏமாற்றங்கள், 15.தொழில் (கடுமையான அழுத்தங்கள், நட்டங்கள்) 16.உடற்பருமன்,17.நித்திரையின்மை,18.ஓய்வின்மை
19.தனிமை,20.அதிககவலைபோன்றன. இதற்கான தீர்வுகளாக மருந்துகள் இசைகோ தெரபிகள்,உளநல ஆலோசனைகள்,உணவுப்பழக்கங்களை சீர்செய்தல் வாழ்க்கையின் மாற்றங்களை ஏற்றுக் கொள்ளல், யோகா, மூச்சுப்பயிற்சி, நடைப்பயிற்சி மற்றும் தியானம் .போன்றன மனச்சோர்வு நோயிலிருந்து விடுபட உதவி செய்கின்றன



இந்நோய் நாம் கண்டு வியப்புறும் பிரபலங்களுக்கும் வந்துள்ளது. உளவியலின் தந்தை சிக்மண்ட்ப்றொய்ட், ஆபிரகாம்லிங்கன்,சேர் ஐசாக் நியூட்டன், நிலவில் காலடி எடுத்து வைத்த இரண்டாவது மனிதன் வூஸ் அல்ட்ரின், ஜேர்மனிய இசையமைப்பாளர் லுட்விக் வான் பீத்தோவன்,இளவரசி டயானா,இன்றைய சினிமா பிரபலமான சாருக்ஹான்,மனிஷாகொய்ராலா மற்றும் தீபிகா படுகோன்.இவர்கள் மக்கள் முன்னிலையில் தங்களுக்கு வந்த நோய்பற்றி வெளிப்படையாக பேசியதே ஓர் விழிப்புணர்வுதான்.

படபடப்பு,பசியின்மை,தூக்கமின்மை,அளவிற்கதிக சந்தேகம், அளவிற்கதிககோபம், அளவிற்கதிக மறதி, தற்கொலைக்கு முயற்சித்தல் இவ்வாறு இயல்பு நிலையிலிருந்து மாறுபாடான எண்ணங்கள்,சொல்கள்,செயல்கள் தங்களிலோ அல்லது தங்களுக்கு நெருக்கமானவங்களிலோ காணப்பட்டால் உளநல ஆலோசகர் அல்லது உளநல மருத்துவரை அணுகுதல் சாலச் சிறந்தது. வருமுன் உளநலம் காப்போம்.





யாழ்ப்பாணத்தில் உங்கள் விடுமுறைக்கு தங்க உகந்த இடம்!

Sakthi holiday home

சிறந்த கவனிப்பு சிறுவர்களுக்கான பூந்தோட்டம்
நீச்சல் தடாகம், உட்பட மேலும் பலவசதிகளுடன்.

Near Kondavil depot, to jaffna10mins.

Local Tp no: 0094214503861
Thavam 0094773002075
Kurubaran 00447904762684

Tv ,kitchen, 2bath rooms
More facilities

WWW. Sakthihome.Com

2 Bedrooms
House per day
8,000.00rps
For one week
40,000.00rps.

3 Bedrooms
House per day
10,000.00rps
For one week
50,000.00rps



Wi-Fi internet

160/24 A-H flats - Rajaveethy- **Kopay South -Kopay**

மொழிபெயர்ப்புச் சேவை!
V.Ramakrishnan

உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம் ( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம் (Ermächtigte)அளிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில் துரிதகதியில் மொழிபெயர்ப்பதற்கும் நாடவேண்டிய இடம்.

**A.to.Z Dolmetscher - und Übersetzungsdienst**
**Für alle weltsprachen**

Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888

Lise-Meitner-Str.20
45144 Essen

## நேருவுடன் உடலால் தொடர்பு கொள்ள என் தாயாருக்கு நேரம் இருந்தது இல்லை!




# காதலிக்க நேரமில்லை

நேருவுடன் உடலால் தொடர்பு கொள்ள என் தாயாருக்கு நேரம் இருந்தது இல்லை!
முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேருவும் மவுண்ட் பேட்டன் பிரபுவின் மனைவியும் உடல்ரீதியான தொடர்பு வைத்திருக்க வாய்ப்பில்லை என்பது ஒரு புத்தகத்தின் மூலம் தெரியவந்துள்ளது.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இந்தியாவின் கடைசி 'வைஸ்ராய்' ஆக பதவி வகித்தவர் லார்ட் லூயிஸ் மவுண்ட் பேட்டன். இவரது மனைவி எட்வினா.
எட்வினாவுக்கும் மறைந்த முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேருவுக்கும் இடையில் ஆரம்பத்தில் ஏற்பட்ட நட்பு நாளடைவில் காதலாக மாறியது. ஒருவரோடு ஒருவர் உணர்வுகளால் ஈர்க்கப்பட்டு கடிதங்களால் தங்களது காதலை பரிமாறி கொண்டனர்.




பொது இடங்களிலும் ஜவஹர்லால் நேருவும் எட்வினாவும் மிக நெருக்கமாக காணப்பட்டதால் இந்த காதல் விவகாரம் வெளிப்படையாகவே இருந்தது. இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்த பின்னர் தனது கணவர், குழந்தைகளுடன் எட்வினா பிரிட்டன் நாட்டுக்கு புறப்பட்டு சென்று விட்டார். அதன் பிறகும் நேருவுடன் கடிதங்கள் மூலமாக தனது காதலை அவர் வளர்த்து வந்தார்.
இந்நிலையில், நேருவுக்கும் எட்வினாவுக்கும் இடையில் மிக ஆழமான காதல் இருந்ததாக எட்வினாவின் மகள் பமீலா ஹிக்ஸ் நீ குறிப்பிட்டுள்ளார்.

மவுண்ட் பேட்டன் வாழ்க்கையை மையமாக வைத்து அவர் எழுதியுள்ள புத்தகத்தில், 'தனது உள்ளுணர்வு மற்றும் கல்வியறிவுக்கு ஏற்றதொரு துணைவராக நேருவை எனது தாயார் எட்வினா நேசித்தார். அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் எவ்வளவு ஆழமாக நேசித்தனர்? ஒருவர்மீது மற்றவர் எவ்வளவு மதிப்பு வைத்திருந்தனர்? என்பதை நேருவின் கடிதங்கள் வாயிலாக நான் அறிந்து கொண்டேன்.

அவர்களின் உறவு மனதளவிலானது தானா? அல்லது, உடல் அளவிலானதுமா? என்பதை அறிந்து கொள்ள நான் ஆர்வமாக இருந்தேன். ஆனால், அவர்களுக்கு இடையில் நிகழ்ந்த கடித பரிமாற்றங்களை ஆய்வு செய்த பிறகு எனது ஆர்வத்தில் அர்த்தம் இல்லை என்பது புரிந்தது.

உடல்ரீதியான உறவு வைத்துக் கொள்ள அவர்கள் இருவருக்கும் நேரம் இருந்ததில்லை என்பதுடன் அவர்கள் எந்நேரமும் பணியாட்கள், போலீஸ் அதிகாரிகள் மற்றும் பொதுமக்களுக்கு நடுவில் வாழ்ந்துள்ளனர். இதை எனது தந்தை மவுண்ட் பேட்டனின் தலைமை உதவியாளரும் பின்னர் என்னிடம் உறுதிப்படுத்தினார்.

## மரகதக்கல் பதித்த ஒரு மோதிரத்தை நேருவுக்கு பரிசளிக்க விரும்பிய எட்வினா.

இந்தியாவில் இருந்து பிரிட்டனுக்கு புறப்படும்போது மரகதக்கல் பதித்த ஒரு மோதிரத்தை நேருவுக்கு பரிசளிக்க எனது தாயார் எட்வினா விரும்பினார்.
ஆனால், அதை நேரு ஏற்றுக் கொள்ள மாட்டார் என்பதால் அதை அவரது மகள் இந்திராவிடம் அவர் அளித்தார். தனது பணத்தை பிறருக்கு அளித்து விடும் பழக்கம் கொண்ட நேருவுக்கு எப்போதாவது பொருளாதார ரீதியாக நெருக்கடி வந்தால், இந்த மோதிரத்தை விற்று அவரது பணக்கஷ்டத்தை தீர்க்குமாறு இந்திராவை எட்வினா கேட்டுக் கொண்டார்' என அந்த புத்தகத்தில் பமீலா ஹிக்ஸ் நீ குறிப்பிட்டுள்ளார்.



மவுண்ட் பேட்டன் குடும்பத்தாருக்கு அளிக்கப்பட்ட வழியனுப்பு விழா விருந்தில், 'நீங்கள் எங்கெல்லாம் சென்றீர்களோ, அங்கெல்லாம் ஆறுதலையும், நம்பிக்கையையும், ஊக்கத்தையும் நீங்கள் விதைத் திருக்கிறீர்கள். அதனால், இந்திய மக்கள் உங்களை தங்களில் ஒருவராக ஏற்றுக் கொண்டு அன்பு செலுத்தி வந்துள்ளனர். நீங்கள் எங்களை விட்டு பிரிந்து செல்வதை இந்திய மக்கள் மிகுந்த வருத்தத்துடன் பார்க்க வேண்டியுள்ளது' என எட்வினாவிடம் நேரு கூறியதையும் பமீலா ஹிக்ஸ் நீ பதிவு செய்துள்ளார்.
"Daughter of Empire: Life as a Mountbatten" என்ற தலைப்பில் இந்த புத்தகம் பிரிட்டனில் கடந்த 2012-ம் ஆண்டு வெளியானது. தற்போது இந்த புத்தகம் இந்தியாவில் வெளியாகியுள்ளது.

S.J. ASIAN - AFRO STORE






உங்கள் இலத்திற்கு தேவையான அனைத்து
மளிகைப் பொருட்களுக்கும் நாடுங்கள்
பசுமையான மரக்கறிகள்
மற்றும் தரம்மிக்க
கடல் உணவுப் பொருட்கள்
அனைத்தும் நிதான விலையில் பெற்றுப் பயனடையுங்கள்.

**Mannheim**
S1 - 11
68161 Mannheim
Tel.: 0621/86243212
Indo-Afro Ravels
info@asian-afro.de

**Ludwigshafen**
Schulstr. 7-9
67059 Ludwigshafen
Tel.: 0621/54544276
info@asian-afro.de


Indo Afro Travels
68161 Mannheim

உங்கள் பயணங்களை மகிழ்வூட்ட
சிறந்த விமானச் சீட்டுக்களுக்கு
எம்மை நாடுங்கள்.

Lyca TV

உலகின் மிகப் பிரமாண்டமான தொலைக்காட்சி நிலையம்

ஒருவருட இணைப்புச் சந்தா

£/€69

SET TOP BOX INCLUDED

புதுப்பித்தல்

£/€49

14 மாதங்கள்



LycaTV App ஐ Download செய்து பார்வையிடலாம்

ஒரு மாதச் சந்தா £/€4.99 மட்டுமே

Google play · App Store · tv · Roku · AirPlay · chromecast · Samsung SMART TV · LG Smart TV · androidtv · amazon fireTV · kindle fire · XBOX

50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்

விஜய் · ZEE தமிழ் · KTV · SUN · Athavan TV · JAYA TV HD · Lyca Classic · Lyca HD

1000க்கும் அதிகமான TAMIL திரைப்படங்கள்



UNITED KINGDOM 0207 132 2727

GERMANY 069 1200 7102

FULL TERMS AND CONDITIONS ARE AVAILABLE AT WWW.LYCATV.TV. LYCATV IS A TRADEMARK AND SERVICE MARK BELONGING TO LYCAMEDIA LTD. ANY PRODUCT OR SERVICE OR TRADE NAME OTHER THAN THOSE OWNED BY LYCAMEDIA LTD, THAT IDENTIFY A THIRD PARTY AS THE SOURCE, THEREOF MAY (EVEN IF NOT SO INDICATED) BE THE SERVICE OR TRADEMARK OF THAT RESPECTIVE ENTITY OR INDIVIDUAL. ANY UNAUTHORIZED USE OF THE LYCATV MARK IS STRICTLY PROHIBITED.

www.lycatv.tv

"இலக்கியச் செம்மல்"
இந்துமகேஷ்






## "இது பொய்யல்ல மெய்"

எல்லாப் புளுகும் எங்கிருந்து தொடங்குகின்றது? - தன்னிடமிருந்துதான்.
எல்லாப் புளுகும் எங்கே போய் முடிகிறது? தன்னிடமே!
புளுகுவோம்! என்று ஆரம்பித்தேன்.
ஓம் ஓம் எங்களிடமில்லாத புளுகுகளா? புளுகுவோம்! புளுகுவோம்! என்று உற்சாகப் படுத்தியவர்கள் பலர்.
சரி புளுகுவோம்! என்றேன்:
புளுகுங்கள்! என்று என்னைப் பார்க்கிறார்கள் அவர்கள்.
இது என்னைப் பற்றிய புளுகு அல்லவே! நம்மைப் பற்றியதல்லவா? சேர்ந்துதானே புளுகவேண்டும் அப்போதுதானே நமது பெருமைகளை இந்த உலகம் அறியும்?
ஒரு சிலர் உற்சாகம் காட்டுகிறார்கள்.
பலரிடம் தயக்கம்.
பெருமைப்பட என்ன இருக்கிறது நம்மிடம்?!

எல்லா மனிதர்களும் சிறுமைகளைப்பற்றிப் பேசத்தயாராயிருப்பதுபோல் பெருமைகள் பற்றிப் பேசுவதில்லை என்பது பொதுவான குணாதிசயமாய் மாறியிருக்கிறது.
சிறுமைகளைத் திட்டித் தீர்ப்பதற்குத் தயாராயிருப்பதுபோல் பெருமைகளைத் தட்டிக்கொடுப்பதில் வேகம் இருப்பதில்லை.

தமிழன் என்றோர் இனமுண்டு
(நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம்)


நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம்

தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவற்கொரு குணமுண்டு
அமிழ்தம் அவனுடை மொழியாகும்
அன்பே அவனுடை வழியாகும்

அறிவின் கடலைக் கடைந்தவனாம்
அமிர்தத் திருக்குறள் அடைந்தவனாம்
பொறியின் ஆசையைக் குறைத்திடவே
பொருந்திய நூல்கள் உரைத்திடுவான்

கலைகள் யாவினும் வல்லவனாம்
கற்றவர் எவர்க்கும் நல்லவனாம்
நிலைகொள் பற்பல அடையாளம்
நின்றன இன்னும் உடையோனாம்

சிற்பம் சித்திரம் சங்கீதம்
சிறந்தவர் அவனினும் எங்கே சொல்
வெற்பின் கருங்கல் களிமண்போல்
வேலைத் திறத்தால் ஒளிபண்ணும்

மானம் பெரிதென உயிர்விடுவான்
மற்றவர்க் காகத் துயர்படுவான்
தானம் வாங்கிடக் கூசிடுவான்
தருவது மேல் எனப் பேசிடுவான்


இரசிகமணி கனக செந்திநாதன்

பெருமைகள் பேசப்படவேண்டும். அது நம் இனத்தின் முன்னேற்றத்துக்கு இன்னும் வலுச் சேர்க்கும். அதனால் தொடர்ந்தும் பேசுவோம் புளுகுவோம்!

தமிழ் இலக்கிய உலகம் உலகெங்கும் வேரோடிப் படர்ந்திருந்தாலும் அது கிளைபரப்பி இதழ் விரித்து மலர்களென மணம்பரப்பும் நாடுகள் தோறும் தனக்கென்றொரு தனித்துவத்தையும் இயல்பாகக் கொண்டிருக்கிறது. ஈழத்து இலக்கியம் என்பதும் அதில் ஒன்று.
ஈழத்துப் படைப்பிலக்கியவாதிகளில் பலர் நமது இலக்கியம் பற்றிப் பெருமிதம் கொண்டிருந்தாலும் அவர்களில் முன்னணியில் நிற்பவர் இரசிகமணி!
இரசிகமணி கனக செந்திநாதன் அவரது இயற்பெயர். திருச்செவ்வேல் 1916,ல் பிறந்த அவருக்கு இந்த ஆண்டு நூற்றாண்டாய் மலர்ந்திருக்கிறது.
1963,ல் ஈழத்து இலக்கிய வளர்ச்சி என்னும் நூலை வெளியிட்டு ஈழத்து அறிஞர்களை அவர்களது படைப்புக்களை அவர்களது ஆளுமைகளைப் பெருமைப்படுத்தி அவர்களுக்குப் புகழ் சேர்த்தார்.
படைப்பிலக்கியவாதியாக, தமிழாசானாக, விமர்சகராக என்று பன்முகத் திறன் வாய்ந்த இரசிகமணி -நடமாடும் வாசிகசாலை!- என்று வர்ணிக்கப்பட்டார்.

1971 காலப்பகுதியில் நான் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிட்ட இதயம் மாத இதழில்
-நமது கலைஞர்- என்னும் பகுதியை ஆரம்பித்து அதில் அவரது பேட்டியை பிரசுரிக்கும் எண்ணத்தோடு குரும்பசிட்டி சென்று அவரைச் சந்தித்த அந்த நாளை இப்போது மனத்தில் நிறுத்துகிறேன்.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகாலத்திற்கும் மேலாக தமிழ் இலக்கியத் தொண்டு புரிந்துவரும் ஒருவர் இருக்கிறாரென்றால் அவர் நிச்சயமாகத் திருச்செவ்வேல் அவர்களாகத்தான் இருக்க முடியும். இலக்கியத்தில் இவர் கைபட்டுச் சிறக்காத எந்தத் துறையுமே இல்லை என்னும் அளவுக்கு கட்டுரை கவிதை சிறுகதை நாவல் நாடகம் விமர்சனம் ஆகியவற்றில் தமது திறமையைக் காண்பித்தவர். இந்தத் திருச்செவ்வேலுடன் உரையாடத் தொடங்கிவிட்டால் பொழுது எப்படிப் போயிற்று என்றே தெரியாது இனிமை சொட்டச் சொட்ட இலக்கியம்பற்றி இவர் பேசிக்கொண்டிருப்பதை நாள்முழுதும் கேட்டுக்கொண்டிருக்கவெண்டும்போல் தோன்றும். யார் இந்தத் திருச்செவ்வேல் எங்கள் இரசிகமணியின் இயற்பெயர் அதுதான்: திருச்செவ்வேல். ஈழத்துத்தமிழ் இலக்கியம்பற்றிப் பேசும்போது அந்த மெலிந்த உடலில் காணப்படும் உற்சாகம் கண்களில் சுடர்விடும்ஒளி முகத்தில் நிலவும் பெருமை.. இதுவரை இலக்கியத்தின் வளர்ச்சியினை அபார ஞாபகசக்தியோடு வரிசைக்கிரமமாக அவர் சொல்லும் திறமை.. இரசிகமணி ,இரசிகமணிதான் என்று நம்மை இறும்பூதெய்த வைக்கின்றன. இந்தக் கலைஞன் எங்கள் சொத்தல்லவா?

(இதயம் 1971 - இதழிலிருந்து)

தொடர்ச்சி 22 ம் பக்கம்



# புளுகு

21 ம் பக்கத் தொடர்ச்சி...

எங்கள் பெருமைகளை நிலையாகப் பதிப்பிக்க உதவுவது எழுத்து.

சமகாலப் படைப்பாளிகள் நிகழ்கால சம்பவங்களோடு தங்கள் பார்வையை மட்டுப்படுத்தியிருப்பதால் நமது முன்னவர் பெருமைகள் குறித்து அறிவதில் ஆர்வம் காட்டுவது குறைவாகவே ,ருக்கிறது. எனினும், சங்ககால இலக்கியங்களில் ஆர்வம் கொண்டுள்ள சிலர் புளுகத் தயாராக ,இருப்பது மகிழ்வைத் தருகிறது. உங்களோடு சேர்ந்து நானும் புளுக வருகிறேன் என்று சங்க இலக்கியத்தோடு வந்தார் எழுத்தாள நண்பர் சின்னத்துரை இரவீந்திரன்.

அவரது குறிப்புக்களிலிருந்து……..



திரு. சின்னத்துரை இரவீந்திரன்.

-யாருமே புளுக வரவில்லை-
சரி நான் என்றாலும்
புளுகலாம் என்று நினைக்கிறேன்.

புறநானூறு எங்கள் மூதாதையர்
வீரம்பற்றி உரைப்பது.
அதில் சேர மன்னன்
பெருஞ்சேரலாதனுக்கும்
சோழ மன்னன் கரிகால்

பெருவளத்தானுக்கும் இடையே போர் மூண்டது. இருவருமே போர் அறம் காக்கும் சான்றாண்மை மிக்க மன்னர்கள் . சான்றாண்மை மிக்கவரிடையே ஏன் போர் மூண்டது பேசித்தீர்த்திருக்கக் கூடாதா என்று என்னைக் கேட்கக் கூடாது. அவ்வாறு இருந்திருந்தால் இன்று தமிழன் நாடற்றவனாக இருந்திருக்க மாட்டான் (மண், பெண், பொன்) இதைவிட வேறு காரணம் இருக்க முடியாது. வெண்ணிப் பறந்தலை என்னும் இடத்தில் இப்போர் நடந்தது.

போரின் போது தவறுதலாக பெருஞ்சேரலாதன் முதுகில் அம்பு தைத்தது இதை அவமானமாகக் கருதிய பெருஞ்சேரலாதன் வாளுடன் வடக்கிருந்து உயிர்நீத்தான். (தாய்மண் மீட்க போராட்டம் நடந்த வேளை அகப்பட்டதை விற்று புறமுதுகு காட்டி நாட்டை விட்டு ஓடி வந்ததும் அன்றி போராட்டத்தை பயங்கரவாதப் போராட்டமாக உலக நாடுகளுக்கு அடையாளம் காட்டியவர்கள் நாங்கள் இந்த சான்றாண்மைமிக்க வீர பரம்பரையில் உதித்தவர்கள்)
வரலாறு புளுகோ அல்லது நான் சொல்வது புளுகோ நீங்கள்தான் சொல்ல வேண்டும்.பெருஞ்சேரலாதன் வடக்கிருந்த போது அவன் ஊர் எப்படித் தவித்தது என்பதை பதிவு செய்கின்றார் கழாஅத்தலையர் என்ற புலவர்.

மண் முழா மறப்ப பண் யாழ் மறப்ப
இருங் கண் குழிசி கவிழ்ந்து இழுது மறப்ப
சுரும்பு ஆர் தேறல் சுற்றம் மறப்ப
உழவர் ஓதை மறப்ப விழவும்
அகலுள் ஆங்கண் சீறூர் மறப்ப
உவவுத் தலைவந்த பெருநாள் அமையத்து
இருசுடர் நம்முள் நோக்கி
ஒருசுடர் புன்கண் மாலை
மலைமறைந் தாங்குத் தன்போல்
வேந்தன் முன்புகுறித்து எறிந்து
புறப்புண் நாணி மறத்தகை மன்னன்
வாழ் வடக்கு இருந்தனன் ஈங்கு
நாள்போற் கழிய ஞாயிற்றுப் பகலே.



முழவு

முழவு என்று சொல்லப்படும் தோல் வாத்தியம் (ஏறத்தாழ மிருதங்கம் போன்றது)அதன் சத்தமே கேட்கவில்லை.
- யாழ் இசை கேட்கவில்லை
- நெய் கடைகின்ற பெரிய பானை கவிழ்ந்து கிடந்தது.
- வண்டுகள் மொய்க்கும் மதுவை எந்த உறவுக்காரரும் தேடவில்லை.
- உழவர்கள் உழுவதற்கு வயலுக்கு போகவில்லை.
- அந்த சிற்றூர் விழாக்களை மறந்திருந்து.
- சூரியனும் சந்திரனும் ஒரே நேரத்தில் தோன்றியது போல் நேருக்கு நேர் நின்று போர் செய்த காட்சி.
- சூரியன் மலை இடுக்கில் மறைவதுபோல் தன்னை ஒத்த வேந்தன் தவறுதலாக விட்ட அம்பால் புறப்புண்பட்ட சேரன் வாளோடு வடக்கிருந்தான்.




இந்த புறநானூறு வீரத்திற்கு எம்மவர் வீரம் எந்த வகையிலும் குறைந்தது அல்ல, (அந்த மக்களோடு ஒப்பிடும்.இடத்து புறமுதுகு காட்டிய புலம்பெயர் மக்கள் வெட்கப்படத்தான் வேண்டும்.)

(வளர் தமிழ் 12 இல் இது ஓர் பாடமாக அமைந்துள்ளது)




# தன்னோடு தானே, ஒரு உடலில் இரு உணர்வு.



சி.சிவவினோபன்

இன்னும் இருபது ஆண்டில் என்ன நடக்கும்?, என்ற எண்ணம் மறைந்து என்ன நடக்குமோ! என்ற பயம் தான் பிறந்துள்ளது. ஒருபக்கம் உலகமழியும் என்கின்றார்கள், மறுபக்கம் புதிய உலகம் காண்போம் என்கின்றார்கள். உலகில் நடக்கும் மாற்றங்களை விட மனிதன் தன்னுடைய வாழ்க்கை நிலையை மாற்றும் போக்குதான் பெரிய புதிராகவும், கணிக்க முடியாத நிகழ்வாகவுமுள்ளது.

இந்தக் கணனியுலகில் எதிர்வு கூற முடியாத எண்ணற்ற விடையங்கள் கண்ணிமைக்கும் கணப்பொழுதில் நிகந்தேற, மாற்றமொன்றே மாறாதது என்று மனம் ஏற்றுக்கொண்டு வாழப் பழகி விட்டோம். கற்றது கடுகளவெனினும் கடலளவு சிந்திக்குமாற்றல் பெற்றுவிட்டோம். உடலால் உழைத்த மனிதன் உட்க்கார்ந்த இடத்தில் இருந்துகொண்டு உலகையே உசுப்பும் அறிவாற்றல் பெற்றுவிட்டான். இன்று அசைவதற்குச் சோம்பல்ப்படும் அதே மனிதன் தான், அன்று அரை நாளில் செய்த அதே வேலையை இன்று அரை நொடியில் செய்துவிடலாம் என்ற முன்னேற்றத்தை கண்டிருக்கின்றான்.

தமிழில் இலக்கிய இதிகாசங்கள், ஹீப்ரு மொழியில் விவிலியம்(பைபிள்), மாயன் கலாச்சார எதிர்வுகூறல்கள் என்று பல சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மாறிவரும் உலகை கணித்தனர். மாயன் கலாச்சார எதிர்வுகூறல்களை புரிந்து கொள்ளவும் சரியான விளக்கம் கொடுக்கவும், அந்த இன மக்களின் அடிச் சுவடு கூட இல்லாமல்ப் போய்விட்டது. அதனால் அவர்களின் கண்ணோட்டத்தில் உலகின் போக்கைப் பார்க்க முடியாத நிலையுள்ளது. கால ஓட்டத்தில் ஒவ்வொன்றும் நடந்து முடிந்த பின் அதை விவிலிதில்(பைபிள்) உள்ள வார்த்தைகளுடன் இணைத்து இவை முன்பே கூறப்பட்டு விட்டன என்று ஒப்புக்காட்டப்படும். ஆனால் தமிழின் சிறப்பு என்னவென்றால் கதை வடிவிலும் கற்பனை செய்யக் கூடிய எண்ணக் கூற்றுகளாகவும் பல எதிர்கால எதிர்வுகூறல்கள் கூறப்பட்டுள்ளன.

அனால் அதிலும் ஒரு குறைபாடு உள்ளது, பல விடையங்களைப் பதிவு செய்த முன்னோர்கள் இலகுவில் விளங்கும் வகையில் விளக்கவில்லை, மற்றும் அதை விளங்குமளவு அறிவு ஞானம் இன்னும் எமக்கு உதிக்கவில்லை. இது தான் எம்மில் உள்ள குறைபாடு. உதாரணத்திற்கு ஒரு கதை பார்ப்போம், கண்ணப்ப நாயனார் தன் கண்களை பறித்து லிங்கத்திற்குக் கண்கொடுத்தார் என்ற கதை கேட்க்கும் போது பக்தியோடு பார்த்த எமக்கு அந்தப் பக்திக்குப் பின்னால் கண் தெரியாதவருக்கு கண் மாற்று அறுவை சிகிச்சை செய்து பார்வை வர வைக்கலாம் என்ற மருத்துவ ஞானம் பிறக்காமல் போய் விட்டது. அந்த வகையில் ஒரு அதிர்ச்சியூட்டும் எதிர்வுகூறல் தான் இப்போது பார்க்கப் போகின்றோம்.

மனிதன் இத்தனை தொழில் நுட்ப வளர்ச்சியையும் செய்ததற்கு முக்கிய காரணமே இன்புறுவதற்காகத் தான். கஷ்டப் படாமல் அன்றாட வேலைகளைச் செய்ய கருவிகளைக் கண்டு பிடித்தான். கருவிகளின் உதவியால் விரைவாக வேலையை முடித்த மனிதனுக்கு ஓய்வு நேரம் அதிகரிக்க, அந்தப் பொழுதை போக்குவதற்குப் புதிய கருவிகளை கண்டு பிடித்தான்.( காணொளிப் பெட்டி, கணனிப் பெட்டி... ) இனி வரும் காலத்தில் அதிகமாக இன்புறவும் அனைத்து இன்பத்தையும் உணரவும் ஆசைப் படும் மனிதன் விபரீத வேலைகளை செய்யப் போகின்றான், என்பதை சிவனின் அர்த்த நாரீஸ்வரர் கதை மூலம் ஊகிக்கக் கூடியதாக உள்ளது.

அர்த்த நாரீஸ்வ்ரர் கதை என்னவென்றால், பிருங்கி முனிவர் சிவனை மட்டும் வணங்க, பார்வதி கோவத்தில் முனிவருக்கு சாபம் கொடுக்க, சாபம் பெற்ற முனிவருக்கு சிவன் உதவ, கோவித்துக் கொண்டு பார்வதி பிரிந்து செல்கின்றார் இந்த நிகழ்வால் கேதார கௌரி விரதம் உருவாகின்றது. இந்த விரதமே கணவன் மனைவிக்குள் அதீத அன்பு உருவாக்குவதற்காக என்று கூறப்படுகின்றது. விரதம் முடிந்தவுடன் சிவன் உமையை தன் உடலில் பாதி கொடுத்து ஒரு உடலில் ஆணும் பெண்ணும் இருக்கும் உருவம் பெறுகின்றார். அதுவே அர்த்த நாரீஸ்வரர்.

இதை பக்தியாய்ப் பார்த்தல் விரதம் பிடிக்கத் தோன்றும், புத்தியால்ப் பார்த்தல் எங்கள் உலகின் எதிர்காலமே தெரியும். இந்த உலகம் காமம் என்ற இச்சையில் கட்டுக் கணக்கின்றி எல்லை மீறிச் செல்கின்றது ஆணும் ஆணும் இச்சை, பெண்ணும் பெண்ணும் இச்சை, சிறுவர்கள் மீது இச்சை என்று மிருகத்தை விட மிகுந்த கொடூரமாகிவிட்டது. அதன் அடுத்த கட்டம், அனைத்து இன்பத்தையும் உணர வேண்டும் என்ற அதீத ஆசை. காமத்தில் பெண்ணுக்கு கிடைக்கும் இன்பம் ஆணுக்குக் கிடைப்பதில்லை, ஆணுக்கு கிடைக்கும் இன்பம் பெண்ணுக்குக் கிடைப்பதில்லை. அது மட்டுமல்லாமல் இன்புறும் உணர்வு இருவருக்கும் ஒரே நேரத்தில் வருவதும் கடினம் இவற்றை நிவர்த்தி செய்ய மனிதன் காணவுள்ள கண்டு பிடிப்புத் தான் ஒரு உடலில் இரு உணர்வு.



அது எப்படி சாத்தியம் என்றால், எதிர்ப்பால் உடலை உருவாக்கி அதில் காமுறும் உறுப்புக்களையும் உருவாக்கி அதன் உணர்வுகளை கதிர்வீச்சுகளாக மாற்றி அந்த கதிர்வீச்சை உணரும் கருவியை மூளையில்ப் பொருத்துவார்கள். உதாரணத்திற்கு ஆணாக இருந்தால் பெண்ணுருவை உருவாக்கி அந்த செயற்கை உடலுடன் உறவாடும் போதே செயற்கை உடலைத் தொடும் உணர்வு உறவாடும் உணர்வு ஒவ்வொன்றையும் அந்த உடல் ஆண் மூளைக்கு கதிர் வீச்சாக அனுப்பும் அந்த கதிர்வீச்சை ஆணுடலில் உள்ள கருவி உள்வாங்கி உணர்வாக மாற்றி மூளைக்கு கொடுக்கும். இப்போது அந்த ஆண் தன்னோடு தானே உறவாடும் உணர்வைப் பெறுவார். அந்த உணர்வை அதீத இன்பம் என்று நினைப்பார். இதே நிலை பெண்ணுக்கும் உருவாக்கப் படும் ஒரு ஆண் உடலை செயற்கையாக உருவாக்கி உறவாட கொடுக்கும் போது. இந்த தொழிநுட்பம் சாத்தியமாகவும் சந்தைக்கு வரவும் நீண்ட காலமெடுக்காது. அப்படி ஒரு நிலை வரும் பொது உங்களுக்கு அர்த்த நாரீஸ்வரர் நினைவு வந்தால், தமிழின் பெருமையும் தமிழனின் அறிவாற்றலையும் ஒரு கணம் போற்றுங்கள்.

கண்கெட்டபின் கதிரவனைத் தேடாது,
கண்ணுறங்கும் நேரத்திலேயே விழித்துப் பார்.







Ragu Dharmaratnam ACMA, CGMA
email: ragu.savetax@gmail.com




# ISA
## Individual Savings Accounts




ISAவின் மூலம் செய்யப்படும் எந்த முதலீட்டிற்கும் அதனுடைய allowanceற்கு மேல் முதலீடு செய்யாமல் இருக்கும் வரை வரி என்றால் செலுத்தத் தேவையில்லை. இதில் எல்லா விதமான வட்டி வருமானங்கள், dividend வருமானங்கள், capital gains என்ன அடங்குகின்றன.


### Allowance

2017/18 வரி ஆண்டிற்கான ISA allowance £20,000. தங்களுக்கு விருப்பம் இருப்பின் முழு £20,000 முதலீட்டையும் cash ISA வில் முதலீடு செய்ய முடியும். (இதற்கு முன்னைய ஆண்டுகளில் 50 வீதமான மொத்த allowance தான் cash ISAவில் முதலீடு செய்ய முடிந்தது. தற்பொழுது சிறிய கம்பனி முதலீடுகளாக சொல்லப்படும் AIM shares ஐயும் ISA முதலீட்டில் உபயோகப் படுத்தலாம்.

### Transfers

சில சமயங்களில் ஒரு முதலீட்டு நிறுவனம் மற்றைய நிறுவனங்களைவிட அதிக வட்டி கொடுப்பதால் தாங்கள் தமது ISA வை நிறுவனங்களுக்கு நிறுவனம் மாற்றம் செய்யலாம். இதன் பொழுது மிக முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய விடயம் இந்த transfer என்பது transfer ஆக மட்டுமே செயல்படுத்தப் படவேண்டும். இது closure ஆகவோ அல்லது withdrawal ஆக கருதப்பட்டால் இந்த முதலீடு tax-favoured status ஐ இழக்க நேரிடலாம். அது மட்டுமன்றி transfers மேற்கொள்ளப்படும் பொழுது சில சமயங்களில் administration fee செலுத்த வேண்டி வரலாம். Minimum account balance எவ்வளவு என்பதனையும் நீங்கள் அறிந்து இருந்தால் உபயோகமானதாகும்.

### Tax Savings




மிகக் குறைந்த அலவு முதலீடு செய்பவர்களுக்கு ISA எப்பொழுதும் முதலீட்டு இலாப வரியை (Captial /gains Tax) குறைப்பதற்கு உதவி செய்யமாட்டாது, ஏனென்றால் ஒவ்வொரு தனிநபரும் 2017/18 வரி வருடத்தில் £11,300 tax free allowance எடுப்பதற்கு உரிமை உண்டு. இதே போன்று கனவன், மனைவி இருவரும் சேர்ந்து முழுமையான சலுகையாக £22,600 ஒரு ஆண்டிற்கு எடுக்க முடியும்.

அதே நேரம் நீங்கள் பெரிய அளவில் முதலீட்டை ISA மூலம் இந்த முதலீட்டை செய்வதன் மூலம் வரிச் சலுகைகளை கீழ்குறிப்பிட்டிருக்கும் உதாரணத்தின் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

கணேசு என்பவர் higher rate வரி செலுத்துபவர். அவர் £80,000 பங்குச் சந்தையில் முதலீடு செய்து £18,000 இலாபம் அடைந்து இருக்கின்றார். இந்த பங்குச் சந்தை முதலீட்டை ISA ஊடாக முதலீடு செய்திருந்தால் எந்த விதமான வரியும் செலுத்தி இருக்க தேவையில்லை. ISA விற்கு வெளியில் முதலீடு செய்திருந்தால் £2156 வரி செலுத்த வேணடும் (£1900-£11300 x 28%) [ financial spread trading என்ற அடிப்படையில் பங்குகளை வாங்கி, விற்பனை செய்து இலாபம் அமைந்தால் அதாவது எவ்வளவு தொகை இலாபம் அடைந்திருந்தாலும் வரி செலுத்த தேவையில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது].

Cash ISA முதலீடு மற்றைய வங்கி Deposit வட்டியை விட அதிகமாக வட்டி வருமானத்தை கொடுக்கக் கூடியது. நீங்கள் ஒரு அதிஉயர்ந்த வரி செலுத்துபவராக அதாவது 40வீதம் வரி அல்லது மிக அதி உயர்ந்த வரி செலுத்துபராக அதாவது 45வீதம் வரி இருந்து அதிகளவு முதலீட்டு தொகையும் இருந்தால் நிச்சயமாக ISA முதலீடு என்பது தங்களுக்கு உரித்தானது.

முன்னைய ஆண்டுகளில் ஆகக் குறைந்தது 5 வருட maturity இருக்கும் corporate bonds, and gifts என்கவற்றில் தான் முதலீடு செய்ய கூடியதாக இருந்தது. இப்பொழுது 5 வருடத்திற்கு குறைவாக உள்ள short dated முதலீடுகளிலும் முதலீடு செய்யலாம்.

April 2016ம் முதல் Innovative Finance ISA அடிப்படையில் Peer to Peer (P2P) அடிப்படையில் கொடுக்கபடும் கடன்களுக்கு வரிச்சலுகை கொடுக்கப்படுகின்றது.



# யேர்மனி ஸ்வரராகா இசைக்கலாலயத்தின் 25 ஆவது ஆண்டுவிழா











யேர்மனி ஸ்வரராகா இசைக்கலாலயத்தின் 25 ஆவது ஆண்டுவிழா 28.10.2017 அன்று Bürger Zentrum . Bedbürger str 57.Eftal. 41469 Neuss என்னும் இடத்தில் மிக விமர்சையாக நடைபெற்றது. மங்கள விளக்கேற்றல், அகவணக்கம், வரவேற்புரை, தமிழிசை, சீர்யாழிசை, கலப்பிசை, பிரதம அதிதியுரை, சிறப்புரை, மதிப்பளிப்பு, நன்றியுரை என நிகழ்வுகள் மிக சிறப்பாக நடைபெற்றன.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வீணை விதுஷி திருமதி பிரியாந்தி ஞானேந்திரன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக அருட்தந்தை இராயப்பன் மாணிக்கம், அருட்தந்தை ரெகமி தில்லைநாதன் ஆகிய இருவரும் கலந்து சிறப்பித்தனர்.
கௌரவவிருந்தினராக லயஞான குமாரன் சங்கீதரத்தினம் சண்முகரெட்ணம் பிரணவநாதன் கலந்து சிறப்பித்தார். இவ் இசைக்கலாலயத்தில் 30 க்கு மேற்பட்ட பிள்ளைகள் சங்கீத டிப்ளோமா முடித்திருக்கின்றார்கள். இரண்டு மாணவர்கள் கர்நாடக சங்கீத அரங்கேற்றம் செய்திருக்கின்றார்கள்.

இவ் ஸ்வரராகா இசைக்கல்லூரியின் அதிபராகவும்,கர்நாடக சங்கீத ஆசிரியராகவும் இசைக்கலைமணி திருமதி தர்மினி தில்லைநாதன் கடமையாற்றுகின்றார்.
வயலின் ஆசிரியராக இசைக்கலைமணி திருமதி பாலஜோதி அமிர்தலிங்கம் கடமையாற்றுகின்றார்.

-கௌசி.சோலிங்கன்.யேர்மனி

# ரஜினியோ! கமலோ!! அரசியலுக்கு வரப்போவதில்லை?






சினிமாவில் திருத்த வேண்டியது நிறைய இருக்கும்போது ரஜினியும், கமலும் அரசியலை திருத்த கிளம்பிவிட்டார்கள் என்ற விமர்சனம் கிளம்பியுள்ளது. சிஸ்டம் சரியில்லை என்கிறார் ரஜினிகாந்த். ஆனால் அரசியலுக்கு வருகிறேன் வருகிறேன் என்கிறாரே தவிர எப்பொழுது வருவேன் என்பதை மட்டும் தெளிவாக சொல்லவே மாட்டேன் என்கிறார். அரசியலுக்கு வர தற்போதைக்கு அவசரமில்லை என்று வேறு கூறியுள்ளார். கமல் நான் அரசியலுக்கு வந்துவிட்டேன் என்கிறார். ஆனால் அது ஆன்லைனோடு நிற்கிறது.

கந்துவட்டி கொடுமையால் தயாரிப்பாளர் அசோக் குமார் தற்கொலை செய்து கொண்டுள்ளார். தமிழ் சினிமாவின் மிகப் பெரிய ஜாம்பவான்களான ரஜினியும், கமலும் அன்புச்செழியன் பற்றி இதுவரை வாய் திறக்கவில்லை. கமலாவது அன்புச்செழியன் பெயரை போடாமல் ஏதாவது ட்வீட் போட்டார். ரஜினியோ சத்தமே இல்லாமல் இருக்கும் இடம் தெரியாமல் இருக்கிறாரே என்று நெட்டிசன்கள் கலாய்க்கிறார்கள்.
ரஜினி தமிழ் சினிமாவில் அண்மை காலமாக மெகா பட்ஜெட் படங்கள் அதிகரித்து வருகின்றது. அதில் ரஜினியின் படம் தான் பட்ஜெட்டில் உச்சம் தொட்டுள்ளது. அஜீத், விஜய்யின் படங்களும் பெரிய பட்ஜெட் படங்களாக மாறிவிட்டன. அரசியல் அரசியல் சினிமா துறையில் இத்தனை ஆண்டுகளாக இருக்கும் ரஜினி, கமல் ஹாஸன் நாட்டை திருத்த அரசியலுக்கு வருகிறார்கள். ஆனால் அவர்கள் இருக்கும் சினிமா துறையில் திருத்த வேண்டியது நிறைய உள்ளது.
ரஜினியும் கமலும் இரசிகர்கள் மூலம் தமிழக மக்களின் நாடி பிடித்துப்பார்த்தார்கள். அவ்வளவுதான். சாதகமாக இருவருக்கும் இல்லை என்பது புரிந்துகொண்டார்கள். ரஜினி ஆண்டவனின் கட்டளைக்கு காத்திருக்கிறார் போர்தொடுக்க. கமல் ரஜினி அரசியலுக்கு வந்தால் அல்லது வருவது உறுதியானால் மட்டுமே அடுத்த கட்டம் நகருவார். மொத்தத்தில் இருப்பதை இழக்கவேண்டும். நேர்மையான அரசியல் நடத்தினால் இழந்தது இழந்ததுதானே!





KERVEN GMBH
Lebara play
2018
எங்கள் இனிய
நத்தார் புத்தாண்டு
வாழ்த்துக்கள்
இவற்றை HD இல்
பார்த்து மகிழலாம்
TV HD
KTV
ஆதித்யா
MUSIC
HD only Lebara play
VIJAY
IBC இசை
IBC தமிழ்
Shakthi TV GLOBAL
Raj TV
மக்கள்
CAPTAIN TV
சித்திரம்
தந்தி
Raj NEWS
J MOVIE
JAYA MAX
முரசு
Raj MUSIX
Raj DIGITAL PLUS
THARAKAI
JAYA TV
வேந்தர்
அறம்
TEMPO
MONEY TRANSFER
துரித பணமாற்றுச் சேவைக்கு
எம்மை நாடுங்கள்
www.kerven-gmbh.com
KERVEN GMBH
Rheinische Str. 64 | 44137 Dortmund
Tel: 023117721820 | 023133015738
Mob: 01738048459
E-Mail:info@kerven-gmbh.com
KERVEN GMBH
191 Rue du Faubourg 75010 Paris
Tel : 09 77 19 59 11 | Mob : 06 26 06 05 22
+33 754 11 20 20
E-Mail:info@kerven-gmbh.com
KQS GmbH IBAN: DE43 4404 0037 0212 0087 00 BIC: COBADEFFXXX
புதுப்பிக்கும் எமது வாடிக்கையாளர்கள் புதிய Set top Box V3 ஐ பெறுவதற்கு
9.99€ மட்டும் மேலதிகமாகச் செலுத்தினால் போதும்



# திருமந்திரமும் வாழ்வியலும் 23

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.

## நிலையற்ற வாழ்க்கை



மனித வாழ்க்கை நிலையற்றது எனக் கூறும் பாடல் எண் 143

"மண்ஒன்று கண்டீர் இருவகைப் பாத்திரம்
திண்ணென்று இருந்தது தீவினை சேர்ந்தது
விண்ணின்று நீர்விழின் மீண்டும்மண் ஆனாற்போல்
எண்இன்றி மாந்தர் இருக்கின்ற வாறே".

மண் ஒன்றுதான் அதனால் ஆன பாத்திரங்கள் இரண்டு. ஒரு பாத்திரம் தீயினால் சுடப்பட்டதால் உறுதி உடையதாக இருந்தது. இன்னொரு பாத்திரம் பச்சை மண் சுடப்படாமல் இருந்தது. அது மழை பெய்து தண்ணீரில் நனைந்தவுடன் கரைந்து மீண்டும் களி மண்ணோடு மண்ணாகக் கலந்துவிட்டது. இதேபோலத்தான் உலகிலுள்ள மக்கள் பலரும் உள்ளனர். அதாவது இறைஅருளை உயிர்கள் துணையாகக் கொள்ள வேண்டும் என்பதாகும்.

கூடவருவது பாவ புண்ணியமே எனக் கூறும் பாடல் எண் 144

"பண்டம்பெய் கூரை பழகி விழுந்தக்கால்
உண்டஅப் பெண்டிரும் மக்களும் பின்செலார்
கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி அவருடன் வழிநட வாதே."

நல்வினை, தீவினைகளை நுகர்வதற்கென்றே பெற்ற உடல் விழுந்துவிட்டால் (இறந்துவிட்டால்) உயிருடன் இருக்கும் போது அவ்வுடலால் பயனடைந்த மனைவி மக்கள் அந்த உயிர் போன வழியே போகமாட்டார்கள். (இறக்கமாட்டார்கள்) ஆனால் அந்த உயிர் வாழும்போது செய்த நல்லறம், மேற்கொண்ட ஒழுக்கம், புண்ணியச் செயல்கள் அந்த உயிருக்குத் துணையாகச் செல்லும். மற்ற எதுவும் கூட வராது..

உயிர் நீங்கிய பின் யாரும் கூட வாரார் என்பதைக் கூறும் பாடல் எண் 145

"ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணம்என்று பேரிட்டுச்
சூரைஅம் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பு அழிந்தார்களே."

ஊரில் உள்ள மக்கள் எல்லாம் ஒன்று கூடி ஒப்பாரி வைத்து ஓலமிட்டு அழுது புலம்பி இறந்தவரின் பெயரைக்கூடச் சொல்லாமல் பிணம் என்று சொல்லி சுடுகாட்டில் கொண்டுபோய் வைத்து எரித்துவிட்டு நீரில் முழுகிவிட்டு, இறந்தவரைப்பற்றிய நினைவையும் அடியோடு மறந்துவிடுகின்றனரே. என்ன மனிதர்கள் !, என்ன வாழ்க்கை !. இப்பாடலில் இறந்தவரின் நினைப்பை மறந்துவிடுகின்றனரே என்னும் பொருளில் மறைந்திருக்கும் இவனுக்கு இன்று, நாளை நமக்கு என்பதை மறந்துவிடுகின்றனர் என்ற கருத்தும் மறைமுகமாகக் கூறப்பட்டுள்ளதைக் காணலாம்.

போன உயிர் மீளாது எனக் கூறும் பாடல் எண் 146

"காலும் இரண்டும் முகட்டலகு ஒன்றுள
பாலுள் பருங்கழி முப்பத் திரண்டுள
மேலுள கூரை பிரியும் பிரிந்தால்முன்
போலுயிர் மீளப் புக அறியாதே"

இரண்டு கால்களாகிய சுவரின் மேல் முதுகுத் தண்டாகிய உத்தரத்தைச் சாத்தி வலுவான விலா எலும்புகள் முப்பத்திரண்டை பக்கவாட்டில் சாத்தி தசையும் சதையும் சேர்த்துப் பூசிச் செய்தமைத்த கூரை வீடு இந்த உடல். இதில் உள்ளே இருக்கும் உயிர் ஒருநாள் கபாலம் திறக்க வெளியேறி விட்டால் மீண்டும் உள்ளே வர இயலாது. அதற்கு வர வழி தெரியாது". அதாவது செத்தவர் பிழைக்கமாட்டார் என்பது பொருள். எனவே அழியும் உடல் இது என்பது கூறப்பட்டுள்ளது.

மூச்சு நின்றது முதுகாட்டுப் பிணமாக பாடல் எண் 147

"சீக்கை விளைந்த்து செய்வினை மூட்டுஇற்ற
ஆக்கை பிரிந்தது அலகு பழுத்தது
மூக்கினில் கைவைத்து மூடிட்டுக் கொண்டுபோய்க்
காக்கைக்குப் பலி காட்டிய வாறே"

சளி மிகுந்தது. முன் செய்த வினைகளின் தொடர்பு முடிவுற்ற இறுதிநாள் வந்துற்றது. உடலை விட்டு உயிர் போனது. உடல் பிணமானது. உடல் எலும்புகள் இறுக்கம் விட்டுத் தளர்ந்தன. அருகில் இருந்தவர்கள் மூக்கினில் கை வைத்துப் பார்த்தார்கள். மூச்சு ஓடவில்லை. எனவே உயிர் போய்விட்டதை உறுதி செய்து கொண்டு, உடலை மூடி எடுத்துக் கொண்டு போய் வாய்க்கரிசி போட்டு இறுதிச் சடங்குகளைச் செய்தனர்".

ஆடி அடங்கிற்று ஆனந்தம் எல்லாம் எனக் கூறும் பாடல் எண் 148

""அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக் கொடியாரொடு மந்தணம் கொண்டார்
இடப்பக்கமே இறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்து ஒழிந்தாரே"

வாய்க்குச் சுவையாக நன்கு சமைத்த உணவை உண்டு மகிழ்ந்தார். மனையாளோடு கூடிக் குலவி இன்புற்று மகிழ்ந்தார். திடீரென்று ஒருநாள் இடப்பக்கம் நெஞ்சு வலிக்கிறது என்றார். உடனே உடல் கீழே கிடக்கப் படுத்தார். பின்னர் எழுந்திருக்கவில்லை. இறந்து போனார்" இதுதான் வாழ்க்கை இதுதான் உடல் அழியக் கூடியது என்பதற்கு அடையாளம்.

மாண்டவர் மீண்டு வாரார் எனக் கூறும் பாடல் எண் 149

"மன்றத்தே நம்பி மாடம் எடுத்தது
மன்றத்தே நம்பி சிவிகை பெற்றேறினால்
மன்றத்தே நம்பி முக்கோடி வழங்கினான்
சென்று அத்தாஎன்னத் திரிந்திலன் தானே"

தலைமகன் தனது பழைய வீட்டைப் புதுப்பித்து மேல்மாடம் கட்டுவித்தான். பொற்சிவிகையிலே ஏறிப் பலரும் காணப் பவனி வந்தான். எல்லோருக்கும் புத்தாடைகள் வழங்கினான். என்ன செய்து என்ன! ஒரு நாள் திடீரென்று அவன் செத்துப் போனான். அவன் பெற்ற பிள்ளைகள் அப்பா என்று கதறி அழுதும் அவன் திரும்பி வரவேயில்லை. அவன் திரும்பி வரவேயில்லை.







# றோர்மொண்ட் (நெதர்லாந்து) தமிழ்க் கலாச்சார உதவி நற்பணி மன்றம் நடாத்திய தமிழ்ப் பாடசாலையின் வாணி விழா




படங்கள் :கஜன் நரேந்திரன்




றோர்மொண்ட் (நெதர்லாந்து) தமிழ்க் கலாச்சார உதவி நற்பணி மன்றம் 28- 10- 2017 ல் நடாத்திய தமிழ்ப் பாடசாலையின் வாணி விழா நிகழ்வுகளில் ஒரு தொகுப்பு. (படங்கள் :கஜன் நரேந்திரன்)

## அதிதிறன் சித்தி பெற்ற மாணவன்!

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையால் நடாத்தப்படும் அனைத்துலகத் தமிழ் மொழித் தேர்வு - 2013 ல் இருந்து 2017 வரை தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகள் அதிதிறனில் (EXCELLENT) சித்தி பெற்ற நெதர்லாந்து, றோர்மொண்ட் தமிழ்ப் பாடசாலை, வளர்நிலை 5 ம் ஆண்டு மாணவன் செல்வன் ஜனன் கோடீஸ்வரநாதன், 28- 10- 2017 ல் றோர்மொண்ட் தமிழ்ப் பாடசாலை நடாத்திய வாணி விழாவிலே கௌரவிக்கப்பட்டார்.



**செல்வன் ஜனன் கோடீஸ்வரநாதன்,**

அவரை நாமும் சகல கலைகளும் கற்று சீரும் சிறப்புமாக பெருவாழ்வு வாழ ஆசி கூறி அகமகிழ்கின்றோம்.திருமதி கருணாவதி பாஸ்கரன், திருமதி உஷா லோகநாதன் றோர்மொண்ட் தமிழ்ப் பாடசாலை ஆசிரியர்கள், நெதெர்லாந்து.

## கவிஞர் காசி ஆனந்தன் நறுக்குகள்

**மாடு**

ஆயிரம்
ஆயிரம்
ஆண்டுகள்
வண்டி
இழுகிறது

கொம்பை
மறந்த
மாடு.



**புரட்சி**

மாடியில் இருந்து
துப்பினால்
குடிசையில்
விழும்.
குடிசையில் நின்று
துப்பினால்
மாடியே
விழும்!

**விளம்பரம்**

குளிப்பாட்டி
அழுக்காக்குகிறான்
பெண்ணை
தொலைக்காட்சியில்!








வெற்றிமணியில் விளம்பரம் செய்ய அழையுங்கள் 0163 199 2333
புதிய விளம்பரங்களுக்கு மாதம் தோறும் 12ம் திகதிக்கு முன் தொரடர்பு கொள்ளவும்








## விவாகரத்து இன்று நேற்று வந்ததல்ல 4000 வருடங்களுக்கு முன்னரும் இருந்தது!

நல்லது கெட்டது இரண்டும் அன்றும் இன்றும் உள்ளதுதான். ஆனால் என்ன அன்று கெட்டது என்று நினைத்தவை அபூர்வமாக இருந்தது. இன்று அவை சாதரணமாகிவிட்டது.

அத்துடன் அன்று தொடர்பாடல் குறைவாக இருந்த காலம். கெட்டது வெளிச்சத்திற்கு வருவதற்கு முன்ன அதனைச் செய்தவர்கள் மாண்டுவிடுவார்கள். ஆனால் இன்று கெட்டவை வெளிசத்திற்கு வர ஒளியின் வேகத்தைவிட வேகமாக வந்துவிடும்.

இந்த காலத்தில் திருமணம் செய்துக்கொள்வதும் பின்னர் விவாகரத்து பெருவதும் சாதாரணமாகிவிட்டது. ஆனால் இந்த விவாகரத்து வழக்கம் 4,000 ஆண்டுகளுக்கு முன்னரே இருந்துள்ளது. இப்படி இன்று நம்மத்தியில் உலாவும் பல பழக்கவழக்கங்கள் அன்றும் இருந்தவைதான். சில கட்டுப்பாடுகள் கட்டிவைத்தனவே அன்றி சுயமான குணத்தின் வெளிப்பாடுகள் அல்ல அன்றை வாழ்வு என்று கூட எண்ண இடம் உண்டு.

துருக்கியில் அமைந்துள்ள காரன் பல்கலைக்கழகத்தை சேர்ந்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் திருமண விவாகரத்து பட்டையம் ஒன்றை கண்டறிந்துள்ளனர்.

இது 4,000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தம்பதியரின் விவாகரத்து பட்டையம் என கணிக்கப்பட்டுள்ளது. 4,000 ஆண்டுகளுக்கு முன் அசிரியான் பகுதியில் வாழ்ந்த லாகிப்யூம் மற்றும் அவரது மனைவி காடலாவின் விவாகரத்து பட்டையம் இது.

அந்த பட்டையத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளதாம்

"கடாலாவிற்கு குழந்தை பிறக்காததால் அவர் தனது கணவருக்கு வேறோரு திருமணம் செய்து வைக்க சம்மதம் வழங்கியுள்ளார். எனவே ஒப்பந்தத்தின் படி லகுபியும் தனது மனைவியை விவாகரத்து செய்ய முடிவு செய்தால், அவர் கடலாவிற்கு வெள்ளி வழங்க வேண்டும். கடாலா விவாகரத்து வழங்கினால் அவர் லகுபியுமிற்கு வெள்ளி வழங்க வேண்டும்" என குறிப்பிடப்பட்டுள்ளதாம்,


## பிரபாகரன் வீடு முன்பாக நள்ளிரவில் கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடினர்.

சென்னை: தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் 63-வது பிறந்த நாள் விழா உலகம் முழுவதும் தமிழர்களால் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் 63-வது பிறந்த நாள் இன்று உலகம் முழுவதும் தமிழர்களால் கொண்டாடப்பட்டு வருகிறது.

தமிழகத்தின் பல பகுதிகளிலும் பிரபாகரன் பிறந்த நாள் கொண்டாட்டங்கள் களைகட்டின.

அம்பத்தூர் தாய் தமிழ் பள்ளியில் 100 மாணவர்களுக்கு பிரபாகரன் புகைப்படத்துடன் கூடிய புத்தகப்பை ஏடுகள் வழங்கப்பட்டன. கரு. அண்ணாமலை தலைமையில் பள்ளி குழந்தைகள் பிரபாகரனுக்கு தமிழில் பிறந்த நாள் வாழ்த்துகள் பாடி கேக் வெட்டி கொண்டாடினர்.

பிரபாகரனின் பிறந்தநாளையொட்டி ஈரோட்டில் சாலையோரம் வசிக்கும் ஆதரவற்றோருக்கு நாம் தமிழர் கட்சியினர் போர்வை, ரொட்டி வழங்கினர்.



யாழ்ப்பாணத்தில் பிரபாகரன் பிறந்த ஊரான வல்வெட்டித் துறையிலும் நள்ளிரவில் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

இடித்த பிரபாகரன் வீடு முன்பாக நள்ளிரவில் ராணுவ தடையை உடைத்து கேக் வெட்டி பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. திடீரென பறந்த புலிக்கொடி பிரபாகரன் பிறந்த நாளில் திடீரென வல்வெட்டித்துறையில் புலிச் சின்னம் பொறிக்கப்பட்ட கொடி பறக்கவிடப்பட்டது.

பிரபாகரன் வீடு சீரமைப்பு வல்வெட்டித்துறையில் பிரபாகரனின் பிறந்த வீடு தமிழர்களின் புனித ,இமாக கருதபட்டது. அதை சிங்கள ராணுவம் இடித்தது. இந்த வீட்டை தமிழர்கள் இன்று சீரமைக்கும் பணியை மேற்கொண்டனர். பிரபாகரனின் இடிக்கப்பட்ட வீடு முன்பாக தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திலும் பிரபாகரன் பிறந்த நாள் விழா களைகட்டியது. பல்கலைக் கழகத்தில் புலிகளின் இலச்சினை, பிரபாகரன் படம் பொறிக்கப்பட்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

ஸ்ரீ காளிகாம்பாள் ஜோதிட நிலையம்



அனைத்து மதங்களும் வரவேற்கப்படுகின்றன..
உலகப் புகழ்பெற்ற இந்திய ஜோதிடர்.
பண்டித் சாய்ராம்
பரம்பரை பரம்பரையாக தலைமுறையில் சாய்ராம் தங்கள் கடந்த காலம் , நிகழ்காலம், மற்றும் எதிர்காலம் பற்றிக் கணித்தல், முகம்பார்த்து உங்கள் எதிர்காலம் சொல்வார்.
மற்றும் முகநாடி கைரேகை ஆகியவற்றிலும் வல்லுனர்.
for Appt.0049 (0)231 86220 828
0049(0)15163222251 and 0049(0)15218133859
"காத்திரு, எழுந்திரு இலக்கை அடையும்வரை நிறுத்த வேண்டாம்"
பண்டித் சாய்ராம் முகத்தைப் பார்த்து உங்கள் எதிர்காலத்தைக் கணிப்பார் அத்தோடு கை ரேகையும் பார்க்கப்படும், திருமணப் பொருத்தம், அதிஷ்ட இலக்கம், அதிஷ்ட மோதிரம் ஆகியவையும் செய்துதரப்படும்.
வேதத் தீர்வுகள்:
மொழிகள்: தமிழ் இந்தி ஆங்கிலம்.
1. வேலை வாய்ப்பு
2. பணப் பிரச்சினைகள்
3. காதல்
4. வியாபாரம்
5. திருமணப் பிரச்சினைகள்
6. உடல் நலம்
7. குழந்தைப் பிரச்சினைகள்
8. மன அழுத்தம்/ நோய்
9. பொறாமை
10. கல்வி
11. கணவன், மனைவி பிரச்சினை
12. வெளிநாடு
13. விவாகரத்து
14. பில்லி, சூனியம்
15. தாம்பத்யம்
16. பகை
17. நீதிமன்ற வழக்குகள்
18. துர் அதிஷ்டம்
மற்றும் உங்களது தனிப்பட்ட பிரச்சினைகள் மற்றும் பல....
100% செய்வினை மற்றும் பில்லி, சூனியத்திடமிருந்து
வாழ்நாள் முழுவதற்குமான துரித தீர்வு
08:00 am to 8.00 pm Private and confidential
Borsigstraße 68,44145 Dortmund (Borsigplatz)

உங்கள் தாய் மொழியில்....
HK Hammacher
வாகனச் சாரதி பயிற்சி நிலையம்
எமது இணையத்தளத்தை பார்க்கவும்
Fahrschule- hk- hammacher.de



ஆங்கிலம்.யேர்மன்.பிரஞ்.துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு.பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள். கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.
தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651
MPU
ASF
FES
இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

யேர்மனியில் பிராங்பேட் நகரில்
JAFFNA BASAR
உரிமையாளர்: நடராஜா சுதன்
Tel: 069 25 62 63 53
மாதம் மாதம் மாதரைக்கவரும் புத்தம் புது டிசைன்களில் தங்க நகைகள்
ஒரே இடத்தில் தரம் மிக்க தங்க நகைகள்
பயணங்களை இனிமையாக்கும் குறைந்தவிலையில் பயணச்சீட்டுக்கள் மற்றும் இலத்திற்குத் தேவையான மளிகைப் பொருட்கள்
அனைத்திற்கும் நாடுங்கள்



சித்திரம் Tv
எம்மிடம் கிடைக்கும்
Kaiserstr.64 (ladan Nr.22) 60329 Frankfurt/Main

அனைவருக்கும் எங்கள் நெஞ்சம் நிறைந்த நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள்



## அறம் படத்தில் நயன்தாராவிற்கு மதிவதனி என்று பெயர் வைத்ததன் காரணம்!

அறம் படத்தில் நயன்தாராவின் காதபாத்திரத்தின் பெயர் பெயர் மதிவதனி. இதந்தப் பெயர் வைக்க காரணம் என்னவென்று பலர் இயக்குனர் கோபியிடம் கேட்டனர். "நீங்க நினைக்கிற அதே காரணத்துக்காகத்தான் மதிவதனி என்று நயன்தாரா பாத்திரத்துக்கு வைத்தேன். ஆம்... தலைவர் பிரபாகரனின் துணைவியாரின் பெயரை விட அந்தப் பாத்திரத்துக்கு பொருத்தமான பெயர் இருக்காது. இந்த உலகில் அவரைப் போன்ற தைரியசாலியை, தியாகியைப் பார்க்க முடியுமா? இந்த இனத்துக்காக தங்கள் குடும்பத்தையே தியாகம் செய்தவரல்லவா.

தங்கையைக் காப்பாற்றும் சிறுவனுக்கு முத்து என்று பெயர் வைத்தேன். அது தன் இனத்துக்காக இன்னுயிரை ஈந்த தம்பி முத்துக்குமாரின் பெயர். முத்துக்குமாருக்கு நான் செலுத்தும் மரியாதை அது. செயற்கரிய செயலைச் செய்தவர்களைப் போற்றும் வகையில் வைத்த பெயர்," என்றார்.

## தலைவியை முதல்வராக்காமல் ஓயமாட்டார்கள் போல!




அறம் படத்தின் க்ளைமாக்ஸில், கலெக்டர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு நயன்தாரா வெளியில் வருவார். பின்னணியில், "என் மதிவதனியாகிய நான், மக்கள் அனைவருக்கும், நேர்மையானதை செய்வேன்...", என குரல் ஒலிக்கும். அதாவது பதவியை ராஜினாமா செய்துவிட்டு, மக்களிடம் போகும் நயன்தாராவுக்கு மக்கள் அதிகாரம் தருவார்கள். அவர் முதல்வராக மக்களுக்கு நல்லது செய்வார் என்று சொல்ல வருகிறார்கள இப்போது அதை மையப்படுத்தி அறம் படத்தின் 2வது பாகத்தை உருவாக்கப் போகிறார்களாம்.



இந்தப் படத்தையும் கோபி நயினார்தான் இயக்கப் போவதாகக் கூறப்படுகிறது. காட்சிகள் அனைத்தும் மிகைப்படுத்தல் இல்லாமல், மக்களை எரிச்சலூட்டுவதுபோல இல்லாமல் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தியிருக்கிறாராம் நயன்தாரா. இது இப்படி இருக்க கேரளாவில் சில பத்திரிகைகள் நயந்தராவை தமிழக மக்கள் முதல்வர்வராகவும் ஏற்றுக்கொள்வா் எனத் தூபம் இட்டுள்ளது.

தான் நடிக்கும் எந்தப் படத்தின் நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளாத நயன்தாரா, சமீபகாலமாக தனது நடவடிக்கைகளால் ஆச்சர்யப்படுத்தி வருகிறார். சில நாட்களுக்கு முன் "அறம்" படத்தின் ரசிகர்கள் பல்ஸ் பார்க்க சென்னையில் உள்ள தியேட்டர்களுக்கு விசிட் அடித்த நயன்தாரா, தற்போது "வேலைக்காரன்" படக்குழுவையும் சந்தோஷத்தில் திக்குமுக்காட வைத்துள்ளார மோகன் ராஜா இயக்கத்தில், சிவகார்த்திகேயன், நயன்தாரா நடித்துள்ள படம் "வேலைக்காரன்". இந்தப்படத்தின் ஒட்டுமொத்த படப்பிடிப்பும் முடிந்ததை அடுத்து, பிரிவு உபச்சார விழா கொண்டாடினார்கள் "வேலைக்காரன்" படக்குழுவினர். இதில் அதிசயமாக நயன்தாராவும் கலந்துகொண்டார். 18.11.2017 அன்று அவரது பிறந்தநாள் என்பதால் இந்த நிகழ்ச்சியில் அவருக்காக ஸ்பெஷலாக வரவழைக்கப்பட்டிருந்த பிறந்தநாள் கேக்கையும் வெட்டினார் நயன்தாரா.



# இரட்டை இலையும் எம்ஜிஆரும்

## இரட்டை இலை சின்னத்தை உருவாக்கித் தந்த திண்டுக்கல் மாயத்தேவர்




கேள்வி: 1973-ம் ஆண்டு திண்டுக்கல் லோக்சபா தேர்தலில் முதன் முதலில் அதிமுக போட்டியிட்டது. அப்போது எப்படி இரட்டை இலையை தேர்வு செய்தீர்கள்? பதில்: அப்போதெல்லாம் மதுரையில்தான் வேட்புமனுத் தாக்கல் செய்ய வேண்டும். அங்குதான் சின்னங்களை தேர்வு செய்ய வேண்டும். ஏழை எளிய மக்களுக்கு பயன்படக் கூடிய சின்னமாக இரட்டை இலை இருக்க வேண்டும் என்பதற்காக அதை தேர்ந்தெடுத்தார். அதை எம்ஜிஆரிடம் தெரிவித்த போது, திமுக உதயசூரியன் சின்னம் வைத்திருக்கும் போது இரட்டை இலை கருகிப் போய்விடுமே என விமர்சிப்பார்கள் என்றார்.

ஆனால் வின்ஸ்டன் சர்ச்சில் இரட்டை விரலை காண்பித்து நிரந்தர வெற்றியை பெற்றார் தலைவரே.. தாய்மார்களுக்கும் இரட்டை இலை சின்னம் பிடிக்கும் என சமாதானம் கூறப்பட்டது. இந்த விளக்கங்களை எம்ஜிஆர் ஏற்றுக் கொண்டார்.

கேள்வி:
1973-ல் திண்டுக்கல் லோக்சபா தொகுதியில் வெற்றி பெற இரட்டை இலை காரணமா? எம்ஜிஆர் செல்வாக்கு காரணமா? பதில்: எம்ஜிஆர் செல்வாக்குதான் காரணம்.. இரட்டை இலையை காண்பித்துவிட்டால் மட்டும் போதுமா? எம்ஜிஆர் செல்வாக்குதான்.

கேள்வி: தற்போது எடப்பாடி அணிக்கு இரட்டை இலை சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளதே..அதை எப்படி பார்க்கிறீங்க? பதில்: இங்க ஆட்சியா நடக்கிறது? நல்லாவே இல்லையே... இப்படியா இருக்கிறது... ஒருத்தருக்கு ஒருத்தர் ஒற்றுமை இல்லாம...கட்சியோட பெருமையையே கெடுத்துட்டாங்களே.

கேள்வி: எம்ஜிஆர்-ஜெயலலிதா ஆட்சி தற்போதைய ஆட்சி பற்றி உங்கள் கருத்து பதில்: எம்ஜிஆர் ஏழைகளுக்காகவே வாழ்ந்து மறைந்தார் இருந்த கொஞ்சம் சொத்தையும் ஏழைகளுக்கு எழுதி வைத்தார். அதற்குப் பின்னால் யாருமே அப்படி செய்யவில்லை. ஜெயலலிதா தம்முடைய ஆட்சியில் ஊழல் பெருச்சாளிகளைத்தான் வளர்த்துவிட்டார். அந்தம்மா ஆட்சி முழுவதும் ஊழல்.

கேள்வி: எம்ஜிஆர்- ஜெயலலிதா மறைவால் ஏற்பட்ட பாதிப்பு? பதில்: எம்ஜிஆரின் மறைவுதான் எங்களை மிகவும் பாதித்தது.. மிகவும் பாசமாக இருப்பார். எளிமையாக இருப்பார். ஜெ.வைப் போல திமிராக இருக்க மாட்டார்.

இவ்வாறு மாயத்தேவரும் அவரது மனைவியும் பதிலளித்தனர்.

## இலங்கை அரசின் ஒப்புதல் வாக்குமூலம்

# வீரம் செறிந்த மண்

கடந்த 18ஆம் திகதி பாராளுமன்றத்தில் அமைச்சரும் பீல்ட் மார்ஷலுமான சரத் பொன்சேகா உரையாற்றிய போது, வேலுப்பிள்ளை பிரபாகரனையும் தொட்டுச் சென்றிருந்தார். அவரது உரையின் முக்கியமான பகுதி இது.

பிரபாகரனிடம் இருந்து போரிடும் முறைகளை மாத்திரம் இராணுவம் கற்றுக் கொள்ளவில்லை. பல ஆயுதங்களின் அறிமுகமும் கூட இராணுவத்துக்கு புலிகளால் தான் கிடைத்திருந்தது.

1985ஆம் ஆண்டு ஜனவரி 9ஆம் திகதி, அச்சுவேலியில் புலிகளின் முகாம் ஒன்றை இராணுவத்தினர் சுற்றிவளைத்தனர்.

அது ஓர் ஆயுதக் களஞ்சியமாகவும் விளங்கியது. அங்கிருந்து தான், ஆர்.பி.ஜி என்ற ரொக்கட் லோஞ்சர் முதன்முதலாக இராணுவத்தின் கையில் கிடைத்தது.


அதற்குப் பின்னர் அதே ஆர்.பி.ஜிகளை பெருமளவில் இராணுவம் வாங்கிக் குவித்தது. அதுபோல பல ஆயுத தளவாடங்களை விடுதலைப் புலிகள் போரில் அறிமுகப்படுத்திய பின்னரே, இராணுவத்தினர் அதனை வாங்க முயன்றனர்.

சாம் எனப்படும் விமான எதிர்ப்பு ஏவுகணைகளையும் விடுதலைப் புலிகளுக்குப் பின்னர் தான் விமானப்படை வாங்கியது. பல்குழல் பீரங்கிகளையும் விடுதலைப் புலிகள் தான் முதன் முதலில் இலங்கையில் பயன்படுத்தத் தொடங்கினர்.

1999ஆம் ஆண்டு தொடக்கத்தில் தள்ளாடி படைத்தளம் மீதான தாக்குதலில் புலிகள் 12 குழல்களைக் கொண்ட பல்குழல் பீரங்கியை பயன் படுத்தியிருந்தனர்.

2000ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் புலிகள் நுழைந்த போது தான் இராணுவம் பல்குழல் பீரங்கிகளை வாங்கியது.

இப்படி போரில் பல ஆயுதங்களை இராணுவத்துக்கு அறிமுகப்படுத்தியவரே பிரபாகரன் தான். ஆயுத தளபாடங்களை மாத்திரமன்றி, பல போர் உத்திகளையும் பிரபாகரனிடம் இருந்தே, இலங்கை இராணுவம் பெற்றுக் கொண்டிருக்கிறது என்ற ஒப்புதல் வாக்குமூலத்தை அவர் தருவதையே அவரது பேச்சு காட்டி நிற்கிறது..





ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்
துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304- 910 9445
0177 20 16 941
Tel: 02304/ 16721 Robert koch Str.5- 58239 Schwerte

Milin Impex GmbH
Web :www.milinimpex.de
01.12.2017 முதல் 31.12.2017 வரை!
நத்தார் புத்தாண்டை முன்னிட்டு
நீங்கள் வாங்கும் மெத்தக் கொள்வனவில்
இருந்து 10% விலைக்கழிவு.
(100€ வாங்கினால் 90€ மட்டுமே!)
10% off
சில்லறை வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே இச்சலுகை!
அனைவருக்கும்
இனிய நத்தார்
புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்
2018



info@milinimpex.de
Tel: 0231 45 96 17
எமது நிறுவனம் Mo-Sa 10.00 இருந்து 18.00 வரை உங்களுக்காகத் திறந்திருக்கும்
Westendorf Str.41 - 44287 Dortmund Tel: 0231 45 96 17/ 28 Fax: 0231 18 15 288

## தீபிகாவின் தலையை வெட்டினால் 5 கோடி? உயிருடன் எரித்தால் 1 கோடி?




நடிகை தீபிகாவை உயிருடன் எரிப்பவருக்கு ரூ. 1 கோடி பரிசு: உ.பி. அமைப்பு அறிவிப்பு நடிகை தீபிகா படுகோனேவை உயிருடன் எரித்தால் ரூ. 1 கோடி பரிசு அளிக்கப்படும் என்று அகில பாரதிய ஷத்ரிய மகாசபா அமைப்பு தெரிவித்துள்ளது. சஞ்சய் லீலா பன்சாலி இயக்கத்தில் தீபிகா படுகோனே நடித்துள்ள பத்மாவதி படத்திற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

படத்தில் ராணி பத்மினியை அவமதித்துள்ளதாக குற்றம் சாட்டி சில அமைப்புகள் போராட்டத்தில் குதித்துள்ளன. போராட்டங்களினால் பத்மாவதி வெளியீட்டு திகதி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. கொடும்பாவி கொடும்பாவி அகில பாரதிய ஷத்ரிய மகாசபா அமைப்பு உத்தர பிரதேசத்தில் போராட்டம் நடத்தியது. அப்போது தீபிகாவுக்கு எதிராக கோஷமிட்டனர். மேலும் தீபிகா, பன்சாலியின் கொடும்பாவிகளை எரித்தனர். மனு மனு போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மாவட்ட கலெக்டர் அலுவலகத்திற்கு பேரணியாக சென்றனர். பத்மாவதி படத்திற்கு தடை விதிக்கக் கோரி கலெக்டரிடம் மனு அளித்தனர்.




மகாசபாவின் இளைஞர் அணி தலைவர் புவனேஸ்வர் சிங் கூறியதாவது, உயிருடன் எரித்தால் எப்படி இருக்கும் என்பதை தீபிகா உணர வேண்டும். ராணி பத்மினி செய்த தியாகம் அவருக்கு ஒருபோதும் புரியாது. தீபிகாவை உயிருடன் எரிக்கும் நபருக்கு ரூ. 1 கோடி பரிசு அளிக்கப்படும்.

படத்தை வெளியிட முன்பு எங்களுக்கு போட்டுக் காட்ட வேண்டும் என்றார். பத்மாவதி படம் ராணி பத்மினியின் வாழ்க்கை வரலாற்றை மையமாக வைத்து எடுக்கப்பட்டுள்ளது. படத்தில் ராணியை அவமதித்து வரலாற்றை திரித்துவிட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

முன்பு தீபிகாவின் தலையை வெட்டி எடுத்து வருபவருக்கு ரூ. 5 கோடி பரிசு அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதையடுத்து மும்பை போலீசார் தீபிகாவின் வீடு மற்றும் அலுவலகத்திற்கு சிறப்பு பாதுகாப்பு அளித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. புரியாத கேள்வி இப்படி தலையை வெட்டும்படி தூண்டி விடும் அமைப்புக்களின் பொறுப் பாளர்களை ஏன் கைதிசெயவதில்லை.

## மணிரத்னம் இயக்கும் புதிய படத்தில் விஜய் சேதுபதி

படத்தின் பெயர் பாரதிபாடல் வரியாகவே இருக்கும் என்று இப்போதே நம்பலாம்.



மணிரத்னம் இயக்கும் புதிய படத்தில் விஜய் சேதுபதி, ஜோதிகா, சிம்பு, அரவிந்த் சாமி, ஐஸ்வர்யா ராஜேஷ் என பலர் ஒன்றாக இப்படத்தில் இணைகிறார்கள். சிம்பு, விஜய் சேதுபதி, ஐஸ்வர்யா ராஜேஷ், ஜோதிகா உட்பட பலருக்கு இந்தப் படம் தான் மணிரத்னம் இயக்கத்தில் முதல் படம். இந்தப் படத்தின் பிந்திய தகவல்கள் திரையுலகில் கசிந்திருக்கின்றன. அப்பாவாக பிரகாஷ் ராஜ் இந்தப் படத்தில் . சிம்பு, அரவிந்த் சாமி, ஃபகத் பாசில் ஆகிய மூவருக்கும் அப்பாவாக பிரகாஷ் ராஜும் அம்மாவாக ஜெயசுதாவும் நடிக்கிறார்களாம். அரவிந்த் சாமிக்கும் அப்பாவாக நடிக்கவிருப்பதால் பிரகாஷ் கொஞ்சம் வயதானவரைப் போல கெட்டப் போடவிருப்பது தெளிவாகிறது.





இந்தப் படத்தில் விஜய் சேதுபதி போலீஸாக வலம் வரவுள்ளாராம். விஜய் சேதுபதி போலீஸாக நடித்த "சேதுபதி" திரைப்படம் நல்ல வரவேற்பைப் பெற்றது. மணிரத்னம் படத்திலும் விஜய் சேதுபதி நடிக்கும் போலீஸ் கேரக்டர் பேசப்படுமா என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

இயக்குநர் மணிரத்னமே தனது சொந்தத் தயாரிப்பு நிறுவனமான மெட்ராஸ் டாக்கீஸ் மூலம் இப்படத்தைத் தயாரிக்கவுள்ளார். 2018 தை மாதம் படப்பிடிப்பு ஆரம்பம். படத்தின் தலைப்பு நிச்சயமாக பாரதிபாடல் வரியாகவே இருக்கும் என்று நம்பலாம்.

மணிரத்தினம் படத்தில் நடித்து முடிக்க, 0.2 வந்து கலக்க அடுத்த ஜோடி விஜய்சேதிபதியும் எமி ஜக்ஷனும்தான்.







Hückelhoven நகரில்

துரித பணமாற்றுச் சேவை

**Asiatischer Super markt**

ஆசியா சமுத்திரம்

பசுமையான மரக்கறிகள்
கடல் உணவுப் பொருட்கள் - மளிகைப்பொருட்கள்
அனைத்தும்
மலிவாகவும் கிடைக்கும்.

அனைவருக்கும் இனிய நத்தார் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

Lyca TV


Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281
Handy:01520 900 90 30

R.Ragunathan
Deutschebank
IBAN: DE55 3907 0024 0474 1153 00
Bic:DEUTDEDB390
Email: mediajara@gmail.com

Asiatischer super markt
Sittard str-21
41061-Mönchengladbach
Tel: 02161- 9028388
Fax:02161- 9028399
T.Anpalagan



TEMPO MONEY TRANSFER
VALUTRANS MONEY TRANSFER
Ria Money Transfer
MoneyGram money transfer




உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு
EurAsian - Tours
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
துரித பண மாற்றுச் சேவை!
VALUTRANS MONEY TRANSFER
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Further Str. 156
41462 Neuss
Emirates
LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692
அனைவருக்கும்
இனிய நத்தார் புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்
இந்தியா- இலங்கை- விசா பெற்றுத்தரப்படும்!
info@eurasian-tours.com


புத்தம் புது வரவுகள்
முந்துங்கள்
Jasmine Silk House
13.12.2017 முதல் 16.01.2018 வரை விடுமுறைக்காகப் பூட்டப்படுகிறது, என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்..
என்றும் மலிவாக தரமாக திருமணப் பட்டுப்புடவைகள் மற்றும் பாட்டிசாறிகள், சிறுவர்களுக்கான ஆடைகள், பஞ்சாபிகள், அனைத்தும் புத்தம், புது டிசைன்களில், எம்மிடம் உண்டு. நம்மை நாடிவரக் காரணம், அதுவே!
ஜஸ்மின் சில்க் ஹவுஸ்
Tel:02102 844744 HP:0173 1937 325
Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen
அனைவருக்கும்
இனிய நத்தார் புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்


ASIA BAZAR
துரித பண மாற்றுச் சேவை!
ஆசிய, ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன் சனிக்கிழமை தோறும்
இலங்கை,இந்திய உடன் மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.இன்னும் பல...
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282
Ria Money Transfer
MoneyGram
VALUTRANS MONEY TRANSFER
உரிமையாளர்:
பா.கணேஷ்
அனைவருக்கும்
இனிய நத்தார் புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்


Stuttgart நகரில்...
Pirruntha Silks
தரம்மிக்க தங்க நகைகள் நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில் அமைந்த
சேலைகள் மற்றும் இமிற்ரேசன் நகைகள்
அனைத்திற்கும் நீண்டகாலநம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
அனைவருக்கும்
இனிய நத்தார் புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்
0170 334 4059
Ludwig str.87a - 70197 Stuttgart Tel: 0711 615 8976


அனைவருக்கும் இனிய நத்தார் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்
வீட்டுக்கடன்
1,2%
வட்டிவீதத்திலிருந்து
வீடு கட்ட, வாங்க, விற்க... நாடுங்கள்
தொடர்புகளுக்கு:
gothab Finance
Rheinische Str. 72, 44137 Dortmund
0231/53375365 0152/53961138
0231/10876361
Th. Gobinath


HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
அனைவருக்கும்
இனிய நத்தார் புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்
069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main
SARAVANAA BHAVAN
India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E. K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K. France Germany Australia South Africa Canada U.S.A.


StaR - Impex
மரக்கறி கடலுணவுப் பொருட்களின் மொத்த இறக்குமதியாளர்கள்
யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!
Asia & Afro Großhandel & Einzelhandel
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
Tel:0231 860 26 96
Fax: 0231/8602698
Mobil: 0172/2183703
e-mail: star-impex@live.de
StaR Impex :
Inh :K.Sivasubramaniam
அனைவருக்கும்
இனிய நத்தார் புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்
Tilda PURE BASMATI
Kipper Str.3 44147 Dortmund Germany